# திருமறைத்தீபம்



BIBLE LAMP
திருமறைத்தீபம்

**Issue No. 1 of 2004**
**ISBN 1173-7255**

*இக்காலாண்டுப் பத்திரிகையில் வெளிவரும் பெயர் குறிப்பிடப்படாத ஆக்கங்கள் அனைத்தும் ஆசிரியரால் எழுதப்பட்டவை. ஆசிரியரின் எழுத்துமூல அனுமதியின்றி பத்திரிகையின் எப்பகுதியையும் எவ்விதத்திலும் பிரசுரிக்கக் கூடாது.*

*ஆசிரியர்: ஆர். பாலா*
**Editor:** R. Bala
**Publisher:** Sovereign Grace Publications
**Address:** P O Box 62 159
Sylvia Park, Auckland 1006
New Zealand
**Telephone:** 64 9 272 8061
**Fax:** 64 9 272 8032
**e-mail:** blamp@ihug.co.nz
**Web site:** www. biblelamp.org

*"கொள்கைகளையும் கோட்பாடுகளையும் புறக்கணித்து, சத்தியத்தை வெளிப்படையாக எடுத்துக் கூறாத ஒரு பத்திரிகையை இலக்கியத் தடங்கல் என்றுதான் கூற வேண்டும்."*

*சி. எச். ஸ்பர்ஜன்*
1834-1892

அன்புக்குரிய வாசக நண்பர்களுக்கு இதயம் கனிந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்! இந்த இதழோடு திருமறைத்தீபம் ஒன்பது ஆண்டுகளை நிறைவு செய்கிறது. 1995ல் நண்பர்கள் சிலரின் ஊக்குவிப்பால் நூறு பிரதிகளோடு மட்டும் ஆரம்பமான பத்திரிகை இன்று தமிழ் பேசும் கிறிஸ்தவ அன்பர்கள் வாழும் நாடுகளையெல்லாம் சென்றடைந்து ஆத்மீக உணவளிக்கும் பணியைச் செய்து வருகின்றது. ஆரம்பத்திலிருந்தே சீர்திருத்த விசுவாசத்தை தமிழ் கிறிஸ்தவர்கள் மத்தியில் அறிமுகப்படுத்தி, அந்த விசுவாசத்தின் அடிப்படையில் சபை ஊழியங்கள் ஆரம்பித்து வளர ஆவன செய்வதையே குறிக்கோளாகக் கொண்டு பத்திரிகை எழுந்தது. அந்தப் பணியை இன்றுவரை தளராது செய்ய எம்மை வழி நடத்தி வருகின்ற நம் தேவனுக்கு முதற் கண் வணக்கங்கள். ஒன்பது ஆண்டுகளில் கர்த்தர் நம்மத்தியில் சாதித்துள்ள காரியங்கள் அனேகம். வேதபூர்வமான சீர்திருத்த விசுவாசத்தில் ஆர்வம் காட்டி அதன் அடிப்படையில் தங்கள் வாழ்க்கையையும், ஊழியங்களையும் அமைத்துக் கொள்ளும் பணியில் அனேகரைக் கர்த்தர் வழிநடத்தி வருவதை நாம் காண்கிறோம். இந்த எழுச்சி எமக்கு மகிழ்ச்சியையும், மனத்தாழ்மையையும் தருகின்றது. இருந்தபோதும் நல்லது நடக்கின்றபோதெல்லாம் நெஞ்சம் கலங்குகின்ற பிசாசின் வஞ்சகச் செயல்களையும் எம்மால் எண்ணிப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. சீர்திருத்தப் பாதை சத்தியமானதாகவும், இனிமையான தாகவும் இருந்த போதும் அது கல்லும் முள்ளும் நிறைந்த இடரான பாதை என்பதை நண்பர்கள் பலர் ஏற்கனவே உணர்ந்திருக்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தைக்கு முரணான பாரம்பரியங்களையும், சடங்காச்சாரியங்களையும் தூக்கி எறிந்துவிட்டு, முகத்தாட்சன்யத்துக்கும், மனிதனுக்கு துதிபாடும் போக்கிற்கும் நம் வாழ்வில் சமாதி கட்டி சபை சீர்திருத்தத்தில் ஈடுபடுவதென்பது சாதாரணமான காரியமல்ல. அது சாத்தானுக்கு பிடித்தமானதுமல்ல. இதை இந்த ஒன்பது ஆண்டுகள் நமக்குக் காட்டித் தந்திருக்கின்றன. ஆரம்பத்தில் அளவுகடந்த ஆர்வம் காட்டிப் பாதியில் பாதையைவிட்டு விலகிய சிலரை நாம் சந்தித்திருக்கிறோம். எதிர்ப்புகளை சந்திக்க அஞ்சி ஊழியம் என்ற பெயரில் வெறும் சரக்குக்கடை நடத்தப் போனவர்களையும் நாம் பார்த்திருக்கிறோம். இத்தனைக்கும் மத்தியில் சத்தியம் வீண் போகாது என்ற தளராத நம்பிக்கையோடு, அதை விற்க மறுத்து, சொந்த வாழ்க்கையிலும், ஊழியத்திலும் பல தியாகங்களைச் செய்து தொடர்ந்து சத்தியத்திற்காக உழைத்து வருகின்ற அருமை வாசக நண்பர்களுக்கு இந்த இதழைக் காணிக்கையாக வழங்குகிறேன். - ஆசிரியர்.

# பெந்தகொஸ்தே நாளின் முக்கியத்துவம்

அப்போஸ்தலர் நடபடிகள் நூலில் பெந்தகொஸ்தே தினம் மிக முக்கிய இடத்தைக் கொண்டிருக்கிறது. இயேசு கிறிஸ்துவின் வாக்குத் தத்தத்தின்படி பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய உலகளாவிய ஊழியத்தை ஆரம்பிக்க அந்நாளில் வந்திறங்கியதாக அப்போஸ்தலர் நடபடிகளில் வாசிக்கிறோம். அன்று அவர் ஆரம்பித்து வைத்த செயல்களின் அடிப்படையில் தேவனின் திருச்சபை இவ்வுலகில் நிறுவப்பட்டு வளர்ந்த வரலாறு பற்றி அந்நூல் விளக்குகிறது. பெந்தகொஸ்தே நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைக் குறித்து திருச்சபையினர் பலவிதமான கருத்துக்களைக் கொண்டிருக்கிறார்கள். அந்நாளின் நிகழ்ச்சிகளின் முக்கியத்துவத்தின் அடிப்படையிலேயே பெந்தகொஸ்தே சபை என்ற பெயரில் ஒரு சபைப்பிரிவு கடந்த நூற்றாண்டில் இந்த உலகில் தோன்றியது. அந்நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளைப் பற்றிய கருத்துக்களின் அடிப்படையிலேயே கெரிஸ்மெட்டிக் இயக்கமும் இந்த உலகில் ஆரம்பித்தது. அந்நாளையும், அந்நாளில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளையும் வைத்து மேலும் மேலும் புதிய போதனைகள் தொடர்ந்து உருவாகி வருவதை நாம் பார்க்கிறோம். ஆகவே, பெந்தகொஸ்தே தினம் சபை வரலாற்றில் ஒரு முக்கியமான தினமாகவும், இன்றும் பலரை ஈர்த்து வருகின்ற ஒரு வரலாற்று நாளாகவும் காணப்படுகின்றது.

பெந்தகொஸ்தே நாளில் எருசெலேமில் நிகழ்ந்த நிகழ்ச்சிகளை நாம் சரிவர விளங்கிக் கொண்டிருக்கிறோமா என்று ஆராய்வதே இந்த ஆக்கத்தின் நோக்கமாகும். அந்நாளின் நிகழ்ச்சிகளை வேதபூர்வமாக நாம் விளங்கிக் கொண்டிராவிட்டால் நமது ஊழியங்களின் அடித்தளமே ஆட்டம் கண்டுவிடும். பெந்தகொஸ்தே தினத்தில் நடந்த நிகழ்ச்சிகளுக்கு தங்களால் மட்டுமே சரியான விளக்கம் கொடுக்க முடியும் என்று எண்ணி இயங்கி வருகிறவர்கள் அந்நாளில் நடந்த நிகழ்ச்சிகளை வேதபூர்வமாக ஆராயத் தவறிவிட்டார்கள் என்பதை இந்த ஆக்கத்தின் மூலம் வெளிப்படுத்துவதும் எனது நோக்கமாக இருக்கின்றது.

பெந்தகொஸ்தே, கெரிஸ்மெட்டிக் சபைப்பிரிவைச் சேர்ந்தவர்கள் வேதத்தை ஆராய்ந்து படிப்பதில் அதிகம் கவனம் செலுத்துவதில்லை என்பதை நான் சொல்லி நீங்கள் தெரிந்து கொள்ள வேண்டியதில்லை. இலக்கணபூர்வமாகவும், வரலாற்று ரீதியிலும் அவர்கள் வேதத்தை ஆராய்ந்து கர்த்தரின் சித்தத்தை அறிந்து கொள்வதை தவிர்த்து, மேலெழுந்த வாரியாக வேதத்தை வாசித்து தங்களுடைய உள்ளுணர்வு தூண்டுகின்ற வழியில், சொந்த உணர்ச்சிகளுக்கு வசதிப்படும் விதத்தில் வேதப்பகுதிகளுக்கு விளக்கம் கொடுப்பதை வழக்கமாகக் கொண்டிருக்கிறார்கள். இந்தத் தவறான வேதவாசிப்பு முறையே அவர்கள் பெந்தகொஸ்தே தினத்தின் நிகழ்ச்சிகளுக்கு அளித்து வரும் தவறான விளக்கங்களுக்கு அடிப்படையாக அமைந்தது. இந்த ஆக்கத்தை வாசிக்கின்ற வாசகர்கள் தங்களுடைய சிந்தனையைப் பயன்படுத்தி நேரத்தை செலவிட்டு வேதத்தை ஆராய்ந்து பார்க்குமாறு ஆரம்பத்திலேயே கேட்டுக்கொள்கிறேன்.

சத்தியம் விடுதலை தரும் என்கிறது வேதம். போலித்தனமான போதனைகளில் இருந்து நாம் விடுதலை அடைய வேத சத்தியங்களை ஆராய்ந்து படிக்க வேண்டியது அவசியமாகிறது.

## பழைய ஏற்பாட்டில் மீட்பின் இரகசியம்

வேதம் பழைய, புதிய ஏற்பாட்டு நூல்களைக் கொண்டு அமைந்திருக்கிறது. பழைய ஏற்பாடு வரலாற்றில் மீட்பை நிறைவேற்ற வரப்போகிற இயேசு கிறிஸ்துவைப் பற்றி நமக்கு விளக்குகிறது. புதிய ஏற்பாடு வரலாற்றில் தோன்றி மீட்பை நிறைவேற்றிய இயேசு கிறிஸ்துவைப் பற்றி விளக்குகிறது. பழைய ஏற்பாடு முன்னோக்கிப் பார்க்கிறது. புதிய ஏற்பாடு பின்னோக்கிப் பார்க்கிறது. இரண்டும் ஒரே இயேசுவை நமக்கு அடையாளம் காட்டுகின்றன. இயேசு நிறைவேற்றிய இரட்சிப்பின் திட்டத்தையே வேதம் முழுவதும் நாம் வாசிக்கிறோம். இன்னொரு விதத்தில் வேதத்தை மீட்பின் வரலாறாகக் கூறலாம். அதுவே வேதத்தின் முக்கிய பொருளாக அமைந்திருக்கிறது.

கிறிஸ்து வரலாற்றில் நிறைவேற்றிய மீட்பின் திட்டங்களோடு சம்பந்தப்பட்ட முக்கியமான நாள்தான் பெந்தகொஸ்தே நாள். பெந்தகொஸ்தே தினத்தில் நடந்த நிகழ்ச்சிகள் அனைத்தும் கிறிஸ்துவின் மீட்பின் நிறைவேற்றுதலோடு தொடர்புடையவை என்பதை அனேகர் மறந்துவிடுகிறார்கள். அதுவே அவர்களுடைய தவறான போதனைகளுக்குக் காரணமாக அமைந்துவிடுகிறது. இயேசு கிறிஸ்துவின் மீட்பின் திட்டத்திற்கும் பெந்தகொஸ்தே நாளுக்கும் என்ன தொடர்பு என்பதை இனிப்பார்ப்போம்.

பழைய ஏற்பாட்டில் ஆதியாகமம் 3:15ல் முதன் முதலாக நாம் நற்செய்தியைப் பார்க்கிறோம். பழைய ஏற்பாட்டில் நற்செய்திக்கு இடமில்லை என்று கூறும் டிஸ்பென்சேஷனல் (Dispensationalism) கோட்பாட்டைப் பின்பற்றுபவர்கள் இவ்வசனத்தை ஆராய்ந்து பார்ப்பது நல்லது. இவ்வசனத்தில் கர்த்தர், பெண்ணுக்கு மகனாகப் பிறக்கவிருக்கும் தன்னுடைய குமாரன் பிசாசின் கொட்டத்தை அடக்குவார் என்று வாக்குத்தத்தம் அளிக்கிறார். இது இயேசுவையும் அவருடைய மீட்பின் செயல்களையும் விளக்கும் ஒரு வசனமாக இருக்கிறது. அச்செயல்கள் நிறைவேறுவதற்கு அடிப்படையாக பழைய ஏற்பாட்டின் வரலாறு அமைந்திருக்கின்றது. இஸ்ரவேலரைக் கர்த்தர் தெரிந்து கொண்டதும், அவர்களுக்குத் தேவனாக இருந்து அவர்களை வழிநடத்தியதும், சடங்காச்சாரியங்களை ஏற்படுத்தி அவற்றைப் பின்பற்றும்படிச் செய்ததும், தன்னைவிட்டு விலகிப்போனபோதெல்லாம் அவர்களைத் தண்டித்து மனந் திரும்பச் செய்ததும், அச்சந்ததியின் மிகுதியைத் தொடர்ந்து வரலாற்றில் இருக்கும்படிச் செய்ததும், தன்னுடைய ஒரே குமாரன் தானளித்திருந்த வாக்குத்தத்தத்தின்படி அச்சந்ததியிலிருந்து தோன்றி வரலாற்றில் மீட்பை (Redemption) நிறைவேற்ற வேண்டுமென்பதற்காகத்தான். கிறிஸ்துவின் மீட்பின் நிறைவேறுதல் பற்றிய இரகசியத்தைத்தான் பழைய ஏற்பாட்டு நூல்கள் அனைத்தும் மறைமுகமாகப் போதிக்கின்றன. தீர்க்கதரிசிகள் அனைவரும் இஸ்ரவேலருக்கு கர்த்தரின் செய்தியைக் கொண்டுவந்தபோது அச்செய்தி முழுவதிலும் கிறிஸ்துவின் மீட்பின் இரகசியம் நிறைந்திருந்தது. உதாரணத்திற்கு ஏசாயா தீர்க்கதரிசியின் பல பகுதிகளை வாசித்து பாருங்கள். அந்நூலின் சேவகனின் பாடல்கள் (Servant songs) கிறிஸ்துவின் பிறப்பையும், கல்வாரித் துன்பங்களையும் விபரித்துக் கூறி மீட்பின் இரகசியத்தை அடையாளங் காட்டு கின்றன. இதைத்தான் பவுல் அப்போஸ்தலன் எபேசியர் 3ம் அதிகாரத்தில்

விளக்குகிறார். மீட்பின் இரகசியத்தைப் பற்றிக் கூறும் பவுல், "இதைக் குறித்து முன்னமே நான் உங்களுக்கு சுருக்கமாக எழுதியிருக்கிறேன். அதை நீங்கள் வாசிக்கையில் கிறிஸ்துவின் இரகசியத்தைக் குறித்து எனக்கு உண்டாயிருக்கிற அறிவை அறிந்து கொள்ளலாம்; இந்த இரகசியம் இப்பொழுது . . . ஆவியானவராலே வெளிப்படுத்தப்பட்டிருக்கிறது போல, முற்காலங்களில் மனுபுத்திரருக்கு அறிவிக்கப்படவில்லை" என்கிறார். அதாவது, பழைய ஏற்பாட்டுக்காலங்களிலே இந்த மீட்பின் இரகசியம் மறைமுகமாக, உள்ளடக்கமாக காணப்பட்டிருந்ததேயொழிய வெளிப்படையாக விளக்கப்படவில்லை என்கிறார் பவுல். இதையேதான் எபிரேயருக்கு எழுதின நிருபத்தின் முதன் மூன்று வசனங்களிலும் வாசிக்கிறோம். பூர்வ காலங்களில் இந்த மீட்பின் இரகசியம் பங்குபங்காகவும், வகைவகையாகவும், தீர்க்கதரிசிகளின் மூலமாய்ப் பிதாக்களுக்கு தெரிவிக்கப்பட்டிருந்ததாக எபிரேய நிருப ஆசிரியர் விளக்குகிறார். இவற்றிலிருந்து பழைய ஏற்பாட்டுக் காலத்தில் நமது பிதாக்களும், கர்த்தரை நம்பினவர்களும் கிறிஸ்துவை விசுவாசித்திருந்த போதும் அவர்களுக்கு மீட்பின் இரகசியம் பங்கு பங்காகவும், வகைவகையாகவும் மறைமுகமாகவே தெரிவிக்கப்பட்டிருந்தது என்பதை விளங்கிக் கொள்கிறோம். ஆகவே பழைய ஏற்பாட்டில் சுவிசேஷம் (Gospel message) இருந்தது. விசுவாசிகள் அதைக் கேட்டுத்தான் மனந்திரும்பி வரப்போகின்ற கிறிஸ்துவை விசுவாசித்தார்கள். பழைய ஏற்பாட்டில் சுவிசேஷம் மறைமுகமாக வெளிப்படுத்தப்பட்டிருந்தபோதும் பாவிகள் கிறிஸ்துவை விசுவாசிக்க அது போதுமானதாக (sufficient) இருந்தது.

## புதிய ஏற்பாட்டில் மீட்பின் நிறைவேற்றுதலும், வெளிப்படுத்தலும்

கர்த்தரின் அனாதித் திட்டத்தின்படி மீட்பின் நாயகன் இந்த உலகில் தோன்றி மீட்பின் செயல்களை நிறைவேற்ற வேண்டியிருந்தது. அதன்படியாக இயேசு இந்த உலகில் யோசேப்புவுக்கும், மரியாளுக்கும் மகனாகப் பிறந்து தன்னுடைய பிதாவின் கட்டளைகளைப் பூரணமாக நிறைவேற்றி இறுதியில் கல்வாரி சிலுவையில் தேவனின் திட்டப்படி தனது மக்களுக்காகத் தன்னைப் பலியாகத் தந்தார். பழைய ஏற்பாட்டில் உள்ளடக்கமாக (Implicit) விளக்கப் பட்டிருந்த மீட்பின் திட்டங்கள் கிறிஸ்துவின் மூலமாக புதிய ஏற்பாட்டுக் காலத்தில் இப்படியாக நிறைவேறியது. கர்த்தரால் தெரிந்து கொள்ளப்பட்ட மனிதர்கள் அனைவரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்வதற்கான வழியை கிறிஸ்து தன்னுடைய சிலுவை மரணத்தின் மூலம் நிறைவேற்றினார்.

இயேசு தோன்றி வாழ்ந்த புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அவரே தன்னுடைய மரணத்திற்கு முன்பாக மீட்பின் இரகசியங்களை வெளிப்படையாகப் போதிக்க ஆரம்பித்ததை சுவிசேஷ நூல்களின் மூலம் அறிந்து கொள்ளலாம். நிக்கொதேமு இரட்சிப்பின் இரகசியங்களை அறிந்து கொள்ளத் தன்னைத் தேடிவந்தபோது இயேசு, பழைய ஏற்பாட்டைப் போதிக்கிறவனாக இருந்தும் நீ இதை அறியாம லிருப்பதெப்படி என்று கேட்டார். அத்தோடு நிக்கொதேமுவுக்கு விளங்கும் படியாக பழைய ஏற்பாட்டு மொழியில் மீட்பின் இரகசியங்களை விளக்கினார் (யோவான் 3). சமாரியப் பெண்ணுக்கு இயேசு கொடுத்த விளக்கமும் இதே முறையில்தான் அமைந்திருந்தது (யோவான் 4). அவரது போதனைகளைக் கேட்ட மக்கள் அவற்றின் தெளிவையும், அதிகாரத்தையும் கண்டு பிரமித்தார் கள். இதுவரை அந்தமுறையில் பரிசேயர்கள் போதிக்கவில்லை என்பதும் அவர்களுக்குப் புரிந்தது.

இயேசுவின் மலைப்பிரசங்கத்தை வாசித்துப் பாருங்கள். அங்கே பரிசேயர்களுடைய போதனைகளை இயேசு சாடி, பழைய ஏற்பாட்டிற்கு விளக்கமளித்து மீட்பின் இரகசியங்களைத் தன்னுடைய சீடர்களுக்கும் மக்களுக்கும் வெளிப்படுத்தினார். பிதாவும், நானும் ஒருவரே, என்மூலமாக அல்லாமல் ஒருவரும் பிதாவிடத்தில் போக முடியாது என்று வெளிப்படை யாகப் போதித்து இரட்சிப்பின் வழிமுறையை இயேசு விளக்கினார். நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன் என்பதை அவர் தெளிவாகப் போதிக்கத் தவறவில்லை. மறைமுகமாக பழைய ஏற்பாட்டில் விளக்கப்பட் டிருந்த மீட்பின் இரகசியங்களை மீட்பின் நாயகனான இயேசு ஆணித்தரமாக தன் காலத்தில் போதித்தார். ஆபிரகாமை உதாரணம் காட்டிப் பேசிய இயேசு யோவான் 8:58ல் ஆபிரகாமும் தன்னுடைய நாளைக் காண்பதற்கு ஆசையாக இருந்தான் என்று விளக்கினார். விசுவாசியான ஆபிரகாமுக்கு தன்காலத்தில் கிறிஸ்துவின் மீட்பின் நிறைவேற்றத்தைக் காணமுடியவில்லை. ஆனால், அது பற்றிய உண்மையை அவன் அறிந்து, உணர்ந்திருந்தான். அதை அவன் விசுவா சித்தவனாக இருந்தான். வருங்காலத்தில் நிகழப்போகும் அந்த மகா அற்பு தத்தை அவன் காணவும் ஆசை கொண்டிருந்தான் என்றார் இயேசு (யோவான் 8:56). இவ்வாறாக மீட்பின் போதனைகளை, சுவிசேஷ இரகசியங்களை இயேசு தெளிவாக அனைவரும் அறிந்துகொள்ளும்படியாகப் போதித்தார்.

மீட்பின் திட்டங்களை நிறைவேற்றிய கிறிஸ்துவுக்கு தான் இந்த உலகை விட்டுப் போகவேண்டும் என்பது தெரிந்திருந்தது. அதற்குப் பின்பு சுவிசேஷம் எங்கும் பிரசங்கிக்கப்பட்டு முழு உலகத்தாரும் மனந்திரும்ப வாய்ப்பு அளிக்கப்பட வேண்டுமென்பதும் மீட்பின் திட்டங்களில் ஒன்று. கர்த்தரால் தெரிவு செய்யப்பட்ட அனைவரும் அவரை வந்தடைய வேண்டுமென்பது அவருடைய அனாதித் தீர்மானம். பழைய ஏற்பாட்டில், புறஜாதியினருக்கும் எதிர்காலத்தில் கர்த்தரின் ஆசீர்வாதம் கிடைக்கும் என்ற உண்மை போதிக் கப்பட்டிருந்தாலும் யூதரும், புறஜாதியினரும் எந்தவித வேறுபாடுமில்லாமல் ஒரே மனிதர்களாக எதிர்காலத்தில் கருதப்படுவார்கள் என்ற உண்மை வெளிப் படையாகப் போதிக்கப்படவில்லை. புரட்சிகரமான அந்த உண்மை நிறைவேற வேண்டுமானால் இயேசு உயரெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதன் பின் சுவிசேஷம் எங்கும் அறிவிக்கப்பட வேண்டும். மிக முக்கியமாக யூதர்கள் மட்டுமல்லாமல், புறஜாதியாரும் அதைக்கேட்டு மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசிக்க வேண்டும். இது பழைய ஏற்பாட்டில் பெருமளவில் நிகழ்ந்திராத ஒன்று. அங்கும் இங்குமாக பழைய ஏற்பாட்டில் புறஜாதியார் கர்த்தரை அறிந்து கொண்டபோதும், ஆவியானவர் இஸ்ரவேலின் மத்தியிலேயே பெருமளவுக்கு கிரியை செய்தவராக இருந்தார். ஆனால், புதிய ஏற்பாட்டில் இது மாறி சகல ஜாதியினரும் கிறிஸ்துவின் தலைமையில் ஒரே குடையின் கீழ் கொண்டு வரப்படவேண்டிய ஊழியம் ஆரம்பமானது. பழைய ஏற்பாட்டில் மறை முகமாகப் போதிக்கப்பட்டிருந்த இந்த சுவிசேஷ இரகசியம் புதிய ஏற்பாட்டுக் காலத்திலேயே நிறைவேற வேண்டியிருந்தது. ஒருவரையொருவர் வெறுத்து வந்த இனங்களான யூதர்களும், புறஜாதியாரும் கிறிஸ்துவுக்குள் ஒன்று கூடும் அற்புதம் கிறிஸ்துவின் மரணத்திற்குப் பிறகு இந்த உலகில் ஆரம்பமாகவிருந்தது. அந்த அற்புதத்தை நிறைவேற்றிவைக்க ஆவியானவர் வருகை தர வேண்டியவராக இருந்தார். இதையே சுவிசேஷ இரகசியம் (Gospel mystery) என்று பவுல் அப்போஸ்தலன் பல இடங்களில் புதிய ஏற்பாட்டில் வர்ணித்திருக்கிறார் (எபேசியர் 3:1-13).

*இந்த நாளுக்காகத்தான் இயேசு தன்னுடைய பன்னிரு சீடர்களையும் தயார் செய்தார். அவர்களை அப்போஸ்தலர்களாக நியமித்து சுவிசேஷத்தை சகல ஜாதிகளுக்கும் பிரசங்கிக்கும் பொறுப்பை அளித்தார் (மத்தேயு 28:18-20). அவர்கள் மேல் ஆவியை ஊதி அவர்களுக்கு வல்லமையையும் அளித்தார். இதுவரை நிகழ்ந்திராதவகையில் சுவிசேஷ இரகசியம் அவர்கள் மூலமாக முழு உலகத்திற்கும் அறிவிக்கப்படவிருந்தது. யூதர்கள் ஆச்சரியப்படும் வகையில் மீட்பின் பலன்களை பலரும் அறிந்து கிறிஸ்துவை விசுவாசித்து ஆபிரகாமின் புத்திரர்களாக மாறும் அற்புதம் நிகழவிருந்தது. இது நிகழ முதலில் இயேசு உயரெடுத்துக் கொள்ளப்பட வேண்டும். அதற்கு முன்பாக இயேசு தன்னுடைய சீடர்களை எருசலேமில் போய் தங்கியிருக்கும்படியாகக் கட்டளை யிட்டார். அப்படி அவர்கள் தங்கியிருக்கும் காலத்தில் ஆவியானவர் தன்னு டைய உலகளாவிய ஊழியத்தை ஆரம்பிக்க வரவிருப்பதை அவர்களுக்குத் தெரிவித்தார். ஆவியானவர் அவர்களுக்குத் துணையாக இருந்து தான் போதித்த அனைத்தையும் அவர்களுடைய நினைவுக்குக் கொண்டு வருவார் என்பதையும் விளக்கினார் (யோவான் 16:7-15). அத்தோடு ஆவியானவர் அவர்களுடைய ஊழியத்திற்குத் தேவையான அனைத்து வல்லமையையும் அளிப்பார் (அப்போஸ். 1:8) என்றும் இயேசு கூறியிருந்தார். இப்படியாக நிகழ விருந்த காரியங்களின் காரணமாகத்தான் பெந்தகொஸ்தே நாள் வரலாற்றில் முக்கியத்துவம் பெறுகிறது.*

## பெந்தகொஸ்தே நாளின் முக்கியத்துவம்

*இதுவரை நாம் பார்த்து வந்துள்ள உண்மைகளுக்கும் பெந்தகொஸ்தே நாளுக்கும் முக்கிய தொடர்பிருப்பதை சிந்திக்கும் வாசகர்கள் உணர்ந்திருப் பீர்கள். வேதம் அறியாதவர்கள் பெந்தகொஸ்தே நாளை அந்நிய பாஷை பேசுவதற்கும், அற்புதங்கள் செய்வதற்கும் வழி ஏற்படுத்தித் தந்த நாளாக மட்டுமே பார்க்கிறார்கள். வேதத்தை ஆராயாது விளக்கமளிக்க முற்படும்போது இந்தத் தவறுகள் நேர்வது சகஜம். ஆனாலும் பெந்தகொஸ்தேகாரர்களும், கெரிஸ்மெட்டிக் கூட்டத்தாரும் இதுவரை தந்து வந்துள்ள விளக்கங்கள் எத்தனை ஆபத்தானது என்பதை பெந்தகொஸ்தே நாளின் வரலாற்று முக்கியத்துவத்தை ஆராயும்போது புரிந்து கொள்ளலாம்.*

*பெந்தகொஸ்தே நாளின் முக்கியத்துவத்தை ஆராய்கின்றபோது நான்கு உண்மைகளை நாம் மனதில் கொள்ள வேண்டும். இந்த உண்மைகளை மேலும் விளக்கமாக நாம் அப்போஸ்தலர் நடபடிகளை ஆராய்வதன் மூலம் தெரிந்து கொள்ளப் போகிறோம்:*

*1. பழைய ஏற்பாட்டில் வெளிப்படையாக போதிக்கப்படாமலிருந்த மீட்பின் இரகசியம் பெந்தகொஸ்தே நாள் முதல் வெளிப்படையாக பிரசங்கிக்கப் பட்டதால் அந்நாள் வரலாற்று முக்கியத்தும் பெறுகிறது.*

*2. பழைய ஏற்பாட்டில் வெளிப்படையாக போதிக்கப்படாது, உள்ளடக்கமாக மட்டும் காணப்பட்ட சத்தியமான, யூதர்களும் புறஜாதியாரும் சமமான முறையில் கிறிஸ்துவில் ஒன்றுகூடிவருவது* (Jewish and Gentile christians together in one body under Christ) *பெந்தகொஸ்தே நாளில் ஆரம்பித்து வைக்கப்பட்டதால் அந்நாள் வரலாற்று முக்கியத்துவம் அடைகிறது.*

*3. மேலே நாம் பார்த்த இரண்டு காரியங்களும் சுவிசேஷ பிரசங்கத்தின் மூலம் நடைபெறுவதை உலகளாவிய முறையில் ஆரம்பித்து வைக்க*

ஆவியானவர் பெந்தகொஸ்தே நாளில் வருகை தந்ததால் அந்நாள் வரலாற்று முக்கியத்துவம் அடைந்தது.

4. பெந்தகொஸ்தே நாளில் ஆவியின் வருகையின் மூலமாகவும், சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலமாகவும் திருச்சபை ஓர் நிறுவனமாக இந்த உலகில் இதுவரை இல்லாதவகையில் யூதர்களையும், புறஜாதியாரையும் கொண்டு ஆரம்பித்து வைக்கப்பட்டதாலும் அந்நாள் வரலாற்று முக்கியத்துவம் அடைகிறது. (பழைய ஏற்பாட்டில் சபையைப் பார்க்கவே முடியாது என்ற டிஸ்பென்சேஷனலிசப் போதனை முழுத்தவறு. பழைய ஏற்பாட்டில் சபை நிச்சயம் இருந்தது. அப்போஸ். 7:38; எபிரே. 2:12. புதிய ஏற்பாட்டில் நிறுவப்பட்ட சபைக்கும் அதற்கும் தொடர்பிருந்தது. ஆனால், புதிய ஏற்பாட்டில் அமைக்கப் பட்ட சபை மீட்பின் வரலாற்றில் ஒரு புரட்சிகரமான புதிய அத்தியாயத்தை ஆரம்பித்து வைத்தது. மத்தேயு 16:18.)

பழைய ஏற்பாட்டிற்கும், புதிய ஏற்பாட்டிற்கும் இடையில் நின்று மேலே நாம் பார்த்த நான்கு உண்மைகளும் நிறைவேறிய நாளாக பெந்தகொஸ்தே நாள் இருந்தது. இதனால்தான் பெந்தகொஸ்தே நாள் கிறிஸ்துவின் மீட்பின் வரலாற்று நிறைவேற்றத்தில் முக்கிய பங்கை வகிக்கிறது. கர்த்தருடைய மீட்பின் திட்டங்கள் படிப்படியாகவே வரலாற்றில் நிகழ்ந்து வேதத்திலும் வெளிப்படுத் தப்பட்டுள்ளன. பழைய ஏற்பாட்டில் அத்திட்டங்கள் அனைத்தும் உள்ளடக்க மாகவே தரப்பட்டிருந்தன. புதிய ஏற்பாட்டுக் காலத்தில் அவை நிறைவேறின. பழைய ஏற்பாடு முடிவடைந்து புதிய ஏற்பாட்டில் மீட்பின் திட்டங்கள் வரலாற்று ரீதியில் நிறைவேறி, உலகளாவிய முறையில் ஜனங்கள் மீட்பின் பலன்களை வெளிப்படையாகவும், நடைமுறையில் அனுபவபூர்வமாகவும் அறிந்துகொள்வதை ஆரம்பித்து வைத்த நாளே பெந்தகொஸ்தே நாள்.

## பெந்தகொஸ்தே நாளில் நடந்ததென்ன?

பெந்தகொஸ்தே நாளில் நடந்த நிகழ்ச்சிகளை முறையாக விளங்கிக்கொள்ள அப்போஸ்தலர் நடபடிகளின் முதலிரண்டு அதிகாரங்களையும் அவை அமைந்து காணப்படும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில், அதாவது வரலாற்று, இலக்கண ரீதியில் முறையாக ஆராய்வது அவசியம். இந்த இரு அதிகாரங்களையும் இனி விளக்கமாகப் பார்ப்போம்.

### 1. சீடர்களுக்கு கிறிஸ்து தந்த கட்டளையின் பொருள் (அப்போஸ். 1:4-8)

#### அ. ஆவியின் வருகைக்காக எருசலேமில் காத்திருங்கள் (அப்போஸ். 1:5)

அப்போஸ்தலர் நடபடிகள் முதல் அதிகாரத்தில் இயேசு கிறிஸ்து ஏற்கனவே தன்னுடைய சீடர்களை எருசலேமுக்குப் போய் பிதாவின் வாக்குத்தத்த நிறைவேறுதலுக்காகக் காத்திருக்கும்படிக் கட்டளையிட்டிருந்தார் என்று வாசிக்கிறோம் (லூக்கா 24:49; அப்போஸ். 1:5). அத்தோடு அவ்வாறு அவர்கள் எருசலேமில் தங்கியிருக்கும்போது பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்வார்கள் என்றும் கூறியிருந்தார் (யோவான் 14:16; 26; 16:7, 8; அப்போஸ். 1:4). பெந்தகொஸ்தேகாரர்கள் அப்போஸ். 1:5ஐ வைத்து ஆவியானவரைக் குறித்த ஒரு தவறான போதனையை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இயேசு தன்னுடைய சீடர்களை எருசலேமில் ஆவியானவருடைய வருகைக்காகக் காத்திருக்கும்படி கூறியதாக இவ்வசனம் கூறுகிறது. இவ்வசனத்தில் 'காத்திருங்கள்' (wait) என்ற வார்த்தைக்குப் பொருள்

*‘தங்கியிருங்கள்’ என்பதுதான். ‘காத்திருங்கள்’ என்ற வார்த்தை அதைத் தவிர வேறு எந்த அர்த்தத்திலும் கிரேக்க மொழியில் பயன்படுத்தப்படவில்லை. ஆனால், பெந்தகொஸ்தேகாரர்கள் சீடர்கள் வெறுமனே காத்திருக்காமல் ஆவியானவரின் வருகைக்காக உபவாசமிருந்து உறுதியாக ஜெபம் செய்தார்கள் என்று விளக்கமளித்து ஆவியின் வருகைக்காக ‘காத்திருப்புக் கூட்டம்’* (Tarrying meeting) *வைக்கும் வழக்கத்தை ஏற்படுத்தி யிருக்கிறார்கள். இந்தக் காத்திருப்புக் கூட்டத்தில் கலந்து கொண்டு உபவாசித்து ஜெபிப்பதன் மூலம் கிறிஸ்தவர்கள் ஆவியின் ஞானஸ்நானத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்பது அவர்களுடைய போதனை.*

*ஆனால், இயேசு தன்னுடைய சீடர்கள் ஆவியின் வருகைக்காக எதையும் செய்யவேண்டுமென்று ஒருபோதும் கட்டளையிடவில்லை. எருசலேமுக்குப் போன சீடர்களும் அப்படியாக ஆவியின் வருகைக்காக விசேடமான எந்த ஜெபத்தையும் செய்ததாக நாம் அப்பகுதியில் வாசிப்பதில்லை. அவர்கள் எருசலேமுக்குப் போய் ஒருமனப்பட்டு ஜெபத்திலும் வேண்டுதலிலும் தரித்திருந்ததாக 1:14 வசனம் கூறுகிறது. இதை வைத்துக் கொண்டுதான் பெந்தகொஸ்தேகாரர்கள் காத்திருப்புக்கூட்ட ஜெபத்தை நியாயப்படுத்து கிறார்கள். ஆனால், இந்த வேதப்பகுதியில் அந்த வசனத்திற்கு என்ன பொருள் என்பதை அவர்கள் நிதானமாக ஆராய்ந்து பார்க்கத் தவறிவிட்டார்கள். எருசலேமுக்குப் போன சீடர்கள் தங்குவதற்கு வசதியாக ஒரு இடத்தைப் பார்த்து அங்கே மேல்வீட்டில் தங்கினார்கள் என்று 1:13ம் வசனம் கூறுகிறது. அப்படி இருந்த காலங்களில் அவர்கள் சகஜமாக எல்லாக் கிறிஸ்தவர்களும் செய்வது போல் தங்களுடைய நேரத்தை ஜெபத்தில் கழித்தார்கள். அதாவது, வேத வசனங்களை ஒருவரோடொருவர் கலந்துகொண்டு ஜெபம் செய்தார்கள். அன்று அவர்கள் முக்கியமான வேறு ஒரு காரியத்தையும் ஒருமனப்பட்டு செய்தார்கள் என்று வாசிக்கிறோம். அப்போஸ்தலர்களில் பன்னிரெண்டாம் நபரை அவர்கள் தெரிவுசெய்தார்கள். அதை அவர்கள் நிச்சயம் ஜெபத்துடன் தான் செய்திருப்பார்கள். மிகுதியான நேரங்களில் அவர்கள் எருசலேம் ஆலயத்துக்கு விஜயம் செய்திருப்பார்கள். வேறு எத்தனையோ காரியங்களையும் நிச்சயம் செய்திருப்பார்கள். அன்று அவர்கள் செய்த எல்லாக் காரியங்களையும் நமக்கு விளக்குவது லூக்காவின் நோக்கமல்ல. ஆனால், அவர்கள் ஆவியின் வருகைக்காகத்தான் முழுநாளும் கூடியிருந்து உபவாச ஜெபம் செய்தார்கள் என்று 1:5க்கு விளக்கம் கொடுப்பது முழுத்தவறு. அந்தப்பகுதியில் அப்படியான ஒரு விளக்கம் கொடுக்கப்படவில்லை.*

*அத்தோடு 2:1ல் சீடர்கள் ஒருமனப்பட்டு பெந்தகொஸ்தே நாளில் ஓரிடத்தில் கூடியிருந்தபோது ஆவியானவர் வருகை தந்தார் என்று வாசிக்கிறோம். சீடர் கள் அந்நாளில் மற்ற நாட்களில் செய்ததுபோல் ஐக்கியத்தில் கூடிவந்திருந்தார் களே தவிர ஆவியின் வருகைக்காக ஜெபக்கூட்டம் நடத்தவில்லை. ‘ஒருமனப் பட்டு கூடியிருந்தார்கள்’* (met in a place with one mind) *என்பதற்கு ஜெபத்தில் கூடிவந்தார்கள் என்று விளக்கம் கொடுப்பது முழு முட்டாள்தனமாகும். அதற்கு அப்படியொரு விளக்கம் வேதத்தில் கொடுக்கப்படவில்லை. ஒருமனப் படாமல் பலர் எப்படி ஓரிடத்தில் கூடிவர முடியும்? ஆகவே, இந்த இரண்டு அதிகாரங்களும் ஆவியின் வருகைக்காக சீடர்கள் காத்திருப்புக் கூட்டம் நடத்தி னார்கள் என்ற போதனையை எந்தவிதத்திலும் நியாயப்படுத்துவதாக இல்லை.*

*அதுமட்டுமல்லாமல், இயேசு சீடர்களைப்பார்த்து ஆவியின் வருகைக்காக*

எருசலேமில் காத்திருங்கள் என்று மட்டும்தான் சொன்னார். அதாவது ஆவியானவர் எப்போது வருவார் என்பதை அவர் சீடர்களுக்கு தெரிவிக்க வில்லை. ஆவியின் வருகைக்காக அவர்கள் எதையும் செய்ய வேண்டும் என்றும் அவர் எதிர்பார்க்கவில்லை. இன்னுமொரு உண்மையையும் கவனிப்பது அவசியம். அதாவது, ஆவியானவர் காற்று வீசுவதுபோல் தாம் நினைத்த வேளையில் வருவார், கிரியை செய்வார் என்று ஏற்கனவே இயேசு நிக்கொதேமுவுக்கு யோவான் 4ல் கூறியிருப்பதை நினைவு கொள்ளுங்கள். அதன்மூலம் ஆவியானவர் எந்நேரத்தில் எப்படி வரவேண்டும் என்று ஒருவரும் தீர்மானிக்கவோ அல்லது ஆவியானவருக்குக் கட்டளையிடவோ முடியாது என்று இயேசு விளக்கியுள்ளார். எனவே, ஆவியானவரின் வருகைக்காக சீடர்கள் எருசலேமில் எந்தவொரு முயற்சியிலும் ஈடுபடவில்லை என்பதுதான் அப்போஸ்தலர் நடபடிகளின் முதலிரண்டு அதிகாரங்களும் போதிக்கும் உண்மை.

**ஆ. பூமியின் கடைசிபரியந்தமும் எனக்கு நீங்கள் சாட்சிகளாயிருப்பீர்கள் (அப்போஸ். 1:8)**

எருசலேமைவிட்டுப் போகாமல் ஆவியின் வருகைக்காக காத்திருங்கள் என்று இயேசு சொன்னதன் அர்த்தம் சீடர்களுக்கு விளங்கவில்லையென்பதை அவர்களுடைய பதில் உணர்த்துகிறது. இயேசு இஸ்ரவேலுக்கு ராஜாவாக இருந்து அதனை மறுபடியும் உலகில் வல்லமையுள்ள நாடாக மாற்றப் போகிறார் என்று அவர்கள் தப்புக்கணக்குப் போட்டார்கள் (1:7). இயேசு அதற்கு நேரடியாக பதிலளிக்காமல் 1:8ம் வசனத்தில் இன்னுமொரு முக்கியமான உண்மையை அவர்களுக்கு வெளிப்படுத்தினார். இந்த வசனத்தில் இயேசு போதித்த சத்தியம் பெந்தகொஸ்தே நாளின் முக்கியத்துவத்தை நமக்கு உணர்த்துகிறது. இந்த வசனத்தை பெந்தகொஸ்தேகாரர்கள் மட்டுமல்லாமல் சுவிசேஷ கிறிஸ்தவர்களும் தவறான முறையில் விளங்கிக் கொண்டிருக் கிறார்கள். இந்த வசனத்தில் இயேசு, "பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலனடைந்து, எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசிபரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள்" என்றார். இந்த வசனத்தை இனி கவனமாக ஆராய்வோம்.

இயேசு முதலில் பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வருவார் என்று சொன்னார். அதாவது, அவர் தான் நினைத்த வேளையில், உங்களுடைய எந்தவிதமான உதவிக்கோ, செயல்களுக்கோ அவசியமில்லாமல், நீங்கள் எதிர்பார்த்திராத வேளையில் வருவார் என்று சொன்னார். இதன் மூலம் ஆவியின் வருகைக்காக விசுவாசிகள் ஜெபித்துக் காத்திருக்க வேண்டிய அவசியமில்லை என்பதை இயேசு தெளிவாக விளக்குகிறார். விசுவாசிகள் ஜெபத்தின் மூலமாக ஆவியின் வருகையைத் தீர்மானிக்க முடியாது; அவரைக் கட்டுப்படுத்த முடியாது என்பதை இதன் மூலம் சந்தேகமற விளங்கிக் கொள்ள முடிகிறது.

இரண்டாவதாக, ஆவியானவர் வருகிறபோது சீடர்களுக்கு வல்லமையைத் தருவார் என்று இயேசு சொன்னார். இங்கே பயன்படுத்தப்பட்டுள்ள வார்த்தை power என்பதாகும். இதை வைத்துக் கொண்டு அது எந்தவிதமான வல்லமை என்பதை பெந்தகொஸ்தேகாரர்கள் தாங்களே தீர்மானித்துக் கொள்கிறார்கள். ஆனால், இந்த வசனமே அந்த வல்லமை எப்படிப்பட்டது, அது எதற்காக அளிக்கப்படவிருக்கிறது என்பதை தெளிவாக விளக்குகிறது. முழுவசனத்தையும் அது தரப்பட்டிருக்கும் சந்தர்ப்பத்தின் அடிப்படையில் வாசிக்கும்போதே

அதன் மெய்யான அர்த்தத்தை விளங்கிக் கொள்ள முடியும் என்பது பெந்தகொஸ்தேகாரர்களுக்குப் புரிவதில்லை. இயேசு இந்த வசனத்தின் மூலம் வரப்போகின்ற ஆவியானவர், சீடர்கள் தனக்கு சாட்சியாக பூமியின் கடைசி பரியந்தமும் இருக்கும்படியான வல்லமையைத் தருவார் என்றே சொன்னார். அதாவது, இயேசுவின் சுவிசேஷத்தை உலகெங்கும் எடுத்துப் பிரசங்கிப்ப தற்கான வல்லமையை ஆவியானவர் சீடர்களுக்குத் தருவார் என்பதுதான் இதற்கு சரியான விளக்கம். மீட்பின் இரகசியத்தையும், கிறிஸ்துவின் பரிகாரப் பலியையும், அவர் இலவசமாகக் கொடுக்கும் இரட்சிப்பையும் ஒரு மனிதன் ஆவியின் பலத்தால் அல்லாமல் பிரசங்கிக்கவே முடியாது. பவுல் அப்போஸ் தலன் தெசலோனியருக்கு எழுதிய நிருபத்தில், எங்கள் சுவிசேஷம் உங்களிடத் தில் வசனத்தோடு மாத்திரமல்ல, வல்லமையோடும், பரிசுத்த ஆவியோடும் . . . வந்தது (1 தெசலோ. 1:5) என்று எழுதியபோது, இங்கே நாம் அப்போஸ். 1:8ல் வாசிக்கும் ஆவியின் வல்லமையைத்தான் குறிப்பிடுகிறார். ஆவியின் வல்லமையில்லாமல் ஒருவரும் கிறிஸ்துவுக்கு சாட்சியாக இருக்க முடியாது. கிறிஸ்துவை பிரசங்கத்தில் மேன்மைப்படுத்துவதே அவருக்கு சாட்சியாக இருக்கும் செயல். நீதிமன்றத்தில் ஒருவருக்கு துணையாக சாட்சியமளித்து அவருடைய நீதியை நிலைநிறுத்துவதற்கு ஒப்பானது இயேசுவுக்கு சாட்சிய மளிப்பது. அதைச் செய்ய ஆவியின் வல்லமை அவசியம். இதைத்தான் அப்போஸ். 1:8 விளக்குகிறது. இது தெரியாமல் ஆவியானவர் அந்நிய பாஷை பேசவும், அற்புதம் செய்யவும் எல்லோருக்கும் வல்லமை தருவார் என்ற தவறான போதனைகளை பெந்தகொஸ்தேகாரர்கள் அளித்து வருகிறார்கள்.

**இ. நீங்கள் பரிசுத்த ஆவியினாலே ஞானஸ்நானம் பெறுவீர்கள் (அப்போஸ். 1:4)**

இந்த வசனத்தையும், அப்போஸ்தலர் இரண்டாம் அதிகாரத்தில் பெந்தகொஸ்தே நாளில் நிகழ்ந்தவற்றையும் வைத்துத்தான் இருபதாம் நூற்றாண்டின் ஆரம்பப்பகுதியில் பெந்தகொஸ்தேகாரர்களின் 'பரிசுத்த ஆவியின் ஞானஸ்நானம்' என்ற போதனை உருவானது. அதாவது, விசுவாசி கள் தங்கள் வாழ்க்கையில் வல்லமையான கிறிஸ்தவ வாழ்க்கையை வாழ பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமென்பதே அந்தப்போதனை. விசுவாசிகள் ஏற்கனவே ஆவியானவரை முழுமையாகப் பெற்றுக்கொண்டிருந்த போதும் இந்தவகையில் ஆவியின் அபிஷேகத்தைப் பெறாவிட்டால் வாழ்க்கையில் வெற்றிகரமாக கிறிஸ்துவை மகிமைப்படுத்த முடியாதென்கிறது இந்தப் போதனை. அத்தோடு ஆவியின் அபிஷேகத்துக்கு அடையாளமாக அந்நிய பாஷையும் பேச வேண்டும் என்கிறார்கள் பெந்த கொஸ்தேகாரர்கள். இது, இரண்டாம் ஆசீர்வாதப் போதனை (Second Blessing) என்று வேதவல்லுனர்களால் வர்ணிக்கப்படுகின்றது. (கிறிஸ்தவ வரலாற்றில் அதற்கு முன்பு இத்தகைய போதனை இருக்கவில்லை என்பதை வாசகர்கள் சிந்தித்துப் பார்க்க வேண்டும். சீர்திருத்தவாதிகளும், தூய்மைவாதிகளும் அத்தகைய போதனைகளை ஒருபோதும் போதிக்கவில்லை.) ஆனால், இந்த வசனத்தில் இயேசு சொன்னதுதான் என்ன? என்பதை நாம் ஆராய்வது அவசியம். இயேசுவின் வார்த்தைகளை முறையாக விளங்கிக்கொள்ள வேண்டு மானால், நாம் இந்த வசனத்தை இயேசு இந்தப்பகுதியில் 8ம் வசனம்வரை சொன்ன அத்தனை காரியங்களின் அடிப்படையிலும் விளங்கிக் கொள்ள வேண்டும். இந்த வசனத்திற்கு மட்டும் தனிப்பட்டவிதத்தில் விளக்கமளிக்க முடியாது. அப்படிச்செய்வது வேதத்தைத் திரித்துப் போதிப்பதில் போய் முடியும்.

*இயேசு ஏற்கனவே, பரிசுத்த ஆவியானவர் வரும்போது சீடர்கள் உலகம் முழுவதும் சாட்சிகளாக இருக்கும்வகையில் அவர்களுக்கு வல்லமையைத் தரவிருப்பதாக அறிவித்திருக்கிறார் (லூக்கா 24:47-49; அப்போஸ். 1:8). அதற்கும் இந்த வசனத்துக்கும் தொடர்பு இருக்கிறது. இயேசு பரிசுத்த ஆவியினால் ஞானஸ்நானம் செய்வார் என்று யோவான் ஸ்நானன் ஏற்கனவே தன்காலத்தில் பிரசங்கம் செய்திருப்பதை உதாரணம் காட்டி இயேசு சீடர்களுக்கு இவ்வசனத்தில் நினைவூட்டுவதைப் பார்க்கிறோம் (மத்தேயு 3:11; லூக்கா 3:16). யோவான்ஸ்நானன் பிதா அளித்துள்ள வாக்குத்தத்தத்தின்படி பெந்தகொஸ்தே நாளில் நடக்கவிருப்பதையே தன்காலத்தில் போதித்திருந்தான். யோவானின் போதனையின் உள்ளர்த்தத்தை சீடர்கள் புரிந்துகொண்டிராத போதும் அதுபற்றி அறிந்திருந்தார்கள். இயேசுவும் இங்கே அதை நினைவுபடுத்துகிறார்.*

*இந்த வசனத்தை 1:8 டுடன் இணைத்துப் படித்தே நாம் புரிந்துகொள்ள வேண்டும். அப்படிப் பார்க்கிறபோது விசுவாசிகள் தங்கள் வாழ்க்கையில் பரிசுத்தத்தில் உயரவும், கிறிஸ்துவை அதிகம் மேன்மைப்படுத்தவும் இரண்டாவது ஆசீர்வாதமாக இயேசு பரிசுத்த ஆவியை அளிக்கப்போவதாக இந்த வசனங்கள் நிச்சயம் போதிக்கவில்லை. ஏற்கனவே விசுவாசிகளாக இருந்த சீடர்கள் சுவிசேஷத்தை தைரியத்தோடு எடுத்துப் பிரசங்கித்து சபை அமைப்பதற்கு பரிசுத்த ஆவியின் வரலாற்று வருகையின்* (Historical arrival) *மூலம் வல்லமையடைவார்கள் என்று மட்டுமே இயேசு இங்கே விளக்குவதைக் காணலாம். அதற்கு மேல் இந்த வசனங்களுக்கு விளக்கம் கொடுக்க முயல்வது இலக்கண வரம்பை மீறி விளக்கம் கொடுப்பதில் போய்முடியும். அதைத்தான் பெந்தகொஸ்தேகாரர்கள் செய்திருக்கிறார்கள்.*

### 2. பரிசுத்த ஆவியின் வருகை (அப்போஸ். *2:1-13)*

*பெந்தகொஸ்தே நாளில் சீடர்கள் 120 பேரும் எருசலேமில் ஓரிடத்தில் கூடி இருந்தபோது பிதாவின் வாக்குத்தத்தத்தின்படி பரிசுத்த ஆவியானவர் யோவான் பிரசங்கித்தது போலவும், இயேசு கிறிஸ்து சீடர்களுக்கு அறிவித்தபடியும் வருகை தந்தார் என்று அப்போஸ்தலர் 2ம் அதிகாரத்தில் வாசிக்கிறோம். பரிசுத்த ஆவி வருகை தந்தபோது நடந்த நிகழ்ச்சிகளை விளக்கமாக ஆராய்ந்து பார்ப்பது அவசியம்.*

#### அ. ஆவியின் வருகையின் வெளிப்புற அடையாளங்கள் *(2:1-3)*

*முதலில் பலத்த காற்று அடிப்பது போன்ற ஒரு பெருமுழக்கம் உண்டாகி 120 பேரும் அமர்ந்திருந்த இடம் முழுவதையும் நிரப்பியது (2:2). அது காற்று அல்ல பலத்த சத்தம் மட்டுமே. வானத்தில் இருந்து உருவாகிய அந்த சத்தம் சீடர்கள் 120 பேரும் அமர்ந்திருந்த இடத்தை நிரப்பியபோதும், அந்த இடத்துக்கு வெளியில் எருசலேம் நகரில் தொலை தூரத்துக்கும், அனேகர் அதைக் கேட்கக்கூடியதாக இருந்தது என்பதை 6ம் வசனம் விளக்குகிறது. இந்த சத்தம் கர்த்தர் அளிக்கப்போகும் வல்லமையைக் குறிப்பதாகவும், எருசலேமில் இருந்த மக்களின் கவனத்தை ஈர்ப்பதற்காகவும் அனுப்பப்பட்டது. எருசலேம் மக்கள் கூட்டம் 120 பேரும் இருந்த இடத்தைத் தேடி வரும் வரையில் அந்த சத்தம் அன்று தொடர்ந்திருந்திருக்கின்றது.*

*இரண்டாவதாக, அக்கினிபோல் தோற்றமளித்த, பிரிந்திருந்த நாவுகள் 120 சீடர்கள் மேலும் (ஆண்களும், பெண்களும்) வந்திறங்கியது. அவ்வாறு வந்திறங்கிய நாவுகள் அக்கினியல்ல, அக்கினிபோன்ற தோற்றத்தை மட்டுமே*

அளித்தனவாயிருந்தன. எவ்வளவு காலத்துக்கு அந்நாவுகள் தொடர்ந்து அவர்கள் மேல் இருந்தன என்பதை இப்பகுதி விளக்கவில்லை. ஆனால், மக்கள் கூட்டம் அந்த இடத்துக்கு வந்து சேர்ந்தபோது அந்நாவுகள் தொடர்ந்திருக்க வில்லை என்பது தெரிகிறது. ஏனெனில், கூட்டம் அந்நாளில் தாம் கேட்டதை மட்டுமே விபரிப்பதை இப்பகுதியில் வாசிக்கிறோம். அவர்கள் இந்நாவுகளைப் பார்த்திருந்தால் அது பற்றியும் பேசியிருந்திருப்பார்கள். இந்நாவுகள் முகிழ்கூட்டம்போல் வந்திறங்கி பின்பு தனித்தனியாகப் பிரிந்து 120 பேர்களின் தலைகள் மேலும் அமர்ந்தன என்பதையும் அறிந்து கொள்கிறோம். இது லூக்கா 3:16ல் யோவான் சொன்னதை நினைவுபடுத்துகிறது. "அவர் பரிசுத்த ஆவியினாலும், அக்கினியினாலும் உங்களுக்கு ஞானஸ்நானங் கொடுப்பார்." பெந்தகொஸ்தே நாளில் நடந்ததை வைத்தே லூக்கா 3:16 ஐயும், மத்தேயு 3:11 ஐயும் விளங்கிக் கொள்ள வேண்டும். இடிபோன்ற பெருமுழக்கம் அந்த வீட்டை நிரப்பியது. ஆனால், அக்கினிபோன்ற நாவுகள் அங்கிருந்த நூற்றிருபது பேர் மேல் மட்டும் தனித்தனியாக வந்திறங்கின. இது பரிசுத்த ஆவியானவர் தன்னுடைய வல்லமையால் அந்த நூற்றிருபது பேரை மட்டுமே நிரப்பினார் என்பதை விளக்குகிறது. நூற்றிருபது பேரும் அன்று அந்த அனுபவத்தை அடைந்தார்கள் என்பதை நாம் உணர வேண்டும். இடிபோன்ற சத்தத்தைப் போலவே இந்த நாவுகளும் அற்புதமாக அன்று கர்த்தரால் கொடுக்கப்பட்டது.

### ஆ. ஆவியானவரின் வருகையும், அந்நிய பாஷையும் (2:6-47)

அந்நாளில் நூற்றிருபது சீடர்களும் பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டார்கள் என்று 2:6ம் வசனத்தில் வாசிக்கிறோம். கிறிஸ்துவின் சீடர்கள் ஏற்கனவே கிறிஸ்துவை விசுவாசித்து பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டிருந்தார்கள். அவர்களுடைய இரட்சிப்பில் எந்தக் குறைபாடும் இருக்கவில்லை. இரட்சிப் புக்கும், பரிசுத்த வாழ்க்கையை இவ்வுலகில் வெற்றிகரமாக வாழ்வதற்கும் தேவையான அனைத்தையும் அவர்கள் ஏற்கனவே கிறிஸ்துவுக்குள் அடைந் திருந்தார்கள். இரட்சிப்புக்குரிய விசுவாசத்தை பரிசுத்த ஆவியைப் பெறாமல் ஒருவரும் அடைய முடியாது.

### (1) ஆவியானவரின் வருகையின் வரலாற்று முக்கியத்துவம்

ஆகவே, பரிசுத்த ஆவியினால் சீடர்கள் நிரப்பப்பட்டார்கள் என்று இங்கு எழுதப்பட்டிருப்பதின் இறையியல் விளக்கத்தை நாம் முறையாக விளங்கிக் கொள்ள வேண்டியது அவசியம். இங்கே சொல்லப்பட்டிருக்கும் ஆவியின் நிரப்புதல் ஒரு மனிதனுக்கு விசுவாசத்தையோ, பரிசுத்த வாழ்க்கையை வாழ்வதற்கோ அளிக்கப்பட்ட நிரப்புதல் அல்ல. இது ஏற்கனவே விளக்கப் பட்டிருந்த ஓர் புதிய வாக்குத்தத்தத்தின் நிமித்தமாக சீடர்களுக்கு அளிக்கப் பட்டது. இந்த வாக்குத்தத்தத்தை அப்போஸ். 1:5; யோவான் 14:16, 17; 15:26; 16:7 ஆகிய பகுதிகளில் வாசிக்கிறோம். இந்த வாக்குத்தத்தம் அளிக்கப்பட்டதற்கு இந்த உலகில் கிறிஸ்து ஏற்படுத்தப்போகும் சபையே காரணம். பெந்தகொஸ்தே நாளில் எருசலேமில் இருந்த நூற்றிருபது பேரும் அந்த சபையின் முதல் அங்கத்தவர்கள். பழைய ஏற்பாட்டில் ஏற்கனவே விசுவாசிகள் காணப்பட்டு, அவர்கள் இஸ்ரவேல் மக்கள் மத்தியில் காணப்பட்டபோதும், புதிய ஏற்பாட்டுக் காலத்திலேயே கிறிஸ்துவின் மீட்பின் நிறைவேற்றுதலுக்குப்பிறகு ஓர் நிறுவனமாக அப்போஸ்தலர்களைக் கொண்டு திருச்சபை அமைக்கப் பட்டது. அந்த அடிப்படையில் பழைய ஏற்பாட்டில் திருச்சபையை நாம் பார்ப்பதில்லை. (பழைய ஏற்பாட்டில் திருச்சபை இல்லை என்ற

டிஸ்பென்சேஷனலிசக் கோட்பாடு வேதத்தில் இல்லாததொன்று). புதிய ஏற்பாட்டில் இந்த சபை சகல வல்லமையோடும் அமைந்து, சுவிசேஷத்தை உலகெங்கும் பிரசங்கித்து யூதர்களையும், புறஜாதியினரையும் தனக்குள் உள்ளடக்கி இருப்பதை ஆரம்பித்து வைக்கவே பரிசுத்த ஆவியானவர் சீடர்களை நிரப்பினார். இது புதிய ஏற்பாட்டு சபை ஆரம்பமானது பற்றிய வரலாற்று நிகழ்ச்சி. அத்தோடு யூதக் கிறிஸ்தவர்களும், புறஜாதிக் கிறிஸ்தவர்களும் இதுவரை இல்லாதவகையில் இணைந்து பிதாவின் வாக்குத் தத்தத்தின் படி சகல ஆசீர்வாதங்களையும் ஒரே குலமாக திருச்சபையில் அங்கத்தவர்களாக இருந்து அனுபவிக்கப்போவதின் ஆரம்ப நாளே பெந்தகொஸ்தே நாள். இது பழைய ஏற்பாட்டில் இரகசியமாக வெளிப்படுத்தப்பட்டிருக்கும் தீர்க்கதரிசனம்; புதிய ஏற்பாட்டில் நிறைவேறிய பிதாவின் வாக்குத் தத்தம். ஆகவே, பெந்தகொஸ்தே நாளில் பரிசுத்த ஆவியின் வருகையும் இந்தவகையில் திருச்சபை அமைப்போடு தொடர்புடைய ஒரு வரலாற்று நிகழ்ச்சியாகும். பெந்தகொஸ்தே நாளில் நடந்தது ஒரு மாபெரும் வரலாற்று எழுப்புதல்.

**(2) வெவ்வேறு பாஷையில் சீடர்கள் பேசியதன் காரணம்**

அடுத்ததாக நூற்றிருபது பேரும் ஆவியானவர் கொடுத்த வரத்தின்படி வெவ்வேறு மொழிகளில் (other languages) பேசத் தொடங்கினார்கள் என்று வாசிக்கிறோம் (2:4). இங்கே நூற்றிருபது பேரும் இன்ன வரம்தான் வேண்டும் என்று கேட்டு ஏற்கனவே அதற்காக ஜெபிக்கவில்லை. அவர்களுக்கு என்ன நடக்கப் போகின்றது என்பதுகூட தெரியாதிருந்தது. வெவ்வேறு பாஷைகளில் பேசும் வரத்தை ஆவியானவர் தன்னுடைய சித்தப்படி அளித்தார். ஆவியானவர் அவர்களை ஏன் வெவ்வேறு பாஷைகளில் பேசும்படிச் செய்தார் என்பதற்கான விளக்கத்தை இனி வரப்போகும் வசனங்கள் விளக்குகின்றன.

இப்படியாக நூற்றிருபதுபேரும் வெவ்வேறு பாஷைகளில் பேச ஆரம்பித்த போது, ஆரம்பத்தில் இடி முழக்கம்போல அவர்கள் இருந்த இடத்தை நிரப்பிய சத்தத்தைக் கேட்டு பிரமித்த, எருசலேமுக்கு வருகை தந்திருந்த ஏராளமான யூதர்கள் சத்தம் வந்த திசையை நோக்கி ஓடி வந்தனர். அப்படி வந்தவர்கள் அந்த சீடர்கள் இருந்த வீட்டைச் சுற்றி நின்று உள்ளே நடப்பதை வியப்போடு பார்த்தார்கள். அவர்களை மேலும் திகைக்க வைத்த இன்னுமொரு செயல் பல நாடுகளில் இருந்து எருசலேம் பண்டிகைக்காக வந்திருந்த மக்கள் பேசிய பாஷைகளில் நூற்றிருபதுபேரும் கர்த்தரை மகிமைப்படுத்தி ஆராதனை செய்ததுதான். அந்த மக்கள் எந்தெந்த நாடுகளில் இருந்து வந்திருந்தார்கள் என்பதை 2:9-11 வரையுள்ள வசனங்கள் விளக்குகின்றன. வீட்டைச் சுற்றி நின்ற மக்கள நம்முடைய பாஷைகளில் இவர்கள் எப்படி தேவனை மகிமைப்படுத்துகிறார்கள் என்று கேட்டு வியந்தார்கள்.

இதிலிருந்து சீடர்கள் தங்களுக்கு ஏற்கனவே தெரிந்திராத உலக மொழிகளில் அன்று தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்பதை அறிந்து கொள்கிறோம். கலிலேயர்களான இவர்கள் தங்களுடைய பாஷைகளில் எப்படிப் பேசுகிறார்கள் என்று கேட்டு மக்கள் வியந்தார்கள் (2:7, 8). அவர்கள் பேசியதை வந்திருந்த மக்களால் நன்றாகக் கேட்டுப்புரிந்து கொள்ள முடிந்தது. இது ஆவியானவர் சீடர்களில் அன்று செய்த அற்புதம். இதிலிருந்து அந்நிய பாஷை என்பது உலகத்தில் காணக்கூடிய ஒரு மொழி என்பதையும், ஒருவருக்கும் புரியாத வெறும் அர்த்தமற்ற சத்தம் அல்ல என்பதையும் தெரிந்து கொள்கிறோம். அத்தோடு சீடர்கள் வெவ்வேறு மொழிகளில் பேசியபோது

அங்கே எவரும் அதற்கு விளக்கம் கொடுக்க வேண்டிய அவசியமிருக்கவில்லை. அவற்றைக் கேட்டுக்கொண்டிருந்த மக்களுக்கு அது தங்கள் மொழி என்பதை நன்றாக அடையாளம் காண முடிந்தது (2:8).

அடுத்ததாக, இப்படியாக அவர்கள் பல்வேறு மொழிகளில் பேசியதற்குக் காரணம் அன்று கூடியிருந்த வேற்று நாட்டு மக்கள் அதைக் கேட்டு சிந்திக்க வேண்டும் என்பது தேவனின் திட்டமாக இருந்ததுதான். வெவ்வேறு மொழிகளில் பேசிய சீடர்கள் எதையும் உளரிக்கொட்டாமல் தேவனை மகிமைப்படுத்தினார்கள் என்று வாசிக்கிறோம். சீடர்கள் தேவனை மகிமைப் படுத்தினார்கள் என்று கூடிநின்ற மக்கள் சொன்னதாக இப்பகுதி சொல்லு கிறது. அதாவது, சீடர்கள் சுவிசேஷ மகத்துவத்தை வெவ்வேறு மொழிகளில் அன்று பேசியதை வெவ்வேறு நாடுகளில் இருந்து வந்திருந்த யூதர்களால் கேட்டுணர முடிந்தது. ஆவியானவர் சீடர்களில் செய்த அற்புதம் தேவனுடைய வசனத்தை பல்வேறு நாட்டு மக்களும் கேட்கக்கூடிய வசதியை அன்று ஏற்படுத்தியது. பேதுரு, வியப்போடு தங்களைப் பார்த்துக் கொண்டிருந்த மக்களுக்கு கிறிஸ்துவின் சுவிசேஷத்தை அன்று எடுத்து விளக்கினான் என்று 2:14ல் வாசிக்கிறோம். ஆகவே, அன்று அந்நிய பாஷை சீடர்களுடைய சொந்த ஆத்மீக நன்மைக்காக அளிக்கப்படவில்லை என்பதையும், ஆராதனை வேளையில் பயன்படுத்துவதற்காகவோ அல்லது சீடர்கள் தங்களுடைய ஆவிக்குரிய வரமாகப் பயன்படுத்தவோ அளிக்கப்படவில்லை என்பதையும் அறிந்துகொள்ள முடிகிறது. அவை பெந்தகொஸ்தே நாளில் கொடுக்கப்பட்ட தற்கான ஒரே காரணம் சுவிசேஷ இரகசியம் (Gospel mystery) வெளிப்படுத்தப் பட்டு சகல மக்களும் இயேசுவை விசுவாசிப்பதற்கு ஆரம்பகட்டமாக, அப்போஸ்தலர் 1:8ன்படி யூதர்கள் மத்தியில் ஆவியின் வருகையின் மூலமாக சுவிசேஷ ஊழியத்தை ஆரம்பித்து வைப்பதற்காகத்தான் என்பதை இப்பகுதியைக் கவனத்தோடு வாசிப்பதன் மூலம் தெரிந்து கொள்கிறோம்.

### (3) பேதுருவின் பிரசங்கம்

அப்போஸ்தலர் 2:14-47 வரையுள்ள வசனங்களில் பேதுருவின் பிரசங்கத்தின் பொருளை ஆராய்வதும் அவசியம். பேதுரு, அன்று நடந்த நிகழ்ச்சிபற்றி ஏற்கனவே தீர்க்கதரிசனமாக யோவேலினால் பழைய ஏற்பாட்டில் விளக்கப்பட்டிருக்கிறது என்றார். அதன் நிறைவேற்றத்தையே நீங்கள் காண்கிறீர்கள் என்று யூதர்களைப் பார்த்து சொன்னார். 2:17-21 வரையுள்ள வசனங்களில் யோவேலின் புத்தகத்தில் உள்ள தீர்க்கதரிசனத்தை பேதுரு இங்கே நினைவூட்டுகிறார். இந்த வசனங்களுக்கு நாம் மனம்போன போக்கில் விளக்கங் கொடுக்கக்கூடாது. இயேசுகிறிஸ்துவின் முதல் வருகையில் இருந்து இரண்டாம் வருகை வரையுள்ள காலப்பகுதியில் நிகழப்போகும் காரியங்கள் சுருக்கமாக தீர்க்கதரிசனமாக இங்கே விளக்கப்பட்டுள்ளது. இவ்வசனங்களில் அடையாள மொழி பயன்படுத்தப்பட்டிருப்பதைக் கவனிக்கத் தவறக்கூடாது. அதாவது வெளிப்படுத்தல் விசேஷத்தில் காணப்படும் அதே எழுத்துநடையை இங்கே பார்க்கிறோம். இதனை ஆங்கிலத்தில் Apoclyptic எழுத்து நடை என்பார்கள். எதிர்காலத்தில் நடக்கவிருப்பதை அடையாளமாக விளக்குவது இந்த எழுத்து நடையின் சிறப்புதன்மையாகும். இங்கே விளக்கப்பட்டுள்ள அனைத்தும் பெந்தகொஸ்தே நாளில் நிகழ்ந்து முடிந்துவிடவில்லை. அந்த நடவடிக்கைகளில் முக்கியமானது ஆவியின் வருகையாகும். அதைத்தான் பேதுரு இந்த வசனங்களில் வலியுறுத்துகிறார். ஆவியானவர் வருகிறபோது

*இதுவரை இருந்திராதவகையில் அனேகர் ஆவியானவரை அடைவார்கள். அதாவது, அவரைப் பெற்று இரட்சிப்பைப் பெற்றுக் கொள்வார்கள் (2:21) என்கிறார் பேதுரு. அந்த இரட்சிப்பைத் தருவதற்காக வந்த இயேசுவை நீங்கள் விசுவாசிக்க மறுக்கிறீர்கள் என்று பேதுரு பிரசங்கித்தார். அவருடைய பிரசங்கத் தின் இறுதியில் பலர், அதாவது 3000 பேர் தங்களுடைய இருதயத்தில் குத்தப் பட்டு மனந்திரும்பி கிறிஸ்துவை விசுவாசித்து ஞானஸ்நானம் பெற்றுக் கொண்டார்கள் என்று வாசிக்கிறோம். அன்று 3120 பேரைக் கொண்டு புதிய ஏற்பாட்டு திருச்சபை ஒரு அமைப்பாக இந்த உலகத்தில் உதயமானது.*


### *3.* பெந்தகொஸ்தே ஒரு வரலாற்றுச் சம்பவம்

*இதுவரை பெந்தகொஸ்தே நாளில் நிகழ்ந்த காரியங்களை முறையாக ஆராய்ந்து வந்திருக்கிறோம். இனி இந்த நாளின் நிகழச்சிகள் பற்றிய மிக முக்கியமான அம்சமொன்றை விளக்குவது அவசியம். அதாவது, பெந்த கொஸ்தே நாளின் நிகழ்ச்சிகள் வரலாற்று சம்பவமாகும்* (Historical incident). *அவை வரலாற்றில் நடந்து முடிந்துபோன நிகழ்ச்சிகள். பிதாவினால் வாக்குத் தத்தமாகக் கொடுக்கப்பட்டு, பழைய ஏற்பாட்டில் தீர்க்கதரிசனமாக உரைக்கப் பட்டு புதிய ஏற்பாட்டில் நடந்து முடிந்த வரலாற்று நிகழ்ச்சி பெந்தகொஸ்தே சம்பவங்கள். உதாரணத்திற்கு இந்தியாவுக்கு 1947ல் சுதந்திரம் கிடைத்ததும், நேரு பிரதமராக இருந்ததும், காந்தி வாழ்ந்ததும் வரலாற்று நிகழ்ச்சிகள். இன்று ஒருவரும் மறுபடியும் 1947க்காகவும், நேருவுக்கும், காந்திக்கும் அலைந்து திரிவ தில்லை. அவை வரலாற்று நிகழச்சிகள் என்பது ஒவ்வொரு இந்திய குடிமகனுக் கும் தெரியும். அதுபோல்தான் பெந்தகொஸ்தே நாளின் நிகழ்ச்சிகள். இந்த வரலாற்று சம்பவத்தில் நடந்த பல நிகழ்ச்சிகளை நாம் தொடர்ந்தும் எதிர் பார்க்க முடியாது. அப்படி எதிர்பார்ப்பது வரலாறு என்றால் என்னவென்று தெரியாத மனிதர்கள் செய்யும் காரியமாக இருக்கும். இந்த வரலாற்று நிகழ்ச்சிகளில் இருந்து நாம் அறிந்து கொள்ள வேண்டிய அனேக உண்மைகள் இருக்கின்றன. அந்த உண்மைகள் மட்டுமே எக்காலத்துக்கும் பொருத்த மானவை. ஆனால், நடந்து முடிந்த சம்பவங்கள் மறுபடியும் வரலாற்றில் தொடர்ந்து நடக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது முட்டாள்தனம்.*

*ஆவியானவர் உலகளாவிய கிரியைகளை ஆரம்பிக்க பெந்தகொஸ்தே நாளில் வந்தது முடிந்துபோன ஒரு வரலாற்று நிகழ்ச்சி. வந்துவிட்ட ஆவியானவரை நாம் தொடர்ந்து வா, வா என்று தேடி அலையக்கூடாது. அவர் இன்று தன் கிரியைகளை உலகில் நடத்திக் கொண்டிருக்கிறார். சுவிசேஷப் பிரசங்கத்தின் மூலம் பாவிகளை (யூதர்களையும், புறஜாதியாரையும்) மனந்திரும்பச் செய்து அவர்களுக்கு இரட்சிப்பை அளித்து திருச்சபைக்குள் இணைத்துக் கொண் டிருக்கிறார். இதை விளங்கிக் கொள்ளாமல் காத்திருப்புக் கூட்டம் நடத்தி ஆவியானவருக்காக தொடர்ந்து வீணாக அலைந்து கொண்டிருக்கிறது ஒரு கூட்டம். வேதத்தை எப்படி விளங்கிக் கொள்வது என்பது தெரியாததே அதற்குக் காரணம். பெந்தகொஸ்தே நாளில் உலகில் திருச்சபை ஜீவனுள்ள ஒரு அமைப்பாக நிறுவப்பட்டுவிட்டது. அந்தத் திருச்சபையை இந்த உலகில் கட்டி எழுப்புவதே நமது கடமை. சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, அதை விசுவாசிக்கும் ஆத்துமாக்களை மட்டும் கொண்டு திருச்சபைகள் சகல நாடுகளிலும் கட்டி எழுப்பப்பட வேண்டும். அதற்கான வல்லமையைத்தான் கிறிஸ்து 1:8ன்படி திருச்சபைக்கு அளித்திருக்கிறார். இதுவே பெந்தகொஸ்தே நாள் நிகழ்ச்சிகளின் வரலாற்று முக்கியத்துவம். (வளரும்)*

# டிஸ்பென்சேஷனலிசம் - தோற்றமும், வளர்ச்சியும்

டிஸ்பென்சேஷனலிசம் (Dispensationalism) என்ற வார்த்தையை உங்களில் பலர் இதுவரை கேட்டிராமல் இருக்கலாம். இந்தப் பத்திரிகையில் அந்த வார்த்தையை நாம் பல தடவைகள் பயன்படுத்தியிருக்கிறோம். இந்தப்பதம் எதைக்குறிக்கிறது என்பதை வாசகர்களுக்கு முதலில் விளக்க வேண்டியது அவசியமாகிறது. இது வரலாற்றில் கர்த்தருடைய திட்டத்தை (The plan of God) விளக்கும் ஒரு கோட்பாட்டின் பெயர். ‘டிஸ்பென்சேஷன்’ என்ற ஆங்கில வார்த்தைக்கு ‘திட்டம்’ என்று பொருள். சுருககமாகக் கூறப்போனால், கர்த்தருடைய மீட்பின் நிறைவேறுதல் வரலாற்றில் ஒவ்வொரு குறிப்பிட்ட காலப்பகுதியிலும் ஒவ்வொருவிதமான திட்டத்தைக் கொண்டு அமைந்தது என்பது இந்தக் கோட்பாட்டு தரும் விளக்கம். டிஸ்பென்சேஷனலிசத்தை உலகம் முழுவதும் பரப்பியதில் பெரும் பங்கு வகிக்கும் ஸ்கோபீல்ட், “கர்த்தரால் வெளிப்படுத்தப்பட்ட அவருடைய குறிப்பிட்ட சித்தத்திற்கு மனிதன் எந்தவிதத்தில் கீழ்ப்படிந்தான் என்பதை சோதிக்கும் வரலாற்றின் ஒரு குறிப்பிட்ட காலப்பகுதியே டிஸ்பென்சேஷன் (திட்டம்)” என்று விளக்கி னார். இப்படியாக வரலாற்றின் ஒவ்வொரு குறிப்பிட்ட காலப்பகுதியிலும், குறிப்பிட்ட தேவசித்தம் வெளிப்படுததப்பட்டு, அதன் மூலம் மனிதன் சோதிக் கப்பட்டான். அந்தச் சோதனையில் மனிதன் தவறுகிறபோது கர்த்தர் அந்தக் காலப்பகுதியில் அவனைத் தண்டித்தார். இதுவே டிஸ்பென்சேஷனலிசத்தின் போதனை. பொதுவாக டிஸ்பென்சேஷனலிஸ்டுகள் வரலாற்றை ஏழு பகுதி களாக பின்வருமாறு பிரிப்பார்கள்:




இவ்விதமாக வரலாற்றைக் கூறுபோடுவது கர்த்தர் தன்னுடைய மக்களை இரட்சிக்கும் நோக்கத்தின் ஒற்றுமையை சிதறடிக்கிறது. டிஸ்பென்சேஷனலிசம் சீர்திருத்தவாதக் கோட்பாடான, கர்த்தர் இரட்சிப்பைக் குறித்து ஒரே ஒரு திட்டத்தை மட்டுமே கொண்டுள்ளார் என்ற போதனையையும், அவருடைய மக்கள் ஒரு இனம் மட்டுமே என்ற போதனையையும் மறுதளித்து கர்த்தர் இரட்சிப்பைக்குறித்து இருவிதமான திட்டங்களைக் கொண்டுள்ளார் என்றும்,

*(அதாவது, கர்த்தரின் ஆளுகையின் கீழ் இவ்வுலகில் இஸ்ரவேல் ஒரு நாடாகவும், மீட்படைந்து பரலோகத்தை நோக்கி ஆத்மீகப் பிரயாணத்தைப் நடத்திக் கொண்டிருக்கிற மக்களும்), அவருக்கு இருவிதமான மக்கள் கூட்டம் உண்டு என்றும் (இஸ்ரவேலும், சபையும்) போதிக்கின்றது. கர்த்தர் இஸ்ரவேல் நாட்டைக் குறித்துக் கொண்டிருந்த திட்டத்தின் ஒரு இடையூராகவே திருச்சபையை டிஸ்பென்சேஷனலிஸ்டுகள் கணிக்கிறார்கள். அத்தோடு கர்த்தருடைய திட்டங்கள் அனைத்தும் இவ்வுலகில் இஸ்ரவேலை அடிப்படையாகக் கொண்டு அமைந்திருப்பதால், அவருடைய வாக்குத் தத்தங்கள் அனைத்தும் இஸ்ரவேலுக்கு மட்டுமே சொந்தமானதாகவும், இந்த உலகில் அவை நடைமுறையில் எழுத்துபூர்வமாக நிச்சயம் நிறைவேறும் என்றும் இக்கோட்பாடு போதிக்கின்றது.*

| **நோக்கம்** | **மக்கள்** | **வாக்குத்தத்தங்கள்** |
|---|---|---|
| **இவ்வுலகில் கர்த்தரின் ஆட்சியில் தேசிய இஸ்ரவேல்** | **இஸ்ரவேல் உலகில்** | **எழுத்துபூர்வமாக நிகழும்** |
| **ஆத்மீக மீட்பு** | **சபை - பரலோகம்** | **ஆத்மீக விடுதலை மட்டுமே** |

*இந்த உலகில் கர்த்தரின் திட்டங்கள் நிறைவேறுவதற்கு முன்பாகவும், யூத தீர்க்கதரிசனங்கள் நிறைவேறுவதற்கு முன்பாகவும், திருச்சபை ஒரு இடையூராக அமைந்துவிட்டதால் சபை இந்த உலகில் இருந்து சடுதியாக, இரகசியமாக அகற்றப்பட்டு விடும்* (Rapture) *என்றும், இது எந்த நிமிடத்திலும் இந்த உலகில் நடக்கலாம் என்றும் டிஸெ்பென்சேஷனலிசம் விளக்குகிறது. இவ்விதமாக சபை இந்த உலகில் இருந்து அகற்றப்படும் நேரத்திலேயே கர்த்தர் மறுபடியும் தன்னுடைய தீர்க்கதரிசனங்களின்படி இஸ்ரவேலுக்கான தனது திட்டங்களை நிறைவேற்ற ஆரம்பிப்பார் என்கிறது இக்கோட்பாடு. இதை முதலில் ஒரு மாபெரும் சோதனைக் காலத்தைக் கொண்டுவருவதன் மூலமும், அதன்பின் ஆயிரம் வருட அரசாட்சியை ஏற்படுத்துவதன் மூலமும் கர்த்தர் நிறைவேற்று வார் என்கிறது இந்தப் போதனை. இந்தக் கோட்பாடே இன்று பலர் மத்தியிலும் பிரபல்யமடைந்திருக்கிறது. டிஸ்பென்சேஷனலிசத்தைப் பின்பற்று கிறவர்கள் மத்தியிலும் பல கொள்கை வேறுபாடுகள் காணப்படுகின்றன. இருந்தாலும், நாம் இதுவரை பார்த்ததே அவர்களுடைய பொதுவான கோட்பாடாக இருக்கின்றது. டிஸ்பென்சேஷனலிசம் என்ற ஆங்கில வார்த்தைக்கு தமிழ்ப் பதத்தைத் தேடாமல் வசதிக்காக அதே பெயரில் இந்த ஆக்கம் முழுவதும் பயன்படுத்தப் போகிறேன்.*

*இது கிறிஸ்தவம் போதிக்கும் ஒரு கோட்பாடா? இது எவ்வாறு, எங்கிருந்து, யாரால் உருப்பெற்றது? என்பதையும், இது எப்படி வளர்ந்து கிறிஸ்தவர்கள் மத்தியில் பிரபல்யமானது என்பதையும் நாம் ஆராய்வது அவசியம். இன்று தமிழர்கள் மத்தியில் காணப்படும் 99% மான இறையியல் கல்லூரிகளையும், பாப்திஸ்துகளில் இருந்து பல்வேறு சபைப்பிரிவுகளையும் இந்தக் கோட்பாடு பாதித்து ஆண்டு வருவதால் இதைக்குறித்து கிறிஸ்தவர்களாகிய நாம் அசட்டையாக இருந்துவிட முடியாது.*

## டிஸ்பென்சேஷனலிசம் தோன்றுமுன் வரலாற்றில் ஆயிரம் வருட ஆட்சிக்காலம் பற்றிய கருத்துக்கள்

டிஸ்பென்சேஷனலிஸ்ட் எழுத்தாளர்கள் தங்கள் கோட்பாட்டை நிலைநிறுத்திக் கொள்வதற்காக வரலாற்றை அடிக்கடி உதாரணம் காட்டி எழுதுவது வழக்கம். சார்ள்ஸ் ரைரி (Charles Ryrie) அதை தன் நூல்களில் செய்திருக்கிறார். சபைப்பிதாக்களான ஜஸ்டின் மார்டர் (Justin Martyr), ஐரேனியஸ் (Irenaeus), அலெக்சான்டிரியாவைச சேர்ந்த கிளமென்ட் (Clement of Alexandria), ஆகஸ்தீன் (Augustine) ஆகியோரின் எழுத்துக்களை உதாரணங்காட்டி அவர்கள் டிஸ்பென்சேஷனல் கோட்பாட்டைப் பின்பற்றியவர்கள் என்று ரைரி விளக்குகிறார் (Charles Ryrie, *Dispensationalism Today*). ஆனால், ரைரியின் வாதத்திற்கு மாறாக இவர்களில் ஒருவராவது இஸ்ரவேலையும், திருச்சபையையும் தனித்தனி மக்களாகப் பிரித்துக்காட்டி இவை இரண்டிற்கும் மத்தியில் தீவிரமான வேறுபாடு இருப்பதாகப் போதிக்கவில்லை. உண்மையில் ஜஸ்டின் மார்டர் தன்னுடைய நூலொன்றில் சபையை மெய்யான இஸ்ரவேலாகக் கணித்து எழுதியிருக்கிறார்.

ஆகஸ்தீன், ஆயிரம் வருடங்கள், ஆத்மீக ரீதியில் சபையில் நிறைவேறப் போவதாகக் கருதினார். அத்தோடு, இயேசு கிறிஸ்து இந்த உலகத்தில் இருந்தபோதே சாத்தானைக் கட்டுப்படுத்துதல் நிறைவேறிவிட்டதாகவும் கருதினார். விசுவாசிகளுடைய மறுபிறப்பு அனுபவத்தையே வெளிப்படுத்தல் 20ல் காணப்படும் முதல் உயிர்த்தெழுதலாகவும் அவர் கருதினார். வெளிப்படுத்தல் நூலின் 20:1-6 வரையுள்ள பகுதிகள் அதற்கு முன்னால் காணப்படும் அதிகாரங்களின் நிகழ்ச்சிகளை மறுபடியும் படம் பிடித்துக் காட்டும் பகுதி என்றும், 19ம் அதிகாரத்திற்குப் பின் கால அடிப்படையில் புதிதாக நடக்கப்போகும் விபரங்களை விளக்கும் பகுதி அல்ல என்றும் விளக்கினார். ஆயிரம் வருடங்களை எழுத்துபூர்வமாகக் கணித்து அந்த ஆயிரம் வருடங்கள் முடிவடையும்போது இயேசு மறுபடியும் வருவார் என்று எதிர்பார்த்தார். இவ்விதமாக ஆத்மீக ரீதியில் ஆயிரம் வருடங்களைக் கருதுவது மத்திய காலத்திலும் அதற்குப்பின்னும் வழமையாக இருந்தது.

பத்தாம் நூற்றாண்டின் இறுதிவரை ஆகஸ்தீனின் கருத்தைப் பின்பற்றி கிறிஸ்துவின் முதலாம், இரண்டாம் வருகைக்கு இடைப்பட்ட காலத்தையே ஆயிரம் வருடங்களாகக் கணிப்பது வழக்கமாக இருந்து வந்தது. ஆயிரம் வருடங்களின் இறுதிப்பகுதியில் நியாயத்தீர்ப்பு வர இருப்பதால் அதைக் குறித்த பயம் அனேகருக்கு ஏற்பட்டது. ஆனால், கிறிஸ்துவின் வருகையும் ஆயிரம் வருடங்களின் முடிவோடு தொடர்புடையதாக இருந்ததால், ஆயிரம் வருடம் உண்மையில் அதைவிட அதிக காலமாக இருக்கப்போவதை ஆகஸ்தீனின் வழியைப் பின்பற்றியவர்கள் உணர்ந்தார்கள். இந்தப் பிரச்சனையைத் தீர்ப்பதற்கு ஆயிரம் வருடங்களை அடையாள மொழியாகக் கருதுவதே சரியான வழி என்பதை அவர்கள் உணர்ந்தனர். இந்த முறையிலேயே வெளிப்படுத்தல் நூலை வரலாற்று அடிப்படையில் விளக்கும் முறை (Historical interpretation) ஆரம்பமானது. அதாவது, வெளிப்படுத்தல் விசேஷம் சபை வரலாற்றை அடையாள மொழியில் விளக்கும் நூலாக இம்முறையைப் பின்பற்றியோர் கருதினர்.

வெளிப்படுத்தல் விசேஷத்தை ஆத்மீக ரீதியில் சபை வரலாற்றை

அடையாளமாக விளக்கும் நூலாகக் கருதும் வழக்கத்தையே ரோமன் கத்தோலிக்க மதமும், சீர்திருத்தவாதிகளும் பின்பற்றினர். இருந்தாலும் அடையாள மொழிகளில் பலவற்றைக் குறித்து ரோமன் கத்தோலிக்க எழுத்தாளர்களுக்கும், சீர்திருத்தவாதிகளுக்கும் இடையில் அபிப்பிராய பேதம் இருந்தது. சீர்திருத்தவாதிகள் கத்தோலிக்க போப்புக்களின் ஆட்சி முறையின் ஆரம்பத்தை அந்திக்கிறிஸ்துவின் காலமாகக் கருதினர். மார்டின் லூதர் வெளிப்படுத்தல் 11, 12, 13 அதிகாரங்கள் போப்புக்களின் அதிகார ஆரம்பத்தை வர்ணிக்கும் பகுதிகளாக விளக்கமளித்தார். அவரைப் பொறுத்தவரையில் 666 போப்புக்களின் அதிகாரத்தைக் குறிப்பதாக இருந்தது. வரலாற்று ரீதியில் வெளிப்படுத்தலுக்கு விளக்கமளித்தவர்கள், அந்திக்கிறிஸ்துவை போப்புக்களோடு தொடர்புபடுத்தி விளக்கும் முறை புரட்டஸ்தாந்து சிந்தனையாளர்களிடம் மூன்று நூற்றாண்டுகள் வரை இருந்து புரட்டஸ்தாந்து வேதவிளக்க முறை என்றும் அழைக்கப்பட்டு வந்தது.

இருந்தபோதும் வேறு சில புரட்டஸ்தாந்தியர்கள் வரலாற்று ரீதியில் வெளிப்படுத்தலுக்கு விளக்கமளித்தபோதும், ஆகஸ்தீனின் ஆத்மீக, வரலாற்று ரீதியில் விளக்கமளிக்கும் முறையைப்பின்பற்றாமல் ஆயிரம் வருட காலம் ஆரம்பிப்பதற்கு முன்னதாக இயேசு வருகை தருவார் (Premillennialism) என்ற கொள்கையைப் பின்பற்றினார்கள். சீர்திருத்தவாதிகளின் காலப்பகுதியிலும், தூய்மைவாதிகளின் காலப்பகுதியிலும் ஆயிரம் வருட ஆட்சிக்காலத்துக்கு முன்னதாக இயேசு வருவார் என்று நம்பியவர்களிடம் கருத்து வேறுபாடுகள் இருந்தபோதும் அவர்களில் ஒருவராவது பெரும் சோதனைக் காலத்துக்கு முன்பாக சபை இந்த உலகில் இருந்து இரகசியமாக அகற்றப்பட்டுவிடும் (Pre-tribulation rapture) என்ற கருத்தை துப்பரவாகக் கொண்டிருக்கவில்லை. பெரும் சோதனைக்காலத்தை சபையும் நிச்சயமாக சந்திக்கும் என்றே அவர்கள் நம்பினார்கள். அவர்களைப் பொறுத்தவரையில் பெரும் சோதனைக்காலம் 1260 நாட்களாக அல்லாமல், வருடங்களாக இருந்தது.

இதே காலப்பகுதியில் டேனியல் விட்பீ (Daniel Whitby) என்பவர் ஆகஸ்தீனின் கொள்கையில் இருந்து வேறுபட்ட ஒரு விளக்கத்தைத் தன்னுடைய புதிய ஏற்பாட்டு விளக்கவுரை நூலில் (1703) தந்தார். ஆயிரம் வருட அரசாட்சி குறித்து ஆத்மீக ரீதியிலான ஆனால், எதிர்காலத்து (Futuristic) விளக்கத்தை இவர் அளித்தார். இது வரலாற்று ரீதியிலான விளக்கத்திலிருந்து மாறுபட்டது. இவர் வெளிப்படுத்தல் 20, அதற்கு முன்னிருக்கும் அதிகாரங்களில் கூறப்பட்ட சம்பவங்களை (கிறிஸ்துவின் முதல் வருகைக்கும் இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலத்தை) மறுபடியும் விளக்குகின்றது என்ற ஆகஸ்தீனின் ஆயிரம் வருட கால ஆட்சி குறித்த விளக்கத்தை நிரகரித்து இப்பகுதி அதற்கு முன்னிருக்கும் 19 அதிகாரத்து நிகழ்ச்சிகளை காலரீதியில் தொடர்கின்றது என்ற போஸ்ட்மிலேனியல் (Post millennial) விளக்கத்தை அளித்தார். இவர் ஆயிரம் வருட அரசாட்சி திருச்சபை இதுவரை சந்தித்திராத ஓர் அனுபவமாக இருக்கும் என்றும், இயேசுவின் முதலாம் வருகைக்கும், இரண்டாம் வருகைக்கும் இடைப்பட்ட காலப்பகுதியிலேயே அது அமையுமென்றும், அது திருச்சபைக் காலப்பகுதியின் உச்சகட்டமாகவும் இருக்கும் என்றும் விளக்கினார். இக்கோட்பாடே இன்று போஸ்ட்மிலேனியலிசம் (Postmillennialism) என்று அழைக்கப்படுகிறது. ஆயிரம் வருட அரசாட்சி குறித்து எதிர்காலத்து விளக்கத்தை அளித்த விட்பீ, பெரும்

சோதனைக் காலத்தைக்குறித்து வரலாற்று ரீதியில் விளக்கமளித்தார்.

சீர்திருத்தவாதிகளினதும், தூய்மைவாதிகளினதும் காலப்பகுதியில் பொதுவாகவே வெளிப்படுத்தல் விசேஷம் வரலாற்று ரீதியிலேயே விளக்கப் பட்டது. இவர்களில் சீர்திருத்தவாதிகள் ஆகஸ்தீனைப் பின்பற்றி ஆயிரம் வருட அரசாட்சிக் காலத்தை ஆத்மீக ரீதியில் நடந்து கொண்டிருக்கும் ஒன்றாக விளக்கினர். ஒரு சில புரட்டஸ்தாந்தியர்கள் திருச்சபை தம் காலத்தில் பெரும் சோதனைக்காலத்தில் இருப்பதாகவும் (Great tribulation) அதன் முடிவில் ஆயிர வருட ஆட்சிக்காலம் ஆரம்பமாகும் என்றும் விளக்கினர். விட்பீ போஸ்ட்மிலேனியல் கோட்பாட்டை ஆரம்பித்து வைத்தார். வரலாற்றில் இந்தக்காலப்பகுதிவரை ஆயிரம் வருட அரசாட்சி ஆரம்பிக்குமுன்னதாக இயேசுவின் வருகை இருக்கும் (Premillennialists) என்று நம்பியவர்கள் வெளிப்படுத்தல் விசேஷத்தின் பெரும்பகுதிக்கு வரலாற்று ரீதியிலே (Historicists) விளக்கமளித்து வந்திருந்தனர்.

## 19ம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் டிஸ்பென்சேஷனலிசம்

பத்தொன்பதாம் நூற்றாண்டு நெருங்கிவந்த காலத்தில் ஐரோப்பாவின் அரசியல், சமுதாய ஸ்தாபனங்களை பிரான்சுப் புரட்சி தகர்த்தெறிந்ததால் இங்கிலாந்தில் அனேகர் உலக முடிவும், கிறிஸ்துவின் வருகையும் சமீபித்து விட்டதோ என்று அஞ்சத்தொடங்கினர். இது இறுதிக்காலத்தைக் குறித்து ஆராய்ந்து கொண்டிருந்தவர்கள் அனைவரையும் வேதத்தில் குறிக்கப்பட்டிருக் கும் 1260 நாட்கள் இவைதானோ என்று எண்ண வைத்தன. நெப்போலியனின் உயர்வால் பிரான்சில் கத்தோலிக்க போப்பின் அதிகாரம் தகர்ந்து, 1798ல் பிரான்சுப்படை ரோமில் நுழைந்து போப்பை அகற்றியது. இதையெல்லாம் கவனித்த, தீர்க்கதரிசனத்தில் ஆர்வம் கொண்டிருந்தவர்கள் உலக முடிவு சமீபித்துவிட்டதோ என்று சிந்திக்க ஆரம்பித்தனர். ஆயிரம் வருட அரசாட்சி க்கு முன்பு கிறிஸ்துவின் வருகை இருக்கும் என்று நம்பிய பிரிமில்லேனியல் கோட்பாட்டைப் பின்பற்றியவர்கள் தீர்க்கதரிசன ஆய்வில் அதிகம் ஈடுபட ஆரம்பித்தனர். கிறிஸ்து பத்தொன்பதாம் நூற்றாண்டில் வரப்போகிறார் என்றும், ஆயிரம் வருட ஆட்சி ஆரம்பிக்கப்போகிறது என்றும் அவர்கள் நம்ப ஆரம்பித்தனர்.

இந்த தீர்க்கதரிசன ஆய்வோடு யூதர்களுடைய நிலைபற்றிய ஆய்விலும் இவர்களுடைய கவனம் திரும்பியது. 1816ல் லூயிஸ் வே (Lewis Way) என்பவர் யூதர்கள் பாலஸ்தீனத்திற்கு திரும்பப் போகிற நாட்களுக்கும், யூதர்களின் தேசிய மனமாற்றத்திற்கும் அதிக தொடர்பு இருப்பதாக எழுதிய ஒரு நூலும் இந்த ஆர்வத்தை அதிகரித்தது. யூதர்கள் பற்றிய இந்த ஆய்வுகள் ஒரு புதிய சிந்தனையை உருவாக்கியது. அதாவது, தீர்க்கதரிசனங்களுக்கு எழுத்துபூர்வ மான விளக்கமளிப்பதில் என்றுமில்லாதவகையில் அதிக ஊக்கம் காட்டப் பட்டது. இதனால், தீர்க்கதரிசிகள் இஸ்ரவேலைப்பற்றிப் பேசியதெல்லாம் இஸ்ரவேலான நாட்டுக்கு மட்டுமே பொருந்தும் என்றும், திருச்சபைக்கும் அதற்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை என்று விளக்கம்கொடுக்கும் முறை ஆரம்பித்தது.

பிரிமில்லேனியலிசக் கோட்பாட்டைப் பின்பற்றியவர்கள் யூதர்களுடைய தேசிய மனமாற்றத்தைக் கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்கு ஒரு முக்கிய அடையாளமாகக் கருதினர். இக்காலத்தில் உலகம் முழுவதும் சுவிசேஷம்

*பிரசங்கிக்கப்படுவதில் ஆர்வம் காட்டப்பட்டதும், ரோமன் கத்தோலிக்க மதத்தில் பரிசுத்தம் தொடர்ந்து குறைவடைந்து வந்ததும், திருச்சபை புதிய ஏற்பாட்டு சபைபோல் இருக்க வேண்டும் என்பதில் பிலிமத் சகோதரர்கள் காட்டிய அளப்பரிய ஆர்வமும், 1830 ம் ஆண்டு புரட்சிக்கு இட்டுச் சென்ற அரசியல், பொருளாதார, சமூக இடறல்களும் பலரைக் கிறிஸ்துவின் வருகை சமீபித்து விட்டது என்று எண்ண வைத்தன.*

## எட்வர்ட் இர்விங் (Edward Irving)

*பத்தொன்பதாம் நூற்றாண்டில் எர்வர்ட் இர்விங்கைப்போல தீர்க்க தரிசனத்தில் ஆர்வம் காட்டியவர்கள் குறைவு. 1822ல் லண்டனில் கல்சிடோனியன் சபைக்குப் போதகராக நியமனம் பெற்றபின் இர்விங் தன்னுடைய பேச்சுத்திறத்தால் சாதாரண மக்களையும், உயர் மட்டத்தாரையும் அதிகம் கவர்ந்தார். இக்காலத்தில் சாமுவேல் கொல்ரிட்ஜ்* (Colridge) *என்பவருடன் ஏற்பட்ட நட்பால் இர்விங் கிறிஸ்து பற்றிய தவறான ஒரு போதனையை நம்பத் தொடங்கினார் (கிறிஸ்துவில் பாவம் இருந்ததாக இர்விங் பிரசங்கித்தார்). கொல்ரிட்ஜின் தொடர்பு இர்விங்கைத் தான் பரிசுத்த ஆவியின் குரல் என்றும், உலகம் தொடர்ந்து தீவிரமாக மோசமடைகிறதென்றும் நம்ப வைத்தது. இதனால் வரப்போகும் நியாயத்தீர்ப்பைக் குறித்து இர்விங் தீவிரமாக பிரசங்கிக்க ஆரம்பித்தார். 1825ல் இர்விங் பிரிமில்லேனியல் கோப்பாட்டைத் தழுவினார். 1826ல் இர்விங் மெனுவல் லாகன்சா* (Manuel Lasanza) *என்ற இத்தாலிய கத்தோலிக்க யெசுவிட்* (Catholic Jesuit) *எழுதிய நூலை மொழிபெயர்த்து வெளியிட்டார். இந்நூல் வெளிப்படுத்தல் விசேஷத்தை எதிர்காலத்தின்* (Futurism) *அடிப்படையில் விளக்கமளித்தது.*

*கிறிஸ்துவின் வருகை குறித்து தீவிர ஆர்வம் காட்டிய இர்விங் சில நண்பர்களுடன் இணைந்து பிரித்தானிய நாட்டில் மிலனேரியன்* (Millenarian) *கோட்பாட்டில் ஆர்வம் காட்டிய அத்தனை பேரையும் அழைத்து அல்பரி* (Albury Conference) *மகாநாட்டை நடத்தினார். இது 1827, 1828 ஆண்டுகளிலும் கூடியது. இம்மகாநாட்டில் கிறிஸ்துவின் வருகை பற்றிய பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. முக்கியமாக நியாயத்தீர்ப்புக் காலத்தில யூதர்கள் தங்களுடைய நாட்டை அடைவார்கள் என்றும், கிறிஸ்துவின் வருகைக்குப் பின் இவ்வுலகில் ஆயிரம் வருட ஆட்சி ஆரம்பிக்கும் என்றும், ஜஸ்டீனியனின் ஆட்சிக் காலத்தில் இருந்து பிரான்சுப் புரட்சிவரையுள்ள காலமே தானியேல் 7, 13 போதிக்கும் 1260 நாட்கள் என்றும் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. இதிலிருந்து, வரலாற்று ரீதியில் விளக்கமளிக்கும் போக்கை முற்றாக உதறித்தள்ளிவிடாமலிருந்தாலும் எதிர்கால அடிப்படையில் விளக்கம் கொடுக்கும் போக்கை நோக்கி தீர்க்கதரிசன விளக்கங்கள் நடைபோடுவதைக் காணக்கூடியதாக இருக்கின்றது. இது பின்பு டார்பியின்* (Darby) *காலத்தில் முழுமை பெற்றது. இத்தீர்மானங்களில் இஸ்ரவேலின் நிலை முக்கிய இடத்தைப் பெற்றிருப்பதைக் கவனிக்கவும்.*

*எட்வர்ட் இர்விங் பெந்தகொஸ்தே வரங்களிலும் ஆர்வம் காட்ட ஆரம்பித்தார். 1828ல் ஸ்கொட்லாந்துக்கு பிரசங்கம் செய்யச் சென்றபோது சந்தித்த ஏ. ஜே. ஸ்கொட்* (A. J. Scott) *என்ற மனிதரின் தாக்கத்தால் அற்புத வரங்கள் இப்போதும் நடைமுறையில் இருக்கின்றன என்று இர்விங் நம்ப ஆரம்பித்தார். இதுவரை அவை இறுதிக்காலத்திலேயே மறுபடியும்*

உயிர்ப்பிக்கப்படும் என்று இர்விங் நம்பி வந்திருந்தார். அவை ஒருபோதும் இல்லாமல் போகவில்லை என்ற ஸ்கொட்டின் வாதம் இர்விங்கைக் கவர்ந்தது. இர்விங்கின் அற்புத வரங்கள் பற்றிய இந்த ஆர்வமும் டிஸ்பென்சேஷனலிசத்தின் தோற்றத்திற்கு வித்திட்டது. இக்காலத்தில் இசபெல்லா கெம்பல் (Isabella Cambpbell) என்ற பெண்ணும், மார்கிரட் மெக்டோனல்ட் (Margaret Macdonald) என்ற பெண்ணும் தரிசனத்தின் மூலம் அற்புத வரங்களைக் குறித்துப் பேச ஆரம்பித்திருந்தனர். மார்கிரட் மெக்டோனல்ட் இயேசுவின் இரண்டாம் வருகை இரகசிய வருகையாக இருக்கும் என்று தரிசனம் கண்டதாக சொல்லப்பட்டது. 1834ல் பவர்ஸ்கோர்ட் (Powerscourt) என்ற இடத்தில் நடந்த மகாநாட்டில் இரகசிய வருகை பற்றிய போதனைக்கு முக்கிய இடம் கொடுக்கப்பட்டது. இந்த மகாநாட்டில் இர்விங் கலந்து கொண்டார். இரகசிய வருகை பற்றிய போதனையும், கிறிஸ்துவின் வருகைக்கு முன்னதாக நடக்கவிருப்பதாகக் கூறப்படும் பெரும் சோதனைக்காலம் (Pre-tribulation) பற்றிய போதனையும் இக்காலத்தில் சிறிது சிறிதாக உருப்பெற்றாலும் பின்பு டார்பியினாலேயே இவற்றிற்கு இறையியல் உருவம் கொடுக்கப்பட்டது.

எட்வர்ட் இர்விங்காலோ அல்லது அவரது கூட்டாளிகளாலோ அல்பரி மகாநாட்டில் தீர்க்கதரிசனங்களுக்கு எதிர்கால அடிப்படையில் (Futurism) விளக்கம் கொடுக்கும் முறை ஆரம்பித்தது. அத்தோடு தீர்க்கதரிசன கால அட்டவனையில் இஸ்ரவேலுக்கு அதிமுக்கிய இடம் கொடுக்கப்பட்டது. அடுத்ததாக, கிறிஸ்துவின் வருகையின்போது மறுபடியும் பெந்தகொஸ்தே வரங்கள் உயிர்பெறும் என்றும் தீர்மானிக்கப்பட்டது. இவற்றில் முதலிரண்டும் நேரடியாக எதிர்காலத்தில் டிஸ்பென்சேஷனலிசத்தின் தோற்றத்திற்குக் காரணமாக இருந்தன. இர்விங்கின் ஊழியத்தில் பங்கு கொண்டிருந்த ரொபட் பெக்ஸ்டர் என்ற மனிதர் இக்காலத்தில் தானியேலில் காணப்படும் 1260 நாட்கள் வருடங்கள் அல்ல நாட்கள் மட்டுமே என்று தீர்க்கதரிசனம் சொல்ல ஆரம்பித்தார். இதுவும் தீர்க்கதரிசனங்களுக்கு எதிர்கால விளக்கம் கொடுக்கும் முறைக்கு துணைபோனது.

எட்வர்ட் இர்விங்கின் வாழ்க்கை இறுதியில் துன்பகரமாக முடிந்தது. பெந்தகொஸ்தே அற்புத வரங்களில் நம்பிக்கை வைத்து, தன்னுடைய பிரசங்க ஊழியத்தை அழித்துக் கொண்டு, இறுதியில் காசநோய் பிடித்து அதைக் கர்த்தர் தீர்ப்பார் என்று நம்பி அதிலிருந்து விடுதலை பெறாமலேயே நிம்மதியின்றி இர்விங் இறந்தார் என்பது வரலாறு.

## ஜோன் நெல்சன் டார்பி (John Nelson Darby)

எட்வர்ட் இர்விங்கின் ஊழிய காலத்தில் இங்கும் அங்குமாக டிஸ்பென்சேஷனலிசத்தின் தோற்றத்திற்குக் காரணமான அம்சங்கள் இடம் பெற்றிருந்தாலும் ஜோன் நெல்சன் டார்பியே டிஸ்பென்சேஷனலிசத்தை முறைப்படுத்தி அமைத்து அதற்கு முழு உருவம் கொடுத்த மனிதராக இருந்தார். இர்விங்கின் ஊழியத்தின் மூலம் தோன்றிய கத்தோலிக்க அப்போஸ்தல சபை தன்னுடைய முக்கியத்துவத்தை ஆயிரம் வருட ஆட்சிக்கால கோட்பாட்டாளர் மத்தியில் இழந்து கொண்டு வர பிலிமத் சகோதரர்கள் (Plymouth Brethren) அந்த இடத்தைப் பிடித்துக் கொண்டனர். பிலிமத் சகோதர்கள் இயக்கத்தை டார்பி ஆரம்பித்திருக்காவிட்டாலும் அதன் அதிமுக்கிய தலைவர்களில் அவரும் ஒருவராக இருந்தார்.

*ஜோன் நெல்சன் டார்பி அன்றைய திருச்சபையின் விருத்தி குறைந்த தன்மையையும், போதக ஊழியத்தையும் கடுமையாகத் தாக்கி 1829ல் எழுதிய ஒரு ஆக்கத்தின் மூலம் சகோதரத்துவ இயக்கத்தில் இடம் பெற்றார். ஆனால், அவருடைய தீர்க்கதரிசனம் சம்பந்தமான போதனைகளும், டிஸ்பென்சேஷன லிசத்திற்கு அவர் ஆற்றிய பங்கைப் பற்றியுமே நாம் அக்கறை கொண்டிருக் கிறோம். அயர்லாந்தின் டப்ளின் என்ற இடத்தில் 1831ல் நடந்த பவர்ஸ்கோர்ட் மகாநாட்டிற்குக் காரணகர்த்தாவாக டார்பி இருந்தார். இம்மகாநாட்டில் எட்வர்ட் இர்விங்கும் கலந்து கொண்டிருந்தார் என்று ஏற்கனவே பார்த்தோம். இம்மகாநாட்டில் டார்பி திருச்சபையைத் தொடர்ந்து தாக்கினார். விசுவாசிகள் இயேசுவின் நாமத்தில் மட்டுமே கூட வேண்டும் என்றும், சபை அமைப்பில் அக்கறை காட்டக்கூடாதென்றும் டார்பி கூறினார். அத்தோடு இம்மகா நாட்டில் தன்னுடைய சபை பற்றிய கோட்பாட்டையும் டார்பி விளக்கினார். தானியேல் நூலில் காணப்படும் 69வது வாரத்துக்கும் 70ம் வாரத்துக்கும் இடைப்பட்ட பகுதியில் காணப்படும் ஒரு தற்காலிக இடைச்செருகலே திருச்சபை என்று டார்பி விளக்கினார். டார்பியின் இந்தப்போதனையும், பெரும் சோதனைக்காலத்துக்கு முன்பு திருச்சபை இரகசியமாக அகற்றப்படும் என்ற போதனையையும் குறித்து அவருக்கும் சகோதரத்துவ இயக்கத்தைச் சேர்ந்த இன்னொரு தலைவரான பென்ஜமின் டபிள்யூ நியூட்டன் என்பவருக்கும் இடையில் பெரும் கருத்து வேறுபாடு ஏற்பட்டது. நியூட்டன் 1834 மகாநாட்டில் கலந்து கொள்ள மறுத்து தனியாக ஒரு மகாநாட்டை ஆரம்பித்தார். இதை டார்பி கடுமையாக கண்டித்தார். 1845ல் டார்பி பிளிமத்துக்குப் போய் நியூட்டனைக் கடுமையாக சாடினார். நியூட்டனின் போதனைகளிலும் குறைகண்டார். இவற்றால் நியூட்டன் இயக்கத்தை விட்டுவிலக டார்பி அவரையும், அவரைச் சேர்ந்தவர்களையும் சபைநீக்கம் செய்தார்.*

*டார்பிக்கும், நியூட்டனுக்கும் எதில் கருத்து வேறுபாடு ஏற்பட்டது என்பதை அறிந்துகொள்வது அவசியம். டார்பி பெரும் சோதனைக்காலத்திற்கு முன்பு திருச்சபை இரகசியமாக அகற்றப்படும் என்றும், சபையோடு தொடர்பில்லாத ஒரு கூட்டம் சோதனைக் காலத்துக்குள்ளாகப் போகும் என்று கூறினார். சபை இரகசியமாக எடுத்துக் கொள்ளப்படுவதற்கு முன்பாக, வெளிப்படுத்தல் விசேஷத்தின் முதல் சில அதிகாரங்களின் நிகழ்ச்சிகளைத்தவிர அதற்குப் பின்னால் வரும் அதிகாரங்களின் எந்த நிகழ்ச்சிகளும் இதுவரை நடக்கவும் இல்லை, இனி நடக்கவும் முடியாது என்பது டார்பியின் வாதமாக இருந்தது. ஆனால், நியூட்டனோ சோதனைக் காலத்தைச் சந்திக்கும் விசுவாசிகள் திருச்சபை அங்கத்தவர்கள் என்றும் அவர்கள் சோதனைக்காலத்தை முழுவதுமாகக் கடந்து போவார்கள் என்றும் கருதினார். இதிலேயே இவருக்கும் டார்பிக்கும் பெருங்கருத்து வேறுபாடு ஏற்பட்டது.*

*கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது சபை அகற்றப்படும் என்ற போதனையைக் குறித்து டார்பிக்கும், நியூட்டனுக்கும் இடையில் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டிற்கு அடிப்படையான காரணம், டார்பி பழைய, புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் பற்றிக் கொண்டிருந்த கருத்துத்தான். பழைய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கும், புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கும் (பெந்தகோஸ்தேயில் இருந்து இரகசிய வருகைவரை) இடையில் பெரும் அடிப்படை வித்தியாசம் இருப்பதாக டார்பி விளக்கினார். பழைய ஏற்பாட்டு விசுவாசிகள் புதிய*

ஏற்பாட்டு விசுவாசிகளை விடத் தரத்தில் குறைந்தவர்களாக டார்பி கருதினார். நியூட்டன் மாறாக பழைய, புதிய ஏற்பாட்டு விசுவாசிகள் அனைவரும் ஒரே சபையைச் சேர்ந்தவர்கள் என்றும், அவர்கள் சம ஆசீர்வாதங்களை அடைகிறார்கள் என்றும் விளக்கினார்.

டார்பியைப் பொறுத்தவரையில் மெய்யான சபை கர்த்தரோடு ஐக்கியத்தில் வந்ததாக இருந்தது. அதேநேரம் இந்த உலகில் காணப்படும் சபைக்கும் அதற்கும் எந்தத் தொடர்பும் இல்லை என்று அவர் விளக்கினார். திருச்சபை பற்றிய டார்பியின் இந்த நம்பிக்கையே அவருடைய ஏனைய போதனைகளுக்கு அடிப்படையாக அமைந்தது. தன்னுடைய காலத்து திருச்சபை உலகில் பலவீன மானதாகவும், பரிசுத்தத்தில் குறைந்தாகவும் இருப்பதாகக் கருதிய டார்பி அது கர்த்தருடைய திட்டத்திற்கு முரணாக அமைந்து காணப்படுவதாகக் கருதினார். ஏனெனில், கர்த்தருடைய திட்டங்களில் ஒன்றான சபை, இந்த உலகத்தில் வெற்றிபெறாததால் ஏனைய காலங்களில் நடந்ததுபோல் இப்போது கர்த்தருடைய தண்டனையை சந்திக்க வேண்டும் என்றார். சபையைத் திருத்தும் எந்த முயற்சியும் தோல்வியிலேயே போய் முடியும் என்று கூறிய டார்பி, அது கர்த்தருடைய சித்தமும் அல்ல என்று விளக்கினார். ஆகவே, விசுவாசிகள் தாங்கள் இருக்கும் சபைகளையெல்லாம்விட்டு விலகி இயேசுவின் பெயரில் மட்டும் எங்கும் கூடிவரவேண்டும் என்றார் டார்பி. அவரைப் பொறுத்த வரையில் இப்படிக்கூடிவரும் சகோதரர்கள் மட்டுமே தம்மில் பரிசுத்த ஆவியைக் கொண்டிருந்து கிறிஸ்துவை இந்த உலகத்தில் பிரதிநிதித்துவப் படுத்துகிறார்கள். இன்று தமிழர்கள் மத்தியில் சபை அமைக்காமலும், கூடுகின்ற கூட்டத்துக்கு ஒரு பெயர்கூட இல்லாமலும், சகோதரர்கள் என்ற முறையில் மட்டும் வாராவாரம் கூடிவருகிறவர்களின் செயலுக்கு டார்பியின் போதனையே காரணம். இப்படிக் கூடுகிறவர்கள் தாங்கள் புதிய ஏற்பாட்டு சபையைப் பின்பற்றி வருகிறோம் என்று கூறினாலும் இது டார்பி உருவாக்கிய தவறான போதனை என்பது அவர்களுக்கு தெரியாமல் இருக்கலாம்..

டார்பியைப் பொறுத்தவரையில் திருச்சபை பெந்தகொஸ்தே நாளுக்கு முன்பு இந்த உலகத்தில் காணப்படவில்லை. அதுமட்டுமல்லாமல் பழைய ஏற்பாட்டில் திருச்சபை வெளிப்படுத்தப்படவில்லை என்றும் இஸ்ரவேலே இந்த உலகத்தில் தேவ இராஜ்யமாக கர்த்தரின் வாக்குத்தத்தங்களையும், ஆசீர்வாதங்களையும் அனுபவித்து வந்ததாக டார்பி விளக்கினார். இந்த உலக இராஜ்யத்துக்கான கர்த்தருடைய திட்டங்களை இஸ்ரவேலர் நிராகரித்ததாலேயே அவர் திருச்சபையை நிறுவினார் என்றார் டார்பி. அதாவது, கர்த்தரின் திட்டமாகிய கடிகாரம் தற்காலிகமாக நின்றுபோய்விட்டதாகவும் கிறிஸ்துவின் இரகசிய வருகையின்போது திருச்சபை அகற்றப்படும்போதே மறுபடியும் கர்த்தரின் திட்டங்கள் நடைமுறையில் கொண்டுவரப்பட்டு அந்தக் கடிகாரம் ஓடத் தொடங்கும் என்றார் டார்பி. இடைச்செருகலாக, தற்காலிகமாக கர்த்தரால் இந்த உலகில் நிறுவப்பட்ட திருச்சபை பரலோகத்துக்குரியதாக இருந்ததால் அது அகற்றப்பட்ட பின்னரே இந்த உலகத்தில் இஸ்ரேவேலை அடிப்படை யாகக் கொண்ட கர்த்தரின் இராஜ்யம் அமைக்கப்பட முடியும் என்றும், ஆகவே, தேவ இராஜ்யம் இஸ்ரவேலைக் கொண்டு இந்த உலகத்தில் எழுத்து பூர்வமாக (Literal earthly kingdom) நிறுவப்படும் என்றார் டார்பி. கர்த்தருடைய மக்களுக்கான வாக்குத்தத்தங்கள் எழுத்துபூர்வமாக இந்த உலகத்து மக்களான இஸ்ரவேலைச் சார்ந்ததால், அவற்றின் நிறைவேற்றமும் எழுத்துபூர்வமாகவே

அமைய வேண்டும் என்பது டார்பியின் போதனை. ஆகவே, இஸ்ரவேலின் நம்பிக்கையும் எதிர்பார்ப்பும் இந்த உலகத்தில் எழுத்துபூர்வமான ஆயிரம் வருட தேவ இராஜ்யமே என்பது டார்பியின் போதனையாக இருந்தது.

இஸ்ரவேல்/சபை குறித்த டார்பியின் இந்த இறையியல் விளக்கங்களே அவருடைய வேதவிளக்கமுறைக்கு (Hermeneutics) அடிப்படையாக அமைந்தன 'எழுத்துபூர்வமான வேதவிளக்கமுறையே (Literal interpretation) தங்களுடைய போதனைகளுக்கு அத்திவாரமாக அமைகின்றது என்று அனேக டிஸ்பென் சேஷனலிஸ்ட்டுகள் மார்தட்டிக் கொள்வார்கள். ஆனால் அவர்களுடைய ஆக்கங்களைப் படித்துப் பார்த்தால், அவர்கள் எழுத்துபூர்வமான வேதவிளக்க முறையை சரிவரப் பயன்படுத்துவதில்லை என்பதைப் புரிந்துகொள்ள நமக்கு அதிக நேரம் எடுக்காது. டிஸ்பென்சேஷனலிஸ்டுகளின் இஸ்ரவேல்/சபை பற்றிய இரட்டைப் போதனையே அவர்களுடைய எழுத்துபூர்வ வேதவிளக்க முறைக்கு அடிப்படையாக இருக்கிறதே தவிர, எழுத்துபூர்வமான வேதவிளக்க முறை இஸ்ரவேல்/சபை பற்றிய போதனைகளை உருவாக்க உதவவில்லை.

டார்பியின் போதனைகளை மறுபடியும் சுருக்கமாகப் பார்ப்போம்:

1. இஸ்ரவேலுக்கும், திருச்சபைக்கும் இடையில் பெரும் பிரிவை ஏற்படுத்தி இஸ்ரவேலரை இந்த உலகத்து மக்களாகவும், விசுவாசி களை பரலோகத்து மக்களாகவும் கருதும் இரட்டைப் போதனை.
2. தீர்க்கதரிசனங்களில் இஸ்ரவேலரைப் பற்றிய போதனைகளை யெல்லாம் எழுத்துபூர்வமாக விளக்குவதோடு, சபைபற்றிய போதனைகளுக்கெல்லாம் ஆத்மீக விளக்கமளிக்கும் முறை.
3. திருச்சபையை தேவனுடைய திட்டத்தில் ஒரு தற்காலிக இடைச்செருகலாக விளக்குதல்.
4. திருச்சபை இரகசியமாக இந்த உலகில் இருந்து அகற்றப்படும் என்ற போதனை (இஸ்ரவேலை அடிப்படையாகக் கொண்ட தேவ இராஜ்யம் இந்த உலகில் ஏற்பட இது அவசியம்).
5. இஸ்ரவேலரைக் கொண்டு ஆயிரம் வருடங்களுக்கு இந்த உலகில் ஏற்படப்போகும் தேவ இராஜ்யத்தைக் குறித்த எதிர்பார்ப்பு.
6. நியாயப்பிரமாணத்திற்கும், கிருபைக்கும் இடையில் பெரும் பிரிவேற்படுத்திக்காட்டும் இரட்டைப்போதனை. இதை சீ. ஐ. ஸ்கோபீல்டின் வேதவிளக்கக் குறிப்புகளில் பெரும்பாலும் காணலாம்.
7. இந்த உலகத்தில் காணப்படும் திருச்சபை அமைப்புகள் பற்றி தனிப்பட்ட எதிர்மறையான விளக்கமளித்தல்.

டார்பியின் இந்தப் போதனைகளை வரலாற்றுக் கிறிஸ்தவ போதனைக ளோடு ஒப்பிட்டுப் பார்ப்பவர்களுக்கு இவற்றின் செயற்கைத் தன்மை மிக எளிதாகப் புலப்படும். டிஸ்பென்சேஷனலிசத்தின் ஆதரவாளர்களில் ஒருவரான ஹெரி அயர்ன்சைட் (Harry A. Ironside) என்பவர் டார்பியின் விளக்கங்கள் எதுவும் அதற்கு முன் வரலாற்றில் எந்தவொரு மனிதராலும், எந்தவொரு காலப்பகுதியிலும் போதிக்கப்படவில்லை என்பதை ஒத்துக் கொள்கிறார். அதாவது அதற்கு முன் 1600 ஆண்டுகள்வரை எவருடைய பிரசங்கத்திலும் போதனைகளிலும் இத்தகைய போதனைகளுக்கு இடமிருக்கவில்லை என்கிறார் அயர்ன்சைட். சபைப் பிதாக்களோ, நைசீனுக்கு முன்னும் பின்னுமோ அல்லது கத்தோலிக்க மதமோ, சீர்திருத்தவாதிகளோ,

தூய்மைவாதிகளோ, எவருடைய காலத்திலும் இப்போதனைகளைக் காண முடியவில்லை. அயன்சைட்டின் இந்தக் கருத்தில் இருந்து டார்பியின் இறையியல் போதனைக்கு வரலாற்றுக் கிறிஸ்தவத்தில் ஒருபோதும் இடமிருக்க வில்லை என்பதைப் புரிந்து கொள்வது கடினமில்லை.

பலருக்கு டார்பியின் மீதிருந்த தீவிர பற்றுதலும், அவருடைய சீடர்களுக்கு இருந்த ஆர்வத்தாலும் டார்பியின் போதனைகள் அனேகரை இங்கிலாந்தில் கவர ஆரம்பித்தன. 1843ல் இங்கிலாந்தில் டிஸ்பென்சேஷனலிசம் காலூன்றி நிற்க இரண்டு முக்கிய அம்சங்கள் உதவின. முதலாவதாக, வரலாற்று பிரிமிலேனியலிசம் (Historicist premillennialism) இடிந்து விழ ஆரம்பித்தது ஒரு காரணம். வில்லியம் மில்லருடைய போதனையின்படி 1843ல் கிறிஸ்துவின் வருகை அமையாமல் போனதால் வரலாற்று பிரிமில்லேனியலிசத்துக்கு ஆபத்து ஏற்பட்டது. இரண்டாவதாக 1859ல் ஏற்பட்ட ஆத்மீக எழுப்புதல் இன்னொரு காரணமாக இருந்தது. இந்த எழுச்சி பெரும்பாலும் போதகர் களால் அல்லாமல் ஊழியப்பயிற்சி பெறாதவர்களால் முன்னின்று நடத்தப் பட்டதால், ஊழியப்பயிற்சிகளிலெல்லாம் நம்பிக்கையில்லாத சகோதரத்துவ இயக்கத்தைச் சேர்ந்தவர்களுக்கு இதில் அதிகம் பங்கிருந்தது. எனவே இங்கிலாந்தில் இந்த எழுப்புதலின்போது பிலிமத் சகோதரத்துவ சபைகளைப் போல வேறு எந்த சபைப்பிரிவும் நன்மைகளை அடையவில்லை. இந்த எழுப்பு தலின் பாதிப்பால் பின்பு சபை சார்பற்ற இயக்கமொன்று உருவாகி, அமெரிக்க சுவிசேஷப்பிரசங்கியான டி. எல். மூடியின் (D. L. Moody) இங்கிலாந்து ஊழியத் தினால் மேலும் உறுதியடைந்து, எந்தவித சபை அமைப்பையும், விசுவாச அறிக்கைகளையும் கொண்டிராத இயக்கமாக டிஸ்பென்சேஷனலிசம் நிரந்தரமாக குடியேறத் தகுந்த இயக்கமாக இருந்தது.

இதுவரை டிஸ்பென்சேஷனலிசம் எவ்வாறு தோன்றி ஜோன் நெல்சன் டார்பியினால் முறைப்படுத்தப்பட்ட இறையியல் வடிவம் கொடுக்கப்பட்டு இங்கிலாந்தில் நிலைகொள்ள ஆரம்பித்தது என்று பார்த்தோம். சீர்திருத்தவாத, வரலாற்றுக் கிறிஸ்தவத்தோடு எந்தவித தொடர்பும் இல்லாத இந்தப்போதனை வேதத்தில் இருந்து பெறப்பட்டதாக இல்லாமல் அரசியல், பொருளாதார, சமூக மாற்றங்களின் காரணமாகவும், தனி மனிதர்களின் கவர்ச்சிகரமான போதனைகளினாலும் உருப்பெற்றதாக இருப்பதையும் கவனித்தோம். எட்வர்ட் இர்விங்கும், டார்பியும் அவ்விதத்தில் மனிதர்களைக் கவரக்கூடிய அம்சங்களைத் தங்களில் கொண்டிருந்தார்கள். செயற்கையான டிஸ்பென் சேஷனலிசப் போதனை சந்தர்ப்ப சூழ்நிலைகளால் இங்கிலாந்தில் தோன்றி பின்பு அமெரிக்காவிற்கு ஏற்றுமதி செய்யப்பட்டது. அங்கிருந்து உலக நாடுகளுக்கெல்லாம் பரவியது. அது எப்படி நடந்தது என்பதை அடுத்த இதழில் பார்க்கவிருக்கிறோம்.

*அடுத்த இதழில்! . . அடுத்த இதழில்! . . அடுத்த இதழில்!*

*டிஸ்பென்சேஷனலிசம்* **(Dispensationalism)** *அமெரிக்காவை எப்படிச் சென்றடைந்தது? அங்கு எவ்வாறு நிலையூன்றி, எத்தகைய தாக்கத்தை ஏற்படுத்தியது? அமெரிக்கா டிஸ்பென்சேஷனலிசத்தை உலகெங்கும் ஏற்றுமதிசெய்ய எந்தவிதத்தில் காரணமாக இருந்தது? இந்தக் கேள்விகளுக்கெல்லாம் அடுத்த இதழில் பதிலை எதிர்பாருங்கள். உங்கள் பிரதிகளைப் பெற்றுக்கொள்ளத் தவறாதீர்கள்.*

# பிரசங்கம் தயாரித்தல் (3)

பிரசங்கத்தைத் தயாரிக்கின்ற வேளையில் அதற்கான ஆரம்பக் குறிப்புகளையும், விளக்கமான குறிப்புகளையும் தயாரித்துக் கொள்ள வேண்டிய அவசியத்தை கடந்த இதழில் பார்த்தோம். இப்படியாக நாம் தயாரிக்கும் குறிப்புகளே பிரசங்கத் தயாரிப்பில் நாம் போக வேண்டிய பாதையைச் சுட்டிக் காட்டுவனவாக இருக்கின்றன. அனேக பிரசங்கிகள் பிரசங்கத்தை ஏற்கனவே தயாரிக்காமல், ஏதோ ஒரு வசனத்தை எடுத்துக் கொண்டு எங்கோ ஆரம்பித்து, எங்கோ போய்க்கொண்டிருப்பார்கள். அவர்களுக்கே தாம் ஆரம்பித்த பாதை எது? போய்க்கொண்டிருக்கிற பாதை எது? என்பது தெரியாமலிருக்கின்றபோது, கேட்டுக்கொண்டிருக்கிறவர்களுக்கு கண்ணைக் கட்டிக் காட்டில் விட்டதுபோல்தான் இருககும். பிரசங்க மேடைக்குப் போவதற்கு முன்பாக பிரசங்கிக்கு தான் எதைப்பிரசங்கிக்கப் போகிறோம்? அதை எப்படிப் பிரசங்கிக்கப்போகிறோம்? எப்படி முடிக்கப் போகிறோம்? என்பதெல்லாம் தெளிவாகத் தெரிந்திருக்க வேண்டும். பிரசங்க மேடையில் நிற்கும்போது எந்தப் பிரசங்கிக்கும் பரிசுத்த ஆவியானவர் பிரசங்க செய்தியைக் கொடுப்பதில்லை. அவருக்கு சோம்பேரிகளைத் துப்பரவாகப் பிடிக்காது.

கடந்த தடவை பார்த்தபடி இதுவரை தயாரித்துள்ள பிரசங்கக் குறிப்புகள் நமக்கு பிரசங்கப் பகுதியைக் குறித்த தெளிவான விளக்கத்தை அளித்திருக்கும். அதாவது அந்தப்பகுதியில் கொடுக்கப்பட்டுள்ள போதனை என்ன என்பதை நாம் தெளிவாகப் புரிந்துகொண்டிருப்போம். இது மிகவும் அவசியம். பிரசங்கிக்க எடுத்துக் கொண்டிருக்கும் பகுதியில் சொல்லப்பட்டிருப்பது என்ன என்பதை எந்தவித சந்தேகமுமில்லாமல் தெளிவாகப் புரிந்துகொண்டிராமல் அந்தப்பகுதியை வைத்துப் பிரசங்கிக்கப் போகக்கூடாது. இந்தப்பிரசங்கக் குறிப்புகள் நாம் பிரசங்கிக்கப்போகும் பகுதியை நமக்கு விளக்க உதவியாக இருந்திருக்கின்றனவே தவிர இவையே பிரசங்கமாகிவிடாது. இதுவரை நாம் எடுத்துக் கொண்டுள்ள வேதப்பகுதியைக்குறித்துப் பெற்றுக் கொண்டிருக்கும் விளக்கத்தின் அடிப்படையில்தான் இனிப் பிரசங்கத்தைத் தயாரிக்க வேண்டும். இதுவரை நாம் செய்திருப்பதெல்லாம் ஒரு காரை அக்குவேர் ஆணிவேராகக் கழட்டித் தனித்தனியாகப் பிரித்து அந்தக்காரின் அம்சங்களைப் புரிந்து கொண்டிருப்பதுதான். இதுவரை நாம் எடுத்துள்ள குறிப்புகள் நமக்குத்தான் உபயோகப்படுமே தவிர பிரசங்கம் கேட்பவர்களுக்கல்ல. இனி, நாம் பிரித்து வைத்திருக்கும் கார்ப்பாகங்களையெல்லாம் முறையாக அந்தந்த இடத்தில் வைத்து காரை உருவாக்க வேண்டும். பிரசங்கத் தயாரிப்பும் இதுபோல்தான்.

## குறிப்புகளின் அடிப்படையில் பிரசங்கத்திற்கான வசனங்களைத் தீர்மானித்தல்

பிரசங்கத்தைத் தயாரிக்க இனி நாம் செய்ய வேண்டியது, இதுவரைத் தயாரித்த குறிப்புகளை வைத்துக் கொண்டு பிரசங்கத்திற்கான வசனங்களை முடிவு செய்துகொள்ள வேண்டும். உதாரணத்திற்கு எபேசியர் 1:3-14 வரையுள்ள வசனங்களை ஆராய்ந்து குறிப்புகளை எழுதி வைத்திருந்தால், அது

*முழுவதையும் ஒரே பிரசங்கத்தில் பிரசங்கிக்கப் போகிறோமா? அல்லது அதைப் பல பகுதிகளாகப் பிரித்து வாராவாரம் அதிலுள்ள சத்தியங்களை ஒவ்வொன்றாகப் பிரசங்கிக்கப் போகிறோமா? என்பதைத் தீர்மானித்துக் கொள்ள வேண்டும். அப்படியான முடிவை எடுத்த பின்னர் பிரசங்கிக்கத் தீர்மானித்திருக்கும் வசனங்களை மேலும் ஆராய்வது அவசியம்.*

## பிரசங்கிக்கத் தெரிந்து கொண்ட பகுதியை மேலும் ஆராய்தல்

*பிரசங்கிப்பதற்கு எபேசியர் 1:3-6 வரையுள்ள வசனங்களைத் தெரிந்து கொண்டிருக்கிறோம் என்று வைத்துக்கொள்வோம். அந்த வசனங்களை நாம் கடந்த இதழில் ஆராய்ந்திருப்பதால் அந்தப்பகுதியில் தரப்பட்டிருக்கும் போதனையும் நமக்குத் தெரியும். (இதை வாசிக்கும்போது அந்த இதழையும் பக்கதில் வைத்துக் கொள்வது நல்லது). இனி அந்தவசனங்களை வசதியாக பிரித்து அதில் காணப்படும் சத்தியங்களின் அடிப்படையில் குறிப்பெடுத்துக் கொள்ள வேண்டும். உதாரணமாக கீழ்வரும் குறிப்பைப் பாருங்கள்.*

*3ம் வசனம் - கர்த்தர் நம்மை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களாலும் ஆசீர்வதித்திருக்கிறார்.*

*6ம் வசனம் - அந்த ஆசீர்வாதங்களின் ஒன்றாக நாம் கர்த்தரால் முன்குறிக்கப்பட்டிருக்கிறோம்.*

*5, 6ம் வசனங்கள் - அவர் தம்முடைய தயவுள்ள சித்தத்தின்படி நம்மை உலகத்தோற்றத்திற்கு முன்பே முன்குறித்திருக்கிறார்.*

*4, 5ம் வசனங்கள் - அவருடைய முன்குறித்தலின் நோக்கம்: (1) அவர் நமக்குத் தந்தருளின அவருடைய கிருபையின் மகிமை புகழ்ச்சியடைய வேண்டும். (2) அவருக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர் களும், குற்றமில்லாதவர்களுமாக இருக்க வேண்டும்.*

*6ம் வசனம் - அவருடைய முன்குறித்தலின் இலக்கு: நாம் கிறிஸ்துவின் மூலமாக அவருடைய சுவிகாரப் புத்திரராவது.*

*மேலே தந்துள்ள குறிப்பை நீங்கள் கவனமாக ஆராய்ந்தால் எபேசியர் 1:3-6 வரையுள்ள வசனங்களில் காணப்படும் போதனைகள் அனைத்தையும் முறைப்படுத்தி குறிப்பெடுத்திருப்பதைக் காணலாம். இப்படிச் செய்வதன் மூலம் அந்தப்பகுதியில பவுல் எதை, எந்த முறையில் சொல்லவருகிறார் என்பதைத் தெளிவாகப் புரிந்துகொள்ள முடிகிறது. இதில் இன்னுமொரு உண்மையையும் புரிந்து கொள்வீர்கள். 1:3-14 வரையுள்ள வசனங்களை நாம் ஆராய்ந்தபோது 3-6 வரையிலான வசனங்களை இந்தளவுக்கு விவரமாக நாம் ஆராயவில்லை. அதற்குக் காரணம், அங்கே நாம் வானத்தில் பறக்கும் விண்கலத்தில் இருந்து பூமியைப் பார்க்கும் விதத்தில் முழுப்பகுதியையும் பார்த்தோம். ஆகவே, நமக்கு முழுப்பகுதியின் போதனையே தெரிந்தது* (Bird's eye view). *விண்கலம் கீழே இறங்கி வர வர பூமியில் இருக்கும், நாடுகளும், நகரங்களும், ஆறுகளும், குளங்களும், ஏன் வீதிகளும் கூடத் தெளிவாகத் தெரிய வரும். அதுபோலத்தான் நாம் 3-6 வரையுள்ள வசனங்களைத் தனியாகப் பிரித்து ஆராய்கிறபோது அதில் காணப்படும் மேலும் பல விபரங்களைத் தெளிவாக அறிந்து கொள்ள முடிகின்றது.*

*மேலே பார்த்த குறிப்பிலிருந்து எபேசியர் 1:3-6 வரையிலான பகுதியின் முக்கிய போதனை கர்த்தரின் முன்குறித்தல் என்பதையும், அந்த முன்குறித்தல் எவ்வாறு நிகழ்ந்தது என்றும், அந்த முன்குறித்தலுக்கான நோக்கம்*

என்னவென்றும், அந்த முன்குறித்தலின் இறுதி இலக்கு என்ன என்பதையும் தெளிவாகப் பார்க்கிறோம். இதுவரை பார்த்த விளக்கங்களில் இருந்து நாம் பிரசங்கத்திற்கான ஒரு வரைபடத்தை சுலபமாகத் தயாரித்துக் கொள்ளலாம்.

## பிரசங்கத்திற்கான வரைபடம்

பிரசங்கத்திற்கான வரைபடம் பிரசங்கத்தின் தலையங்கத்தையும், அதன் அடிப்படையில் வரப்போகும், முறைப்படுத்தித் தரப்பட்டிருக்கும் முக்கிய தலைப்புகளையும் குறிக்கும். அது பின்வரும் முறையில் அமையும்:

**தலைப்பு:**
**கர்த்தரின் முன்குறித்தல்**

அறிமுகம்: 3வது வசனத்தின்படி கர்த்தர் விசுவாசிகளை ஆவிக்குரிய சகல ஆசீர்வாதங்களுடன் ஆசீர்வதித்திருக்கிறார். அந்த ஆசீர்வாதங்களில் ஒன்று முன்குறித்தல்.

1. முன்குறித்தல் என்றால் என்ன?
2. விசுவாசிகள் எவ்வாறு முன்குறிக்கப்பட்டிருக்கிறார்கள்?
   அ. தேவனுடைய தயவுள்ள சித்தத்தின்படி
   ஆ. உலகத்தோற்றத்துக்கு முன்னதாக
3. விசுவாசிகளை கர்த்தர் முன்குறித்ததற்கான நோக்கம் என்ன?
   அ. அவர் நமக்குத் தந்தருளின அவருடைய கிருபையின் மகிமை புகழ்ச்சியடைய வேண்டும்.
   ஆ. அவருக்கு முன்பாக நாம் அன்பில் பரிசுத்தமுள்ளவர்களாகவும், குற்றமில்லாதவர்களுமாக இருக்க வேண்டும்.
4. விசுவாசிகளை எதற்காக கர்த்தர் முன்குறித்திருக்கிறார்?
   - தம்முடைய சுவீகாரப் புத்திரராவதற்கு

இதில் எபேசியர் 3:3-6 ஆகிய வசனங்களில் நாம் 3ம் வசனத்தை பிரசங்கத்தை அறிமுகப்படுத்துகின்ற வசனமாக எடுத்துக்கொண்டிருக்கிறோம். அதாவது 3ம் வசனம் கர்த்தர் நம்மை சகல ஆசீர்வாதங்களுடன் ஆசீர்வதித்திருப்பதாகத் தெரிவிக்கிறது. 4-6 வரையிலான வசனங்கள் இப்பகுதியில் இருந்து நாம் கொடுக்கப்போகும் பிரசங்கத்தின் சரீரமாக இருக்கின்றது. அதாவது பிரசங்கத் தலைப்பான கர்த்தரின் முன்குறித்தலை இவ்வசனங்கள் விளக்குகின்றன. இப்பகுதி போதிக்கும் முன்குறித்தலை நான்கு கேள்விகளைத் தலைப்புகளாகக் கொண்டு பிரசங்கத்தில் விளக்கப் போகிறோம். தலைப்புகள் இந்தவிதத்திலேயே இருக்கவேண்டுமென்ற அவசியமில்லை. அது வேறுவிதமாகவும் இருக்கலாம். ஆனால், பிரசங்கப்பொருளை முறையாக, படிமுறையாக விளக்கிப் பிரசங்கிக்க தலைப்புகள் அவசியம். இதே தலைப்புகளை இன்னொரு விதத்தில் மாற்றிக் கிழே தந்திருக்கிறேன்.

**விசுவாசிகளின் முன்குறித்தல்**

1. விசுவாசிகளின் முன்குறித்தலின் தன்மை
2. விசுவாசிகள் முன்குறிக்கப்பட்டிருக்கும் விதம்
3. விசுவாசிகள் முன்குறிக்கப்பட்டதற்கான நோக்கம்
4. விசுவாசிகள் முன்குறிக்கப்பட்டிருப்பதன் இலக்கு

இதுவரை எபேசியர் 1:3-6 வரையுள்ள வசனங்களில் முன்குறித்தலைப்பற்றிய போதனைக்கான வரைபடத்தைத் தயாரித்துவிட்டோம். இத்தோடு பிரசங்கத்

*தயாரிப்பு முடிந்து விட்டதாகக் கருதிவிடக்கூடாது. இன்னும் செய்ய வேண்டிய பல காரியங்கள் இருக்கின்றன. படிப்படியாக ஒவ்வொன்றையும் இனிப் பார்க்கப்போகிறோம்.*

## பிரசங்கத்தின் சரீரத்தைத் தயாரித்தல்

*மேலே கொடுக்கப்பட்ட வரைபடத்தை வைத்து இனி பிரசங்கத்தின் சரீரத்தை உருவாக்க வேண்டும். அதாவது, கர்த்தரின் முன்குறித்தலைப் பற்றி இந்த வசனங்கள் போதிக்கும் சத்தியங்களை ஏனைய வேத பகுதிகளின் மூலம் நிரூபித்து, உதாரணங்களைத் தந்து பிரசங்கத்தின் சரீரத்தை அமைக்க வேண்டும். எபேசியர் முதலாம் அதிகாரத்தின் 1:3-14 வரையுள்ள வசனங்களை நாம் ஆரம்பத்தில் ஆராய்ந்தபோது பல உண்மைகளை ஏற்கனவே அறிந்து குறிப்பெடுத்திருப்போம். அத்தோடு 3-6 வரையுள்ள வசனங்களுக்கான வரைபடத்தைத் தயாரிக்கும்போதும் பல உண்மைகளை இந்தப்பகுதியில் இருந்து தெரிந்து கொண்டிருப்போம். அந்த உண்மைகளையெல்லாம் முறையாக மேலே நாம் பார்த்த தலைப்புகளின் கீழ் பிரசங்கத்தில் விளக்கமாக எழுதிக்கொள்ள வேண்டும். முக்கியமாக இந்தப்பகுதியில் காணப்படும் பதங்களான முன்குறித்தல், கர்த்தரின் தயவுள்ள சித்தம், கிருபையின் மகிமை, சுவிகாரப் புத்திரர் போன்றவற்றை ஆராய்ந்து அவற்றின் மூலம் வெளிப்படுத்தப்படும் சத்தியங்களை முறயாக விளக்க வேண்டும். எந்த சத்தியம் எந்தத் தலைப்பின் கீழ் வரவேண்டும் என்பதையும் தீர்மானித்துக்கொள்வது அவசியம்.*

*முதலாவது தலைப்பான விசுவாசிகளின் முன்குறித்தலில், முன்குறித்தலைப் பற்றி வேதம் என்ன சொல்கிறது என்பதை ஆராய்ந்து தகுந்த விளக்கங் களையும், உதாரணங்களையும் தந்து அந்தத் தலைப்பின் கீழ் எழுதி வைத்துக் கொள்ள வேண்டும். ஒத்தவாக்கிய அகராதி, சொல் அகராதி போன்றவை வேதத்தின் ஏனைய பகுதிகளில் காணப்படும் முன்குறித்தலைப் பற்றிய விளக்கங்களைப் பெற்றுக் கொள்ள உதவும். விளக்கங்களும் உதாரணங்களும் எந்தளவுக்கு இருக்க வேண்டும் என்பதையும் கவனிக்கத் தவறக்கூடாது. வேறு வேதபகுதிகளில் இருந்து நிரூபண வசனங்களைத் தந்தால் மூன்றுக்கு மேல் வசனங்கள் இராதபடி பார்த்துக்கொள்வது நல்லது. அந்த வசனங்கள் வேதத்தில் இருக்கும் உதாரணங்களில் சிறப்பானவையாக இருப்பவையாகப் பார்த்துக்கொள்ள வேண்டும். ஒவ்வொரு வசனத்தையும் பிரசங்கத்தில் விளக்க நேரம் தேவை. ஆகவே, அதிக வசனங்களைக் கொடுத்துவிட்டு ஏனைய தலைப்புகளை விளக்க நேரமில்லாமல் போய்விடக்கூடாது. ஒரு தலைப்பை மட்டும் விளக்க முழுப்பிரசங்கத்தையும் பயன்படுத்திவிடக்கூடாது. இன்னும் மூன்று தலைப்புகளுக்கு விளக்கம் எழுதித்தயாரிக்க வேண்டியிருக்கிறது.*

*முன்குறித்தலைப்பற்றிய இந்த வேதவசனங்கள் இறையியல் போதனைகளைத் தருவதால் இதுபற்றி இதுவரை அதிகம் ஆராய்ந்திராத பிரசங்கிகள் இந்த சத்தியத்தை ஆராய்ந்து படிப்பது பிரசங்கத்தைத் தெளிவாகப் பிரசங்கிக்க உதவும். நமக்கே சத்தியத்தில் விளக்கம் இல்லாவிட்டால் கேட்கும் ஆத்துமாக் களுக்கு நாம் சொல்வது எங்கே புரியப்போகிறது! தவறான உபதேசத்தைத் தந்துவிடாமல் இருப்பதும் மிக அவசியம். தமிழ் மக்கள் மத்தியில் முன்குறித்த லாகிய வேத சத்தியத்தை முறையாக அறிந்திருப்பவர்கள் குறைவு. அப்படி யொன்று வேதத்தில் இல்லை என்று தவறாக எண்ணிப் பிரசங்கித்து வாழ்ந்து கொண்டிருப்பவர்களும் அதிகம். ஆகவே, இந்த சத்தியத்தை விளக்கும் நல்ல*

*நூல்களை வாங்கி வாசிப்பது நமது பிரசங்கம் தெளிவாக இருக்க துணை செய்யும். உதாரணமாக முன்குறித்தலைப் பற்றித் தெரிந்து கொள்ள, தமிழில் இருக்கும் ஏ. டபிள்யூ, பிங்க்கின் 'சர்வ வல்லவரின் ஏகாதிபத்தியம்', ஆபிரகாம் பூத்தின் 'கிருபையின் மாட்சி', ஜோன் ஓவனின், 'கிறிஸ்துவின் மரணத்தினால் உண்டாகும் வாழ்வு' ஆகிய நூல்களை சிந்தித்து வாசிப்பது நல்ல பயன் அளிக்கும். இந்த நூல்களை எழுதியுள்ள வேத அறிஞர்களின் விளக்கங்களை நாம் பிரசங்கத்தில் உதாரணங்காட்டவும் பயன்படுத்திக் கொள்ளலாம். இது நம் மக்கள் இத்தகைய நூல்களை வாசித்து சத்தியத்தில் மேலும் வளரவும் துணை செய்யும்.*

*இதுவரை பிரசங்கத்தில் படிமுறையாக வரும் தலைப்புகள் ஒவ்வொன்றையும், எடுத்துக்கொண்டுள்ள வேதவசனங்களைவைத்து பிரசங்கத்திற்கான சரீரத்தை எவ்வாறு உருவாக்குவது என்று பார்த்தோம். பிரசங்கத்தின் சரீரமே இந்த வசனங்கள் போதிக்கின்ற முன்குறித்தலாகிய சத்தியத்தை தெளிவாக ஆத்துமாக்களுக்கு பவுல் போதித்திருக்கும் முறையில் விளக்கப் போகிறது. ஆகவே, பிரசங்கத்தின் சரீரத்தை அமைப்பதில் பெருங்கவனம் செலுத்துவது அவசியமாகிறது. அடுத்து எடுக்க வேண்டிய நடவடிக்கையை அடுத்த இதழில் பார்ப்போம்.*


# ஆத்மீக உணவளிக்கும் நூல்கள்

*போல் யொங்கி சோவும், நான்காவது பரிமாணமும்*
*வியாக்கியான பிரசங்கம்*
*சுவிசேஷக் கோட்பாடும், புதிய சுவிசேஷக் கோட்பாடும்*
*திருச்சபை சீர்திருத்தம்*
*கிறிஸ்தவன் யார்? - அல்பர்ட் என். மார்டின்*
*உப்பு தன் சாரத்தை இழந்தால்*
*இந்திய வேதங்களில் இயேசுவா?*
*கிறிஸ்தவ இறையியல் (அறிமுகம்)*
*வேதாகமத்தை விளங்கிக் கொள்வதெப்படி*
*தீர்மானத்தின் மூலம் மறுபிறப்பு - ஜேம்ஸ் அடம்ஸ்*
*குடும்ப ஆராதனை*



**விலை விபரங்களுக்கு எழுத வேண்டிய முகவரிகள்:**

**சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்**
**22. டி. பி. கே மெயின்வீதி, பைகாரா, மதுரை 625004, தமிழ் நாடு.**

**டியாகிறைசிஸ் புக் சர்விஸ்,**
**19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6, ஸ்ரீ லங்கா.**

# உலகத்தில் அன்புகூராதிருங்கள்! (3)

உலகத்தில் அன்புகூராமலிருங்கள் என்ற வேத போதனையை கடந்த இரண்டு இதழ்களிலும் ஆராய்ந்து வந்திருக்கிறோம். அப்படி உலகத்தின் மீது அன்புகூராதிருக்க நாம் உலகவழிப்படி சிந்திப்பதைத் தவிர்த்துக் கொள்ள வேண்டுமென்று கடந்த இதழில் பார்த்தோம். உலக ஆசை முதலில் நமது மனதைத் தாக்கி அதன்பின்பே நமது நடவடிக்கைகளைப் பாதிக்கின்றது. நம்முடைய சிந்தனை வேதபூர்வமாக இருக்குமானால் நமது நடவடிக்கைகளும் வேதபூர்வமாக அமைவதற்கு இலகுவாக இருக்கும். சிந்தனைப்போக்கு உலக ஆசைக்கு இடங்கொடுக்குமானால் நடவடிக்கைகள் அனைத்தும் உலகத்தைச் சார்ந்தே இருக்கும். சிந்தனைக் கோளாறினாலேயே பலர் இன்று விசுவாச வாழ்க்கையில் தடம் மாறி வீழ்ந்து போகிறார்கள்.

உதாரணத்திற்கு இன்று தமிழ் பேசும் மக்கள் வாழும் நாடுகளில் மத்திய கிழக்கு நாடுகளுக்குப் போய் வேலை செய்கின்ற கிறிஸ்தவர்கள் அதிகம். வேறு நாடுகளுக்குப் போய் வேலை செய்வதிலும், வாழ்வதிலும் எந்தத் தவறும் இல்லை. அது தனிப்பட்டவர்களின் விருப்பம். ஆனால், திருமணமானவர்களும், திருமணமாகி பிள்ளைகளைப் பெற்றுக்கொள்கிறவர்களும் குடும்பத்தை சொந்த நாட்டில் விட்டுவிட்டு வருடக்கணக்கில் அவர்களைப் பிரிந்து வெளிநாடுகளில் வேலை செய்கிறார்கள். இதைக் கண்டும் காணாமலும் இருந்துவிடுகின்றன அனேக சபைகள். அத்தோடு சபைகளுக்கு இவர்கள் மூலம் நல்ல வருமானம் வரும் என்ற ஆசையில் இத்தகையோருக்கு புத்தி சொல்லாமல் ஊக்குவிக்கின்ற போதகர்களும், சபைகளும்கூட இருக்கின்றன.

இந்தப்போக்கிற்கு சிந்தனைக் கோளாறைத் தவிர வேறு காரணம் இல்லை. எப்படியென்று கேட்கிறீர்களா? இவர்கள் வேதபோதனையில் தங்களுடைய சிந்தனையை வளர்த்துக் கொள்ளாததால் விசுவாசக் குடும்பம் எப்படி இருக்க வேண்டும் என்ற வேதபோதனைகளை அறியாமல் இருக்கின்றார்கள். திருமணம் செய்து கொள்கிறபோது மட்டும் இன்பத்திலும் துன்பத்திலும் ஒருவருக்கொருவர் துணையிருப்போம் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு வாழ்க்கையில் பணம் வேண்டும் என்றதும் மனைவி பிள்ளைகளை விட்டுவிட்டு விமானம் ஏறிவிடுகிறார்கள். கிறிஸ்தவ கணவன் தன் மனைவியை விட்டுப்பிரிந்து வருடக்கணக்கில் வெளிநாட்டில் வாழ்வது அவளை விவாகரத்து செய்ததற்கு சமம். வெறும் தாலியை மட்டும் கழுத்தில் கட்டிவிட்டால் திருமணமாகி விடாது. அன்றாடம் தாம்பத்ய உறவுக்கு இடம் இல்லாத இருவரின் வாழ்க்கையில் திருமண பந்தத்திற்கு இடமில்லை. பவுல் கொரிந்தியருக்கு எழுதிய முதலாவது நிருபத்தில் கணவனும், மனைவியும் ஆத்மீக காரியத்திற்கு மட்டுமே ஒருமனப்பட்டு ஒருவரை ஒருவர் பிரிந்து தாம்பத்திய உறவில் சில காலம் ஈடுபடாமல் இருக்க வேண்டும் என்று சொல்லுகிறார் (1 கொரிந்தியர் 7:3-5) அதுவும்கூட இருவரும் ஒருமனப்பட்டு, குறுகிய காலத்துக்கு மட்டும்தான் அப்படி வாழ வேண்டும். ஏனெனில், நீண்ட காலத்துக்குப் பிரிந்திருந்து தாம்பத்ய வாழ்க்கையில் ஈடுபடாமல் இருந்தால்

*சாத்தான் உங்களைத் தூண்டிவிடுவான் என்று பவுல் எச்சரிக்கிறார் (7:5). அதற்கு இடங்கொடாதபடி உடனடியாகக் கூடி வாழுங்கள் என்கிறார் பவுல் (7:5). தற்காலிகமாக தாம்பத்ய வாழ்க்கையில் ஈடுபடாமல் இருப்பதையும் ஆத்மீக வளர்ச்சிக்காக மட்டுந்தான் செய்ய வேண்டும் என்கிறார் பவுல். வேதம் இதன்மூலம் கணவனும், மனைவியும் தாம்பத்திய உறவிற்கு இடையூறு ஏற்படும் எந்த நடவடிக்கைகளிலும் ஈடுபடக்கூடாது என்று ஆணித்தரமாகக் கூறுகிறது. அப்படியிருக்கும்போது வெறும், வேலைக்காகவும், பணத்துக்காகவும் மனைவியைப் பிரிந்து பல வருடங்களுக்கு வெளிநாட்டில் வாழும் கணவன் தன் மனைவிக்கு எப்படி விசுவாசமாக இருக்க முடியும்? அந்த மனைவிதான் தன் கணவனுக்கு எப்படி விசுவாசமாக இருக்க முடியும்? கர்த்தர் ஒன்று சேர்த்த இருவரை ஒருவருக்கும் பிரிப்பதற்கு அதிகாரம் இல்லை என்று வேதம் சொல்ல, விசுவாசிகள் என்று தம்மை அழைத்துக் கொள்கிறவர்கள் தாங்களே தங்களை இணைத்த பந்தத்தை அறுத்துக் கொள்வது எப்படி விசுவாச நடவடிக்கையாக இருக்க முடியும்? இது வேத சிந்தனையில்லாதவர்களின் உலக ஆசையினால் ஏற்பட்ட வினையே தவிர வேறில்லை. இது வீணாக தாம்பத்ய உறவில் பிசாசின் சோதனைகளுக்கு இடம்கொடுக்கும் செயலாகும். கர்த்தருடைய வழிகளை நாம் மீறுகிறபோது பிசாசின் செயல்கள் நம் வாழ்க்கையில் அதிகரிக்கும்.*

*கணவனும், மனைவியும் சேர்ந்து வாழ்வதே தாம்பத்ய வாழ்க்கை. அந்த வாழ்க்கையில் இருவரும் அன்றாடம் பகிர்ந்து கொள்ள வேண்டிய காரியங்கள் அனேகம் இருக்கின்றன. ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்தும், பேசியும் சுக துக்கங்களை அன்றாடம் பகிர்ந்துகொண்டும், ஆத்மீக காரியங்களில் இணைந்து செயல்படவும் வேண்டும். கணவன் வீட்டுத் தலைவனாகவும், மனைவி கணவனுக்கு அமைந்து நடப்பவளாகவும், தங்கள் பிள்ளைகளுக்கு முன்னும், சபைக்கு முன்னும், ஊராருக்கு முன்னும் வாழ வேண்டும். கணவனும், மனைவியும் தங்களுடைய விசுவாச வாழ்க்கையை கர்த்தருக்கு பிரியமான முறையில் வாழ்வதற்கு இந்தக் கடமைகளில் அவர்கள் தவறக்கூடாது.*

*அத்தோடு கணவனும், மனைவியும் பிள்ளைகளோடு சபை வாழ்க்கையில், சபை அறிய ஈடுபட வேண்டும். இருவரும் இணைந்து வாழ்ந்தே சுவிசேஷத்தை மற்றவர்களோடு பகிர்ந்து கொள்ள வேண்டும் என்று கர்த்தர் எதிர்பார்க்கிறார். பிலிப்பீன்ஸ் நாட்டில் இருந்து ஒரு விசுவாசி எனக்கு சமீபத்தில் கடிதம் எழுதி இருந்தார். தான் பிலிப்பீன்ஸ் நாட்டில் ஊழியம் செய்வதற்கு தன்னுடைய மனைவியை நியூசிலாந்து நாட்டிற்கு அனுப்பி வைக்க விரும்புவதாகவும், அவள் அங்கே ஏதாவதொரு வேலையை செய்து தன்னுடைய ஊழியத்துக்கு பணம் அனுப்பி உதவ முடியும் என்றும் அதற்காகத் தனக்கு உதவி செய்யும்படியும் என்னைக் கேட்டு அந்தக் கடிதத்தை எழுதியிருந்தார். ஊழியத்துக்காக தன்னுடைய மனைவியைத் தாரை வார்க்கத் தயாராக இருக்கும் இந்த மனிதனின் சிந்தனையில் வேதம் ஆட்சி செய்யவில்லை என்பது சொல்லித் தெரிய வேண்டிய அவசியமில்லை. மனைவி உழைத்து ஒருவன் ஊழியம் செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டால் அந்த மனிதன் ஊழியத்துக்கு முழுக்குப் போடுவது நல்லது. மனைவி, பிள்ளைகளுக்கு சோறூட்டி அவர்களை மகிழ்ச்சியாக வைத்திருப்பதே ஊழியக்காரனுடைய முதல் கடமையும், ஊழியமுமாகும். இதற்கு எதிரான சிந்தனைகளுக்கு இடம் கொடுக்கும் இதயங்களில் அறியாமை மட்டுமல்ல பிசாசும் ஆளத்தொடங்கிவிட்டான் என்றுதான் கூற வேண்டும். வேதபூர்வமான குடும்ப வாழ்க்கையை நிராகரித்துவிட்டு வெளிநாடுகளில்*

போய் பிரமச்சாரிய வாழ்க்கை வாழும் விசுவாசிகள் குடும்பத்தை சீரழித்தும், எந்தவிதமான சாட்சியும் இல்லாத வாழ்க்கையையே வாழமுடியும்.

அதுமட்டுமல்லாமல் அந்தத் தம்பதியினர் தங்களுடைய குழந்தைகளைக் கர்த்தருக்குள் எப்படி வளர்க்க முடியும்? தகப்பன் பக்கத்தில் இல்லாமல் எந்தப் பிள்ளையும் சரியாக வளர முடியுமா? பிள்ளைகளுக்கு கர்த்தர் தாயையும், தகப்பனையும் தந்திருக்கிறார், தாயை மட்டுமல்ல. ஆணும், பெண்ணுமான பிள்ளைகள் சரியாக வளர தாயும், தந்தையும் பக்கத்தில் இருப்பது மட்டுமல்லாமல் கர்த்தரின் அதிகாரமும் வீட்டில் இருக்குமாறு பார்த்துக்கொள்ள வேண்டும். வெளிநாட்டில் பிரமச்சாரி போலக் காலந்தள்ளும் கிறிஸ்தவ கணவன் தன் பிள்ளைகளுக்கு எப்படி நல்ல உதாரணமாக இருக்க முடியும்? தந்தையின் வழிநடத்தலையும், அன்பு கலந்த கண்டிப்பையும், நல்லுதாரணத்தையும் அருகில் இருந்து அன்றாடம் பார்க்க முடியாத பிள்ளைகள் கர்த்தருக்கு விசுவாசமாக எப்படி வளர முடியும்? பணம் மட்டும்தான் வாழ்க்கையில் பெரிது என்றால் நமக்கு குடும்பம் எதற்கு? கர்த்தருடைய வழியில் வாழ முற்படாமல், கர்த்தரின் மேல் நம்பிக்கை வைக்காமல் குடும்பத்தை சீரழித்து வாழும் வாழ்க்கையும் ஒரு வாழ்க்கையா? நண்பர்களே! வேதம் போதிக்கும் குடும்ப வாழ்க்கையை கர்த்தரை நம்பி நடத்துங்கள். உலக ஆசையினாலும், பணம் சேர்க்க வேண்டும் என்ற எண்ணத்தாலும், வசதிகளைப் பெருக்கிக் கொள்ளும், ஆசையாலும் குடும்பத்தை பிசாசுக்கு ஒப்புக்கொடுத்து விடாதீர்கள். அந்தப்பிசாசு சில வேளைகளில் போதகர்கள் வடிவத்திலும் வந்து ஆசை காட்டும். துறவியைப் போல வீட்டைத் துறந்துவிட்டு வெளி நாட்டில் சம்பாதிக்கும் பணத்தில் சபைக்கு பணம் கொடுப்பதால் கர்த்தருக்கு எதிராக நாம் சேர்த்து வைத்திருக்கும் பாவத்திற்கு பரிகாரம் தேடிக்கொள்ள முடியாது. வேத போதனைகளால் தங்களுடைய சிந்தனைகளை வளர்த்துக் கொள்ளாதவர்கள் மட்டும்தான் இத்தகைய திருமணாகியும் துறவறம் என்ற பாவ வாழ்க்கைக்கு தங்களை ஒப்புக்கொடுப்பார்கள்.

### 2. வேதத்தின் போதனைகளுக்கு விரோதமான முறையில் சிந்திப்பது மட்டுமல்ல அந்த சிந்தனைகளின்படி நடப்பதும் உலக இச்சையாகும்

பிசாசு நம்முடைய சிந்தனையைப் பாதித்து கர்த்தருக்கு விரோதமான முறையில் நம்மை எப்படிச் சிந்திக்க வைக்கிறான் என்பதையும், உலக ஆசையால் நம்முடைய சிந்தனை எந்தளவுக்கு கர்த்தரின் வார்த்தைக்கு எதிரான சிந்தனைகளைக் கொண்டிருக்க முடியும் என்பதையும் பார்த்தோம். இனி வேதத்திற்கு விரோதமான முறையில் சிந்திப்பது மட்டுமல்ல அவ்வாறு நடப்பதும் உலக இச்சையே என்பதைக்குறித்து சிந்திப்போம். பிரபஞ்சத்திற்குரிய வேஷம் தரிக்காதீர்கள் என்று பவுல் ரோமர் 12ல் கூறியிருப்பதைக் கவனியுங்கள். வேதவழிகளைப் பின்பற்றாமல் உலக இச்சைகளைப்பின்பற்றி வாழ்வதை பிரபஞ்சத்திற்குரிய வேஷம் தரித்தல் என்று பவுல் கூறுகிறார்.

உலக இச்சை நம்முடைய சிந்தையை ஆண்டால் நம்முடைய செயல்களும் எப்போதும் அதன்படியே அமையும். 1 யோவான் 2:15ல், "உலகத்திலும், உலகத்திலுள்ளவைகளிலும் அன்புகூராதிருங்கள்; ஒருவன் உலகத்தில் அன்புகூர்ந்தால் அவனிடத்தில் பிதாவின் அன்பு இல்லை" என்று யோவான் கூறியிருக்கிறார். அதற்கான காரணத்தை விளக்கும் யோவான், "ஏனெனில் மாம்சத்தின் இச்சையும், கண்களின் இச்சையும், ஜீவனத்தின் பெருமையுமாகிய உலகத்திலுள்ளவைகளெல்லாம் பிதாவினாலுண்டானவைகளல்ல, அவைகள்

*உலகத்தினாலுண்டானவைகள். உலகமும் அதனிச்சையும் ஒழிந்துபோம்; தேவனுடைய சித்தத்தின்படி செய்கிறவனோ என்றென்றைக்கும் நிலைத் திருப்பான்" என்கிறார். 2 தீமோத்தேயு 4:10ல் பவுல், "தேமா இப்பிரபஞ்சத்தின் மேல் ஆசைவைத்து என்னைவிட்டுப் பிரிந்து . . . போய்விட்டான்" என்கிறார். இதிலிருந்து உலக ஆசை எந்தளவுக்கு நம் மனதைப் பாதித்து நமது செயல்களும் அதன்படி அமைந்து விடுகின்றன என்பதை அறிய முடிகிறது. பிலிப்பியர் 3:17-21 வரையுள்ள வசனங்களையும் வாசித்து உலக ஆசை எத்தனை ஆபத்தானது என்பதை உணருங்கள். உலக ஆசைக்கு தன் மனதில் இடம் கொடுத்ததால்தான் தாவீது பெத்சீபாவுடன் தவறான உறவை ஏற்படுத்திக் கொண்டான். அவனுடைய சிந்தனையும், செயல்களும் ஆபத்தில் போய் முடிந்தன. இன்று உலக ஆசைக்கு தங்களுடைய இதயத்தில் இடம் கொடுத்திருக்கும் அனேக ஊழியக்காரர்கள் இந்தவிதத்தில் தான் அழிந்து கொண்டிருக்கிறார்கள். நம்முடைய சிந்தனைகள் மட்டுமல்ல செயல்களும் தூய்மையானவையாக, கர்த்தரை மகிமைப்படுத்துபவனாக இருக்க வேண்டும்.*

### *3. உலக இச்சையில் இருந்து விடுபடுவதெப்படி?*

*கிறிஸ்துவின் துணையோடு மட்டுமே உலக இச்சைக்கு நம் வாழ்வில் இடம் கொடுக்காமல் இருக்க முடியும். "என்னைப் பலப்படுத்தியிருக்கிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு" என்கிறார் பவுல் (பிலிப்பியர் 4:13). நம்மில் அன்புகூருகிறவராலே நாம் முற்றும் ஜெயங் கொள்ளுகிறவர்களாக இருக்கிறோம் என்கிறார் பவுல் (ரோமர் 8:37). கிறிஸ்துவின் துணையோடு உலக இச்சைக்கு நாம் வாழ்வில் இடம் கொடாமல் இருக்க முடியும். அதை வெற்றிகொள்ளவும் முடியும். பவுல் கூறுவது போல் உங்களால் வாழ்க்கையில் தாழ்ந்திருக்கவும், வாழ்ந்திருக்கவும், திருப்தியா யிருக்கவும், பட்டினியாயிருக்கவும், பரிபூரணமடையவும், குறைவுபடவும் முடியுமா? (பிலிப்பியர் 4:12). அப்படி ஒரு கிறிஸ்தவனால் இருக்க முடியும். அப்படி இருக்க முடிந்தவர்களே தங்கள் வாழ்க்கையில் உலக இச்சையை வென்றவர்கள். ரோமர் 12:1-2 வரையுள்ள வசனங்களில் பவுல் சொன்னபடி நாம் வாழ முயற்சிக்க வேண்டும். நம்முடைய மனதை வேதபோதனைகளின்படி அன்றாடம் புதுப்பித்துக் கொள்ள வேண்டும். தேவனுடைய பரிசுத்தமான சித்தத்தின்படி அன்றாடம் நடக்கிறவர்களாக இருக்கவேண்டும்.*

*"உண்மையுள்ளவைகளெவைகளோ, ஒழுக்கமுள்ளவைகளெவைகளோ, நீதியுள்ளவைகளெவைகளோ, கற்புள்ளவைகளெவைகளோ, அன்புள்ளவை களெவைகளோ, நற்கீர்த்தியுள்ளவைகளெவைகளோ புண்ணியம் எதுவோ, புகழ் எதுவோ அவைகளையே சிந்தித்துக்கொண்டிருங்கள்" என்று பவுல் கூறியிருப்பதை நினைவுகூருங்கள் (பிலிப்பியர் 4:8). அந்தவிதமாக சிந்தித்தால் மட்டுமே செயலிலும் அப்படி வாழமுடியும். சிந்தனையும் செயலும் கிறிஸ்துவின் வேதபோதனைகளின்படி அமையும்போது உலக இச்சைக்கு நம் வாழ்வில் இடம் இருக்காது. இன்டர்நெட் வேசித்தனமோ, பணம், பணம் என்று பணத்திற்காக அலையும் போக்கோ, தவறான பெண்தொடர்போ, நகை மோகமோ, லேட்டஸ்ட் பேசனோ (Fashion) நம்மை ஒனறும் செய்யாது. உலகத்தில் நாம் வாழ்கின்றபோதும் உலக ஆசைக்கு நம் வாழ்வில் இடம்கொடுக்கக் கூடாது. பெரியவர்களே! இளைஞர்களே! உலகத்தில் அன்பு கூராதிருங்கள். பிசாசை எதிர்த்து வெற்றிகொண்டு, கர்த்தருக்கு உண்மையுள்ள வர்களாக வாழ்ந்து, தேவ இராஜ்யத்தின் ஆசீர்வாதங்களை அனுபவியுங்கள்.*

# கிறிஸ்தவக் கோட்பாடுகள்

**கேள்வி**: 79 ஒன்பதாவது கட்டளை என்ன?

**பதில்**: பிறனுக்கு விரோதமாய் பொய்சாட்சி சொல்லாதிருப்பாயாக, என்பது ஒன்பதாவது கட்டளையாகும்.

(யாத்திராகமம் 20:16)

**கேள்வி**: 80 ஒன்பதாவது கட்டளை மூலமாக என்ன எதிர்பார்க்கப்படுகிறது?

**பதில்**: மனிதர்களுக்கிடையில் உண்மை பராமரிக்கப்படவும், விஸ்தரிக்கப்படவும் வேண்டுமென்றும், நம்முடையதும், அயலானுடையதும் நற்பெயர் பாதுகாக்கப்பட வேண்டும் என்றும், முக்கியமாக சாட்சி சொல்லுவதில் அது காணப்பட வேண்டும் என்றும் ஒன்பதாவது கட்டளை எதிர்பார்க்கிறது.

(சகாரியா 8:16; 1 பேதுரு 3:16; அப்போஸ்தலர் 25:10; 3 யோவான் 12; நீதிமொழிகள் 14:5, 25)

**கேள்வி**: 81 ஒன்பதாவது கட்டளை எதைத் தடைசெய்கிறது?

**பதில்**: சத்தியத்தைக் குறித்து எவரும் தப்பெண்ணங்கொள்ளுதலையும், நம்முடையதும், அயலானுடையதும் பெயருக்குக் களங்கம் ஏற்படுத்துவதையும் ஒன்பதாவது கட்டளை தடைசெய்கிறது.

(ரோமர் 3:13; யோபு 27:5; லேவியராகமம் 19:16; சங்கீதம் 15:3)

**விளக்கவுரை:** இதுவரை நாம் பார்த்து வந்துள்ள எட்டு கட்டளைகளைப் போலவே இந்த ஒன்பதாவது கட்டளையும் மிகவும் முக்கியமானது. அதுவும் நமது இனத்தார் மத்தியில் இந்தக் கட்டளை பெருமளவில் மீறப்பட்டு வருகிறது. பாவம் இருக்குமிடமெல்லாம் இந்தக் கட்டளை மீறப்படுகிற போதும் நம்மத்தியில் இதை மீறுவது ஒரு பண்பாடாக வளர்ந்து நிற்கிறது. ஆகவே, இந்தக் கட்டளையை மிகக் கவனத்துடன் நாம் ஆராய்ந்து கர்த்தர் இதன் மூலம் போதிக்கும் சத்தியத்தை அறிந்து கொள்ள வேண்டும்.

வேதம் போதிக்கும் கர்த்தர் உண்மையானவராக இருக்கிறார். சங்கீதம் 31:5, அவரை சத்தியபரன் என்று அழைக்கிறது. தீத்து 1:2ன் மூலம் அவரால் பொய் சொல்ல முடியாது என்றும் தெரிந்து கொள்ளுகிறோம். அவர் பரிசுத்தமாக இருப்பதுபோல நாமும் பரிசுத்தமாக இருக்க வேண்டும் என்பது வேத போதனை (மத்தேயு 5:48). சத்தியத்தினால் ஒரு பொய்யும் உண்டாகாது என்று யோவான் (1 யோவான் 2:21) சொல்லுகிறார். கர்த்தர் உண்மையுள்ளவராக இருப்பதால் அவருக்கும் பொய்க்கும் எந்தத் தொடர்பும் இல்லை. சாத்தானே பொய்க்குக் காரணமானவனாக இருக்கிறான். வேதம் அவனை பொய்யின் பிதா என்று வர்ணிக்கிறது (யோவான் 8:44).

ஆதாம் பாவத்தில் வீழ்ந்த காலத்தில் இருந்தே, சத்தியம் எது? என்ற கேள்வி வரலாற்றில் தொடர்ந்து கேட்கப்பட்டு வந்துள்ளது. கர்த்தர், தன்னைப் பற்றிய சத்தியமான எண்ணங்களை மட்டும் கொண்டிருக்கவே மனிதனைத் தோற்றுவித்தார். கர்த்தரைப் பற்றிய உண்மைகளைக்குறித்து சிந்தித்து, அவற்றின்படிப் பேசி நடந்துகொண்டிருக்கும்போது மட்டுமே மனிதனால்

*உண்மையைப் பேசவும் உண்மையின்படி நடக்கவும் முடிந்தது. ஆனால், சாத்தான் மனிதனை ஏமாற்றி தனக்கு அடிமையாகும்படிச் செய்த நாளில் இருந்து மனிதன் நீதியைக்குறித்தும், சத்தியத்தைக்குறித்தும் தன்னுடைய சொந்த எண்ணங்களை வளர்த்துக்கொள்ள ஆரம்பித்தான். அன்றிலிருந்து அவன் சாத்தானின் பிடியில் சிக்கி உண்மையைப் பேசவும், உண்மையாக நடக்கவும் முடியாத நிலையை அடைந்தான். இயேசு கிறிஸ்து யூதர்களைப் பார்த்து ஒரு முறை, "நீங்கள் உங்கள் பிதாவாகிய பிசாசானவனால் உண்டானவர்கள்; உங்கள் பிதாவினுடைய இச்சைகளின்படி செய்ய மனதாயிருக்கிறீர்கள்; அவன் ஆதி முதற்கொண்டு மனுஷகொலைபாதகனாயிருக்கிறான்; சத்தியம் அவனிடத்தில் இல்லாதபடியால் அவன் சத்தியத்திலே நிலை நிற்கவில்லை; அவன் பொய்யனும் பொய்க்குப்பிதாவுமாமிருக்கிறபடியால் அவன் பொய் பேசும்போது தன் சொந்தத்தில் எடுத்துப் பேசுகிறான்." என்றார் (யோவான் 8:44). இதிலிருந்து கர்த்தருடைய சிந்தனைகளை நம் மனத்தில் கொண்டிருப்பதே சத்தியம் என்று அறிந்து கொள்ளுகிறோம். கர்த்தருடைய சிந்தனைகளுக்கு எதிரான எந்த சிந்தனையும் பொய்யாகும். இயேசு கிறிஸ்துவை தன் வாழ்வில் விசுவாசிக்கின்ற மனிதனால் மட்டுமே சத்தியத்தை அறிந்து அதன்படிப் பேசி நடக்க முடியும். இயேசுவே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறார் என்று வேதம் சொல்லுகிறது. இதனால் இயேசுவை விசுவாசித்த உடனேயே ஒரு மனிதன் சத்தியத்தை முழுவதுமாக அறிந்து அதன்படி நடக்கும் பூரணத்துவத்தை அடைந்துவிடுவான் என்று எண்ணிவிடக்கூடாது. எந்தவொரு விசுவாசியும் இந்த உலகத்தில் பூரணத்துவத்தை அடைய முடியாது. ஆனால், ஒரு விசுவாசி கிறிஸ்துவை விசுவாசித்த நாள் முதல் சத்தியத்தை அறிந்து அதன்படிப் பேசியும், நடக்கவும் கூடிய வல்லமையை அடைகிறான். அத்தோடு அவன் சத்தியத்தில் தொடர்ந்து வளர்ந்து பூரணத்துவத்தை நோக்கி நடை போடத்தொடங்குகிறான்.*

*நாம் உண்மையைப் பேசி அதன்படி நடக்க வேண்டுமானால் இரண்டு காரியங்கள் அவசியம்:*

*(1) முதலாவதாக, நாம் மனப்பூர்வமாக எதை நம்புகிறோமோ அதை மட்டுமே பேசுகிறவர்களாக இருக்க வேண்டும். ஒரு மனிதன் தான் வாயால் சொல்லு வதை உள்ளத்தில் மனப்பூர்வமாக நம்புகிறவனாக இல்லாமலிருந்தால் அவனை உண்மையுள்ளவன் என்று கூற முடியாது. கர்த்தர் உங்களுக்கு இன்றே சுகத்தைக் கொடுப்பார் என்று ஆத்துமாக்களைப் பார்த்து சொல்லுகிற ஒரு கூடில்லாத குருவிக்கு உண்மையில் அது நடக்குமென்பது சத்தியமாகத் தெரியாது. இருந்தாலும் தன்னுடைய சொந்த நன்மைக்காக அவன் அத்தகைய வாக்குறுதியை ஆத்துமாக்களுக்கு கொடுக்கிறான். இதைத்தான் பொய் என்று வேதம் சொல்லுகிறது. தான் உண்மையில் நம்பாததை (அது நடக்கும் என்று உறுதியாகத் தெரியாததை) ஒருவன் பேசும்போது அவன் பொய்யனாகிறான். இதேபோல ஒரு காரியத்தை செய்து முடிக்கிறேன் என்று வாக்குறுதி கொடுத்துவிட்டு அதை செய்யாமல் விடுவது நம்மவர்களுடைய பண்பாடு. இதை நம் மக்கள் அன்றாடம் காபி குடிப்பது போல் செய்துவருகிறார்கள். ஆனால், இப்படிச் செய்பவர்களை வேதம் பொய்யர்கள் என்கிறது. ஏன் தெரியுமா? அந்தக் காரியத்தை நிச்சயம் செய்து முடிக்க முடியும் என்பது தெரியாதபோது, செய்வேன் என்று வாக்குறுதி கொடுப்பது உண்மைக்குப் புறம்பாக நடப்பதாகும். உண்மை பேசி நடக்கவேண்டும் என்று வைராக்கியத்துடன் இருப்பவர்கள் அப்படியான வாக்குறுதியை ஒருபோதும்*

*கொடுக்க மாட்டார்கள். பொய் சொல்லுகிறோம் என்ற விவஷ்தையே இல்லாமல் நம்மில் பலர் இப்படி அன்றாடம் பொய்யர்களாக நடந்து வருகிறோம்.*

*(2) இரண்டாவதாக, நாம் உண்மையை மட்டுமே பேச வேண்டும். அதாவது, உண்மையென்று நமக்குத் தெரிந்ததை மட்டுமே நாம் பேச வேண்டும். ஒன்று உண்மையாகவும் இருக்கலாம் என்று யாரோ சொன்னதைக் கேட்டு நம்பி அதை மற்றவர்களுக்கு சொல்லுவது பொய் சொல்லுவதாகும். அப்படி நடப்பது ஒன்பதாம் கட்டளையை மீறி நடப்பதாகும். இப்படி உண்மை என்று நம்பி எத்தனைப் பேரைக்குறித்து நம்மத்தியில் பலர் பொய் பேசி வருகிறார்கள். புறம்பேசுவதும், பிறரைக்குறித்து தவறான செய்திகளைப் பரப்புவதும் பண்பாடாக நம்மத்தியில் வளர்ந்திருக்கிறது. தினத்தந்தி பத்திரிகையை வளர்த்தெடுத்திருக்கும் தமிழினத்தில் இது இருப்பது ஆச்சரியமல்ல. விசுவாசிகள் மற்றவர்களைப்பற்றி தவறான செய்திகளைப் பரப்புவது ஒன்பதாம் கட்டளையை மீறுகிற செயலாகும். இப்படிப் பொய் பேசுவது அநியாயமாக நம்மத்தியில் இன்று பண்பாடாக இருந்து வரும் கொடுமை ஒழிய வேண்டும். வேதம் சொல்லுகிறது, "உன் ஜனங்களுக்குள் அங்கும்மிங்கும் கோள் சொல்லித் திரியாயாக" (லேவி. 19:16) என்று. விசுவாசி தன் காதில் விழுவதையெல்லாம் உண்மையென்று நம்புகிறவனல்ல. முக்கியமாக மற்றவர்களைப் பற்றிய தவறான செய்திகளை அவன் உடனடியாக நம்பிவிட மாட்டான்; அவற்றைக் காதுகொடுத்துக் கேட்பதைத் தவிர்ப்பான். கேள்விப்படுகிற எதையும் அவன் ஆராய்ந்து பார்க்காமல் வெளியில் சொல்லவும் மாட்டான். வெறுமனே நான் கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லிவிடுவதால் ஒருவன் பரலோகம் போய்விடப் போவதில்லை. கிறிஸ்துவை விசுவாசிக்கிறேன் என்று சொல்லிவிட்டு அன்றாடம் ஒன்பதாம் கட்டளையை மீறிப் பொய் சொல்லி வருகிறவர்கள் பரலோகம் போகப் போவதாக நாம் வேதத்தில் வாசிப்பதில்லை.*

*சிலர், ஒரு காரியத்தை செய்வேன் என்று மனங்கூசாமல் சொல்லிவிட்டு பிறகு அதைச் செய்யாமல், ஏன் செய்யமுடியவில்லை என்பதற்கு குண்டுச்சட்டிக் கணக்கில் பல சாக்குப் போக்குகளைச் சொல்லுவார்கள். இது ஆத்துமாக்கள் மத்தியில் மட்டுமல்ல ஊழியக்காரர்கள் மத்தியிலும் சகஜமாக இருந்து வருகிற ஒரு பொய்யான செயல். இதைக் கர்த்தர் அடியோடு வெறுக்கிறார். ஒரு காரியத்தை செய்ய முடியும் என்றால் மட்டுமே அதைச் செய்வேன் என்று நாம் சொல்லப் பழக வேண்டும். செய்ய முடியுமா? முடியாதா? என்று தெரியாவிட்டால், அதை செய்வேன் என்று சொல்லுவது சுத்தப் பொய். கேட்கிறவர் மனங்கோணும்படி நடந்துவிடக்கூடாது, ஆகவே, அவர் சந்தோஷப்படுகிறமாதிரி ஏதாவது சொல்லவேண்டும் என்பதற்காக அந்தக் காரியத்தை செய்கிறேன் என்று சொல்லுவதை சுத்தத் தமிழில், நம்பிக்கைத் துரோகம் என்று அழைப்பார்கள். இதை 'எட்டப்பன் வேலை' என்று கிராமப்புறப் பாஷையில் சொல்லுவார்கள். முகத்தாட்சன்யம் பார்க்கும் காலரா வியாதி நம்மினத்தை ஆண்டு வருவதால் அது பாவமான வியாதி என்பதையே உணராமல் நாம் பொய்பேசி மற்றவர்களை ஏமாற்றிப் பொய்யர்களாக வாழ்ந்து வருகிறோம். ஒன்பதாம் கட்டளையை நாளுக்கு நாள் மீறி அதே வாயால் கர்த்தருக்கு அல்லேலூயாவும், ஸ்தோத்திரமும் சொல்லிக் கொண்டிருக்கும் பொய்யர்களுக்கு பரலோகத்தில் நிச்சயம் இடம் இருக்காது.*

*பொதுவாக நம்மத்தியில் காணப்படும் இன்னுமொரு பிசாசுப்பண்பாடு சொந்த நலனுக்காக சொல்லும் அன்றாடப் பொய்கள். உதாரணத்திற்கு, யாராவது நம்மைப் பார்க்க வீட்டிற்கு வந்திருந்தால் குளியலறையில் இருந்து கொண்டே மனைவியையோ, மகனையோ கூப்பிட்டு நாம் வீட்டில் இல்லை என்று வந்திருப்பவரிடம் சொல்லச் சொல்வது. இது ஒன்றும் அப்படிப் பெரிய பொய்யில்லை என்று பலர் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள். வீட்டில் இருக்கும்போதே நான் வீட்டில் இல்லை என்று போனிலோ அல்லது வந்திருப் பவரிடமோ சொல்லச் சொல்லுவது வடிகட்டின பொய். சுய நலநோக்கத்தில் ஏதாவதொரு நிலமையில் இருந்து தப்பிக்கொள்வதற்காக இப்படி சிந்தித்துப் பார்க்காமல் பலர் பொய் சொல்லிவிடுவார்கள். ஆனால், வேதமோ நன்மை வரும்படியாக தீமை செய்வது தகாது என்று கண்டிக்கிறது (ரோமர் 3:8).*

*சில வேளைகளில் பொய் சொல்லுவது அவசியம்தான் என்று சிலர் வாதாடுவார்கள். ஆபிரகாம் இப்படிச் செய்தானே! என்று உதாரணம் காட்டுவார்கள் (ஆதி. 12:13, 19; 20:2, 5, 12). ஆகவே, ஆபத்துக் காலத்தில் பொய் சொல்லுவது அப்படியொன்றும் பாவமில்லை என்பார்கள். ஆனால், இந்தவிதமான சிந்தனை சரியில்லை. இது வேதத்திற்குப் புறம்பானது. ஆபிரகாம் தன் வாழ்வில் பல தவறுகளை செய்திருக்கிறான். ஆனால், கர்த்தர் ஒருபோதும் அவற்றை நியாயப்படுத்தவில்லை. பொய் சொல்லக்கூடாது என்று கர்த்தர் கட்டளையிட்டிருப்பதால் அந்தக் கட்டளையை எந்த சூழ்நிலையிலும், எந்த விதத்திலும் மீற முடியாது. மீறுவது பாவம். அதை ஆபிரகாம் செய்தாலும் பாவம் பாவமே. ஆகவே, கர்த்தருடைய அனுமதியுடன் ஆபிரகாம் பொய் சொன்னான் என்று வேதத்தில் இருந்து நிரூபிக்க முடியாது. ஆனால், சில தவிர்க்கமுடியாத சந்தர்ப்பங்களில் நம் எதிரிகளிடம் இருந்து தப்புவதற்காக நமக்குத் தெரிந்திருக்கும் உண்மைகளில் ஒரு சிலவற்றை வெளிப்படையாக சொல்லாமலிருக்க கர்த்தர் அனுமதிக்கிறார் என்பதை நாம் வேதத்தில் இருந்து உதாரணம் காட்டலாம். சாமுவேல் ஒரு சந்தர்ப்பத்தில் தனக்குத் தெரிந்திருந்த உண்மைகளில் ஒன்றை மட்டும் சொல்ல கர்த்தர் அனுமதித்தார் (1 சாமுவேல் 16:1-5). சாமுவேலை இரண்டு காரியங்களைச் செய்யும்படிக் கர்த்தர் கட்டளையிட்டார். அரசன் அந்தக் காரியங்கள் என்ன என்று கேட்டு சாமுவேலை வற்புறுத்தியபோது, அவற்றில் ஒன்றை மட்டும் அரசனுக்கு சொல்லும்படிக் கர்த்தர் சாமுவேலுக்கு கட்டளையிட்டார். எந்தக் காரியத்தை சொன்னால் சாமுவேலுக்கு ஆபத்து ஏற்படுமோ அந்தக் காரியத்தை சொல்லாமல், ஆபத்து ஏற்படுத்தாத காரியத்தை மட்டும் அரசனுக்கு சொல்லும்படிக் கர்த்தரே அனுமதித்தார். ஆனால், இங்கே நாம் கவனிக்க வேண்டிய உண்மை சாமுவேல் பொய் சொல்லவில்லை என்பதுதான். நமக்குத் தெரிந்திருக்கும் உண்மைகள் அனைத்தையும் அறிந்துகொள்வதற்கு தீய மனிதர்களுக்கு எந்த அருகதையும் இல்லை என்பதை இந்த உதாரணத்தின் மூலம் கர்த்தர் விளக்குகிறார். அதேசமயம் பொய் சொல்லுவதற்கு நமக்கு அதிகாரம் இருப்பதாகக் கர்த்தர் சொல்லவில்லை என்பதையும் கவனிக்கத் தவறக்கூடாது.*

*எந்த சந்தர்ப்பத்திலும் பொய் சொல்லக்கூடாது என்று போதிக்கும் ஒன்பதாம் கட்டளை சாட்சி சொல்லுவதைப் பற்றி விஷேசமாகக் குறிப்பிடு கிறது. அதாவது, சில சந்தர்ப்பங்களில் உண்மையைத் தெளிவாக வெளிப்படையாக சொல்லுவது ஏனைய சூழ்நிலைகளைவிட மிக*

*அவசியமானது என்கிறது. உதாரணமாக நீதிமன்றத்தில் சாட்சி சொல்லும்போது ஏனைய சந்தர்ப்பங்களைவிட மிகவும் அக்கறையோடு நாம் உண்மையை விளக்க வேண்டும். சில வேளைகளில் உண்மை பேசுவதில் நாம் அசட்டையாக இருந்து விடுவோம் என்பது தெரிந்துதான் நீதிமன்றத்தில் நாம் கர்த்தருக்கு முன் உண்மையை மட்டும் சொல்லுவோம் என்று வாக்குறுதி எடுக்கும்படி செய்கிறார்கள். நீதிமன்றத்தில் நாம் உண்மையைத் தவிர வேறு எதையும் பேசக்கூடாது. நாம் நமது அன்றாட வாழ்க்கையில் எல்லாச் சந்தர்ப்பத்திலும் உண்மை பேசி உண்மையுள்ளவர்களாக நடக்கவேண்டும் என்று இயேசு கிறிஸ்து நமக்குப் போதித்திருப்பதால், அவிசுவாசிகளுக்கு முன்பு நீதிமன்றத்தில் சாட்சி சொல்லுகிறபோது அதேவிதமாக கவனத்தோடு சத்தியத்தை மட்டும் பேச வேண்டும் என்கிறது ஒன்பதாம் கட்டளை.*

*இந்த நேரத்தில் என்னால் ஒரு உண்மையைக் குறித்துப் சிந்தித்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. விசுவாசிகள் சத்தியத்தை மட்டும் பேச வேண்டும், அதன்படி நடக்க வேண்டும் என்று ஒன்பதாம் கட்டளை மூலம் கர்த்தர் இத்தனை அக்கறையோடு பேசும்போது, சத்திய வேதத்தை ஆழமாகப் படித்தறிந்துகொள்ளாமலும், அதைப்படிப்பதில் எந்தவித அக்கறை எடுக்காமலும், பிரசங்க மேடையில் ஏறி ஏனோதானோவென்று ஆத்துமாக் களுக்கு வேதசத்தியம் என்ற பெயரில் தாம் நினைத்ததைப் பொய்யாகச் சொல்லியும், ஞாயிறு பாடசாலைகளில் குழந்தைகளுக்கு வேதபோதனை யென்ற பெயரில் வெறும் கட்டுக்கதைகளைச் சொல்லியும் தங்களைத் தாங்களே ஏமாற்றி வரும் எத்தனையோ ஊழியக்காரர்கள், ஊழியம் என்ற பெயரில் தாங்கள் ஒன்பதாம் கட்டளையை மீறிக்கொண்டிருப்பதை அறியாமல் இருக்கிறார்கள் என்பதை நினைத்துப் பார்க்காமல் இருக்க முடியவில்லை. கர்த்தரின் வார்த்தையை வைத்துக் கர்த்தரின் பெயரில் பொய் சொல்லி வருபவர்கள் இருதயத்தில் இயேசுவுக்கு துப்பரவாக இடமிருக்க முடியாது. அதேபோல வேதம் போதிக்கும் சத்தியங்களை உண்மையென்று ஏற்றுக் கொள்ள மறுக்கிறவர்களும் பொய்யர்களே. இப்படி நடந்து கொள்கிறவர்கள் சத்தியதேவனை சந்தேகிக்கிறவர்களாக இருக்கிறார்கள். விசுவாசிகள் என்றுகூறிக் கொண்டு வேதம் போதிக்கும் சத்தியங்களை ஏற்று அதன்படி நடக்க மறுப்பவர்கள் ஒன்பதாம் கட்டளையை மீறிக்கொண்டிருக்கிறார்கள்.*

*ஒன்பதாம் கட்டளையை நாம் மீறாமல் இருப்பதற்கான சில வழிமுறை களைக் குறித்து இனி சிந்திப்போம். (1) நாம் எதையும் பேசுவதற்கு முன்பு அதைக்குறித்து சிந்தித்துப் பார்த்து அதன்பிறகு பேசுவது உண்மை பேச உதவும் (நீதிமொழிகள் 10:19; யாக்கோபு 3:5). (2) பேச வேண்டிய சந்தர்ப்பங்களில் பேசாமல் இருந்துவிடுவது பொய்யாக நடப்பதாகும். அது பொய்க்கு உடந்தை யாய் இருக்கும் நடவடிக்கையாகும். சுற்றி நடக்கும் தீமைகளைக் கண்டும் காணாமலும் இருந்துவிடுவது ஒன்பதாம் கட்டளையை மீறுவதாகும். (3) மனிதனைவிட கர்த்தருக்குப் பிரியமாக நடந்துகொள்வதை நாம் வாழ்க்கைத் தத்துவமாக வைத்திருக்க வேண்டும். பிறருடைய மனங்கோணக்கூடாது, அவர்களுடைய நம்பிக்கைக்குப் பாத்திரமாக இருந்துவிடவேண்டும் என்ற அடிப்படையில்தான் பொதுவாக நமது எல்லாப் பேச்சுக்களும் அமைந்து விடுகின்றன. ஆனால், கர்த்தருக்கு விசுவாசமாக நடப்பது மட்டுமே நமது கடமை என்பதை உணர்ந்து நாம் சிந்தித்துப் பேசத்தொடங்குவோமானால் உண்மையை மட்டுமே எப்போதும் பேசுபவர்களாக இருப்போம்.*

# மத்தியகால ஆரம்பம்

## (திருச்சபை வரலாறு)

ஆறாம் நூற்றாண்டின் இறுதிப்பகுதியில் ஐரோப்பாவில் புதிய நிகழ்ச்சிகள் நிகழ ஆரம்பித்தன. இதுவரை இருந்து வந்த கிரேக்க, ரோம கலாச்சாரத்தின் பாதிப்புகள் குறையத் தொடங்கின. ரோம சிந்தனைகளோடு டியூடோனிக் சிந்தனைகள் கலந்து புதிய சிந்தனைகள் உருவாகி பரவத் தொடங்கின். முதலாம் கிரெகரி போப்பாக பதவியேற்ற 590ம் ஆண்டை மத்திய காலத்தின் ஆரம்பமாகக் கருதலாம். இத்தாலியின் பெரும்பகுதி இக்காலத்தில் போராலும், பஞ்சத்தாலும் பாதிக்கப்பட்டிருந்தது. ரோம சாம்ராஜ்யம் 476ல் வீழ்ந்தபோது இத்தாலிக்கு வெளியில் தனது மகிமையை இழந்திருந்த கத்தோலிக்க சபை மறுபடியும் அந்நிலையை அடைய முடியாத நிலையில் இருந்தது. ரைன், டான்யூப் நதிப்பிரதேசங்களை கத்தோலிகக சபை இழந்திருந்தது. பாபேரியன்களால் கைப்பற்றப்பட்ட ரோமப்பிரதேசங்களில் ஆரியனிசமும் வேறு வேதவிரோதப்போதனைகளும் தலைதூக்கி ஆண்டு கொண்டிருந்தன. ஸ்பெயினிலும் (Spain), கோலிலும் (Gaul), இல்லிரியாவிலும் (Illyria) போப்பின் அதிகாரம் பலவீனமாகி இருந்ததோடு ஆபிரிக்காவில் அது இருந்த இடம் தெரியாமல் போயிருந்தது.

### மகா கிரெகரி (590-604) (Pope Gregory the great)

கிரெகரி (Gregory I) ரோமின் போப்பாக நியமிக்கப்பட்டபோது நாட்டில் நிலமை இவ்வாறே இருந்தது. கிரெகரியின் தலைமைத்துவம் கிரெகரிக்குப்பின் வந்த போப்புக்களுக்கு சிறந்த உதாரணமாக இருந்தது. ஆகவே, முதலாம் போப் என்ற பட்டம் முறையாக கிரெகரிக்கே கொடுக்கப்பட வேண்டும். போப் லியோ (440-461) (Pope Leo I), ஏழாம் கிரெகரி (1075-1085) (Gregory vii), மூன்றாம் இனொசன்ட் (1198-1216) (Innocent III) ஆகியோரில் கிரெகரிக்கே போப் பதவியை வளர்த்து வரலாற்றில் நிலைநிறுத்தியதில் முதலிடம் கொடுக்கப்பட வேண்டும்.

கிரெகரி 540ல் ரோமில் ஒரு செல்வமிக்க குடும்பத்தில் பிறந்தார். தன்னுடைய திறமையினால் 573ல் ரோம் நகரின் தலைவனாக பதவி வகித்தார். கர்த்தருக்குப் பணி செய்ய விரும்பி 574ல் தன்னுடைய சொத்துக்களையெல்லாம் வறுமையில் வாடியவர்களுக்குக் கொடுத்ததோடு சிசிலியில் ஆறு குருமடங்களையும் கட்டினார் கிரெகரி. சமய வாழ்க்கைக்கு தன்னை உட்படுத்திக்கொண்டு பெனடிக்டைன் பிரிவில் இணைந்து குருத்துவத்திற்காகப் பயிற்சி பெற்றார். போப் இரண்டாம் பெலேஜியஸ் (Pelagius II) 579ல் கிரெகரியை கொன்ஸ்தாந்தி நோபிளுக்கு அனுப்பியபோது அங்கே வெளியுறவுப்பணியில் அதிக அனுபவத்தைப் பெற்றார் கிரெகரி. 590ல் கிரெகரி போப்பாகப் பதவியேற்றார். கிரெகரியைப் பற்றி எழுதும் ஒரு வரலாற்றறிஞர், "கிரெகரி அதிகாரத்தை விரும்புபவர், வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்ற துடிப்புடையவர், துறவரத்தில் தீவிரமானவர், பக்தியில் வைராக்கியமானவர், குருத்துவத்தில் பற்றுடையவர் ஆனால், மிகவும் தாழ்மையானவர்" என்று எழுதுகிறார்.

ஏற்கனவே வெளியுறவுத்துறையில் கிரெகரி பெற்றிருந்த அனுபவம் போப்

பதவிக்கு பெரிதும் கைகொடுத்தது. இதனால் இத்தாலியிலேயே அரசியலில் மிகுந்த செல்வாக்குள்ள மனிதராக விளங்கினார் கிரெகரி. ரோமைச் சுற்றி இருந்த பகுதிகளிலும், சிசிலியிலும் (Sicily), கோலிலும் (Gaul), ஆபிரிக்காவிலும் போப்பின் அதிகாரத்திலிருந்த பகுதிகள் அனைத்தையும் திறமையாக நிர்வகித்து எதிர்காலத்தில் போப் உலகளாவிய உறவை ஏற்படுத்தி அதிகாரம் செலுத்துவதற்கான அடித்தளத்தை கிரெகரி அமைத்தார். நாடுகளில் இழந்து போயிருந்த போப்பின் அதிகாரத்தை மீண்டும் நிறுவ பெரிதும் உழைத்த கிரெகரி கத்தோலிக்க சமயத்தைப் பரப்புவதின் அவசியத்தை உணர்ந்தார். ஐரோப்பாவின் மூன்றில் இரண்டு பங்கு கடவுளை அறியாதிருக்கிறது என்பதை உணர்ந்த கிரெகரி இங்கிலாந்தின் ஆங்கிலேய சாக்சன்களை (Anglo Saxons) மதம் மாற்ற ரோம மிஷனரிகளை அனுப்ப ஆவல் கொண்டார். கடவுளை அறியாதவர்களுக்கு கடவுளைப்பற்றி அறிவிக்க குருமார்களை அனுப்பும் முயற்சியிலும் ஈடுபட்டார்.

கத்தோலிக்க சபையே முழு உலகத்திற்கும் ஆன்மீகத் தலைமைத்துவத்தை அளிக்கவேண்டும் என்று போப் முதலாம் லியோ (440-461) கூறியிருந்தார். அதை கிரெகரி மறுபடியும் புதுப்பித்தார். 558ல் கொன்ஸ்தாந்திநோபிளின் தலைவனாக இருந்த யோவான், தன்னை முழு உலகத்துக்கும் போப்பாக அறிவித்தபோது, கிரெகரி ரோமப் பேரரசனிடம் குறைகூறி யோவானை அகங்காரம் பிடித்தவன், கொடியவன், அந்திக்கிறிஸ்து என்றெல்லாம் அறிக்கையிட்டார். அதேநேரம் கிரெகரி ஊழியர்களுக்கெல்லாம் ஊழியர் என்ற பட்டத்தைத் தனக்குத் தானே சூட்டிக்கொள்ளத் தவறவில்லை. இன்றைக்கும் போப் இந்தப் பட்டத்தைப் பயன்படுத்திக் கொள்கிறார். யோவானைக் குறைகூறிய கிரெகரியின் செயல் சிரிப்புக்கிடமானது. ஏனெனில், கிரெகரி தன்னை பேதுருவுக்கு அடுத்த சபைத்தலைவராகவும், உலகத்திலுள்ள கிறிஸ்துவின் குரு என்றும் கூறி தன்னையே உலகத்தின் சபைகளனைத்திற்கும் தலைவனாக நியமித்துக் கொண்டு யோவானை அகங்காரம் பிடித்தவன் என்று கூறியது எந்தவகையிலும் நியாயமற்றது. தானே சபைகளுக்கெல்லாம் தலைவன் என்பதை கிரெகரி மிக உறுதியாக எங்கும் அறிவித்துக் கொண்டார். இதை உலகின் ஏனைய பகுதி சபைகளும் அங்கீகரிக்கத் தொடங்கின. ஆகஸ்தீனைப் போலவே கிரெகரியும், கத்தோலிக்க சபைக்கு வெளியில் வேறெங்கிருந்தும் எவரும் இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள முடியாது என்று கூறினார். இரட்சிப்பை அளிக்கக்கூடிய கத்தோலிக்க சபைக்குத் தானே தலைவன் என்றும் கிரெகரி அறிவித்தார்.

பக்திமானாக இருந்த கிரெகரி வேதத்திலும் நம்பிக்கையுள்ளவராய் இந்தக் கொடிய உலகத்தை நியாயந்தீர்க்க வரப்போகும் கிறிஸ்துவின் வருகையை எதிர்நோக்கியவராய் இருந்தார். நல்ல பிரசங்கியாகவும், இறையியல் எழுத்தாளராகவும் விளங்கினார். ஓரிகனின் காலத்தில் உருவான பேர்கட்டரி (Purgatory) என்ற போதனையை (அதாவது இறந்தவர்கள் உடனடியாக பரலோகத்தையோ நரகத்தையோ அடையாமல் இடைப்பட்ட ஓரிடத்தில் தங்கள் பாவநிவாரணத்திற்காக தங்கியிருப்பார்கள் என்ற போதனை) கிரெகரி அதிகாரபூர்வமான சபைப் போதனையாக மாற்றினார். கிரெகரியின் காலத்திலேயே சபைகளில் படங்களையும், உருவங்களையும் வைக்கும் வழக்கம் ஆரம்பமாகியது. இந்த வழக்கத்தை அனுமதித்தபோதும் கிரெகரி அவற்றை வழிபடக்கூடாது என்று கூறினார். கஷ்டமான நிலையில் இருந்த ரோமன்

*கத்தோலிக்க சபையை பெலப்படுத்தி தனக்குப் பின்னால் வரவிருக்கும் போப்புக்களின் தலைமைத்துவத்தை நிலைநிறுத்தும் பணியை மிகவும் திறமையாக கிரெகரி செய்து முடித்திருந்தார்.*

## பிரித்தானியாவில் கிறிஸ்தவமும், மிஷனரி ஊழியமும்

*போப் கிரெகரி தன்னுடைய நண்பனும், குருவுமாக இருந்த ஆகஸ்தீனை ஆங்கிலேய சாக்சன்களுக்கு* (Anglo Saxons) *கடவுளைப் பற்றி அறிவிக்க அனுப்பி வைத்தார். மூன்றாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியிலேயே சுவிசேஷம் பிரித்தானியாவுக்கு கொண்டு செல்லப்பட்டிருந்தது அனேகர் அறியாத செய்தியாக இருக்கிறது. மூன்றாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் டேர்டூலியனின் எழுத்துக்களில் இருந்தும், அதற்கு 45 ஆண்டுகளுக்குப் பிறகு ஓரிகனின் எழுத்துக்களில் இருந்தும் இதனை அறிந்துகொள்ள முடிகின்றது. ஜேர்மனியில் இருந்து இங்கிலாந்துக்கு வந்த ஆங்கிலேய சாக்சன்கள் கிழக்கு இங்கிலாந்திலும், தென்கிழக்கு ஸ்கொட்லாந்திலும் கிறிஸ்தவத்தை அழித் தொழித்தனர். ஆனால், மேற்குப்பகுதியில் இருந்தவர்கள் தொடர்ந்து கிறிஸ்தவர்களாக இருந்ததோடு அங்கே செல்டிக் சபை அயர்லாந்துடனும், ஸ்கொட்லாந்துடனும் இருந்த தொடர்பால் வளர்ந்தது.*

*597ல் ஆகஸ்தீன் 40 பேரோடு தெனெட்* (Thanet) *என்ற தீவில் இறங்கினார். இந்த வருடத்திலேயே ஸ்கொட்லாந்திலும், அயர்லாந்திலும் ஊழியம் செய்து வந்த செயின்ட் கொலம்பா அயோனாவில் மரணமானார். கென்ட்டின் அரச னான எத்தள்பர்ட்* (Ethelbert) *ரோம மிஷனரிகளுக்கு உதவி செய்தான். அவனுடைய மனைவியான பேர்த்தா* (Bertha) *பிரான்சின் இளவரசி. அவள் கிறிஸ்துவை விசுவாசித்தாள். ஆனால், இவர்களுக்கு உதவி செய்யுமுன் எத்தள்பர்ட், இந்தப் புது விசுவாசத்தைக் குறித்து தான் ஆராய்ந்தபின்பே ஏற்றுக்கொள்ளுவேன் என்று தெரிவித்திருந்தான். ஒன்பது மாதங்களுக்குள் அவனும் பத்தாயிரம் பேரும் மதம் மாறினார்கள். ஆகஸ்தீன் கென்டபரியில் செயின்ட் மார்டின் சபையில் தன்னுடைய தலைமையகத்தை அமைத்துக் கொண்டார். பின்பு இங்கிலாந்தின் மத வாழ்வில் அதிக செல்வாக்கு செலுத்திய பெரும் கெத்தீட்ரல் இங்கேயே உருவானது. 604ல் மெலிட்டஸ்* (Mellitus) *செயின்ட் பவுல் ஆலயத்தை நிருவி இலண்டனின் முதலாவது பிசப் பாக பதவியேற்றார். அதே காலப்பகுதியில் ஜஸ்டஸ்* (Justus) *ரொச்செஸ்டரின்* (Rochester) *பிசப்பாக நியமனம் பெற்றார்.*

*செல்டிக் சபையை ரோம சபையோடு இணைப்பதற்கு ஆகஸ்தீன் எடுத்த முயற்சிகள் வெற்றியடையவில்லை. அவர்கள் தனித்து நிற்பதிலேயே உறுதியாக இருந்தனர். ஆகஸ்தீன் 604ல் மரணமடைந்தார். கென்டபரி கெத்தீட்ரலை* (Canterbury cathedral) *நிறுவியதே ஆகஸ்தீனின் சிறப்பான பணியாக இருந்தது. இந்தக் கெத்தீட்ரல் பின்பு நாடு முழுவதும் தனது செல்வாக்கைப் பரப்பியது.*

*பெட்ரிக்* (Patrick) *அயர்லாந்தில் 432ல் இறங்கிய காலத்தில் இருந்து சுவிசேஷம் அந்த நாட்டில் பரவ ஆம்பித்தது. பெட்ரிக் ரோம சபையின் அதிகாரத்தை ஏற்றுக் கொண்டதற்கான எந்தவித சாட்சியங்களும் இல்லை. 397ல் நினியன்* (Ninian) *ஸ்கொட்லாந்தில் சபையையும், குருமடத்தையும் நிறுவியதோடு சுவிசேஷத்தை அந்நாட்டின் வடபகுதிகளுக்கும் கொண்டு சென்றார். அதற்குப்பிறகு அனேக மிஷனரிகள் வந்து சென்றார்கள். இருந்தபோதும் இவர்களையெல்லாம்விட வெற்றிகரமாக ஊழியம் செய்தவர்*

அயர்லாந்தில் இருந்து அயோனாவிற்கு (Iona) 563ல் வந்த செயின்ட் கொலம்பா (St. Columba) என்பவர். அவர் மிகச்சிறந்த சுவிசேஷகராக இருந்தார். இவரோடு சேர்ந்து பணிபுரிந்தவர்கள் முப்பது வருடங்களுக்குள் நொதாம்பிரியாவிலிருந்து தெற்கில் தெம்ஸ்வரை ஊழியப்பணி புரிந்திருந்தனர்.

## திருச்சபையில் ஏற்பட்டிருந்த மாற்றங்கள்

கிரெகரி 604ல் இறந்தபோது போப்பின் அதிகாரம் பெருமளவுக்கு வளர்ந்து ரோமன் சபையும் பலவித மாற்றங்களை அடைந்திருந்தது. முதலாம் நூற்றாண் டில் உருவான திருச்சபைக்கும், ஏழாம் நூற்றாண்டின் ஆரம்பத்தில் இருந்த ரோமன் சபைக்கும் இடையில் இருந்த மாற்றங்களைக் குறித்து சிந்திக்காமல் இருக்க முடியாது. இம்மாற்றங்கள் எந்தளவுக்கு மெய்க்கிறிஸ்தவத்தை விட்டு ரோம சபை விலகிப் போயிருந்தது என்பதைத் தெளிவாக உணர்த்துகின்றன.

### போப்பின் அதிகாரம்

திருச்சபை ஆரம்பித்த காலத்தில் வேதபோதனையின்படி அது மூப்பர்களால் மட்டும் ஆளப்பட்டது. இப்போது அது மாறி தனி மனிதனான போப் சகல அதிகாரங்களையும் தன் கையில் வைத்திருந்து, எந்தத் தாழ்மையும் இன்றி நாட்டரசர்களுக்கு சமமான அதிகாரத்தைக் கொண்டு சில வேளைகளில் அவர்களையும் வெற்றிகொள்ளும் விதத்தில் நடந்து கொண்டார். அதுவும் உலகெங்குமுள்ள திருச்சபைகளுக்குத் தான் மட்டுமே தலைவன் என்றும் போப் தன்னை அறிவித்துக் கொண்டார். இது எந்தளவுக்கு திருச்சபைத் தலைமை மாறிவிட்டது என்பதை உணர்த்துகிறது.

### திருவிருந்து

திருவிருந்து கிறிஸ்துவை நினைவுகூரும் சாதனமாக தொடர்ந்து நடைபெற்று வந்தாலும், அது ஒரு சடங்காச்சாரியமாக வெகுவேகமாக மாறிக்கொண்டு வந்தது. திருவிருந்தின்போது கிறிஸ்து (ஆத்மீக ரீதியில் அல்லாமல்) சரீர பூர்வமாக (physically present) விசுவாசிகள் மத்தியில் பிரசனமாக இருக்கிறார் என்ற நம்பிக்கை எங்கும் பரவியிருந்தது. 831ல் திருவிருந்தின்போது அப்பமும், திராட்சை இரசமும் கிறிஸ்துவின் சரீரமாக மாறுகின்றது என்ற போதனை எழுத்தில் வெளியிடப்பட்டது. 1215ல் அது ரோமன் கத்தோலிக்க சபையின் அதிகாரபூர்வமான போதனையாக அறிவிக்கப்பட்டது.

### பேர்கட்டரி (ஆத்மா திருத்தம் பெறும் இடம்)

ஆகஸ்தீன், தீயின் மூலமாக ஆத்துமாக்களின் பாவங்களுக்கு நிவாரணம் தேட முடியும் என்ற எண்ணத்தை வெளியிட்ட காலத்தில் இருந்தே ஆத்மா திருத்தம் அடைவதற்காக ஒரு இடம் இருக்கின்றது என்ற கொள்கை உறுதி பெறத் தொடங்கியது. இந்தப் போதனை கடவுளை அறியாதவர்கள் மத்தியி லேயே பெருமளவில் காணப்பட்டது. அதாவது பூமிக்கு கீழுள்ள ஓரிடத்தில் மனிதர்களின் ஆத்துமாக்கள் தங்கள் பாவ நிவாரணத்திற்காக கடுந்துன்பத்தை அனுபவிக்கிறது என்பதே பேர்கட்டரி எனப்படும் இந்தப் போதனை. இது முதலாம் கிரெகரியால் அங்கீகரிக்கப்பட்டு எங்கும் பரவ ஆரம்பித்தது. 1439ல் இது ரோமன் கத்தோலிக்க மதத்தின் அதிகாரபூர்வமான போதனையாக புளோரன்ஸ் கவுன்சிலால் அறிவிக்கப்பட்டது.

### மரித்தவர்களுக்கும், புனிதர்களுக்குமான ஜெபம்

பெர்கட்டரி பற்றிய போதனைகள் உறுதிபெற்று பரவ ஆரம்பித்தபோது இறந்தவர்களுக்காக சடங்குகள் செய்யும் முறைகளும் உருவாயின. புனிதர்

*களையும், இரத்தசாட்சியாக இறந்தவர்களையும் புனிதமானவர்களாகக் கருதி அவர்களுக்கு ஆண்டுவிழாக் கொண்டாடும் முறைகளும் ஆரம்பித்தன. அத்தோடு காலம் போகப்போக புனிதர்களுக்காக ஜெபம் செய்யும் முறையும் வழக்கில் வந்தது. இது 787ல் நைசியாவின் இரண்டாம் கவுன்சிலால் கத்தோலிக்க சபையின் அதிகாரபூர்வமான போதனையாக அறிவிக்கப்பட்டது.*

### மரியாள் ஆராதனை

*எபேசியக் கவுன்சில் 431ல் மரியாளை கடவுளின் தாயாக* (Theotokos - Mother of God) *அறிவித்த காலத்தில் இருந்தே அவளைக் கடவுளாகக் கருதும் வழக்கம் அதிகரித்தது. ஆனால், அதற்கு எதிர்ப்பும் இருந்து வந்தது. ஆறாம் நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் மரியாளிடம் ஜெபம் செய்யும் முறையும், அவளுக்கு விழா எடுக்கும் வழக்கமும் (மார்ச் 25) வழமைக்கு வந்தது. மரியாளை கடவுளின் தாயாகக் கருதும் முறை கடவுளை அறியாத சமூகத்தில் இருந்து பெறப்பட்ட போதனையாகும்.*

### பாவமன்னிப்பு

*சபை ஆரம்பமான காலத்தில் கொடிய பாவங்களை செய்தவர்கள் திருந்தும்போது சபைமுன் பாவ அறிக்கை செய்வது வழக்கில் இருந்தது. ஆனால் போப் முதலாம் லியோவின் காலத்தில் இருந்து தனிமையில் ஒரு குருவிடம் மட்டும் பாவ அறிக்கை செய்யும் வழக்கம் ஆரம்பித்தது. ஆரம்பத்தில் பாவ அறிக்கை செய்வது கட்டாயமானதாக இருக்கவில்லை. விருப்பப்பட்டவர் கள் மட்டுமே அதைச் செய்யும்படியாக எதிர்பார்க்கப்பட்டார்கள். ஆனால், 763ல் பிசப் மெட்சினால் அது கட்டாயபூர்வமானதாக அறிவிக்கப்பட்டது.*

### ஆராதனை ஸ்தலங்கள்

*கிறிஸ்தவர்கள் மத்தியில் செல்வம் அதிகரிக்கத் தொடங்கியபோது ஆராதனை ஸ்தலங்களும் ஆடம்பரமான முறையில் அமையத் தொடங்கின. முதலாம் கிரெகரியின் காலத்தில் ரோமில் இருந்த ஏழுசபைகளும் ஆடம்பர மாகக் கட்டப்பட்டிருந்தன. இருநூறு வருடங்களுக்கு முன்பு ஜெரோமும், கிரிசொஸ்தோமும் இந்த ஆபத்தைக் குறித்து எச்சரித்திருந்தனர். ஜெரோம், பரிசுத்த வாழ்க்கை மட்டுமே மெய்யான ஆலயம் என்று கூறியிருந்தார். 814ல் சபைகளில் உருவச்சிலைகளை வைத்து வழிபடும்முறை பெருகிக் காணப் பட்டது.*

### ஆசாரித்துவம் (Priesthood)

*சபைகளில் கடவுளுக்கும் மனிதர்களுக்கும் இடையில் இருந்து ஆத்மீகக் காரியங்களைச் செய்யும் ஆசாரித்துவ முறை வழமைக்கு வந்தது. குருக்கள் இந்தச் சடங்குகளைச் செய்யும் ஆல்டர்* (Altar) *புனிதமானதாகக் கருதப்பட்டது. விசுவாசிகளின் ஆசாரித்துவம் என்ற வேதபோதனைக்கு சாவு மணி அடிக்கப்பட்டு கடவுளை அறியாத மக்கள் மத்தியில் காணப்பட்ட ஆசாரித்துவ முறை திருச்சபையில் ஆரம்பித்தது.*

### தூபம் காட்டுதல் (Incense)

*ஆரம்பத்தில் ஆலயத்தைத் தூய்மையாக வைத்திருப்பதற்காக ஆரம்பித்த தூபம் காட்டும் வழக்கம் பின்பு ஆராதனையின் ஒரு பகுதியாக மாறியது. முதல் நான்கு நூற்றாண்டுகளில் இது காணப்படவில்லை.*

*இந்தவகையில் உலகில் இருந்த திருச்சபை படிப்படியாக இன்று நம்மத்தியில் இருக்கும் ரோமன் கத்தோலிக்க சபையாக உருமாறியது.*

**சிந்தனையைத் தூண்டும் ஒரு புதிய வெளியீடு**

# ஏன் பிரசங்கம்?

*இன்று தமிழினத்தின் மத்தியில் பிரசங்கம் தரமிழந்து, வல்லமையற்று, வெறும் உப்புச்சப்பில்லாத வார்த்தை ஜாலமாக இருந்து வருவது ஆத்துமாக்கள் அறிந்துணர்ந்ததோர் உண்மை. தமிழ் கிறிஸ்தவ சபைகளில் பிரசங்கம் இத்தகைய நிலையை அடைவதற்குக் காரணம் யாது? இந்நிலை மாறி தரம் வாய்ந்த பிரசங்கங்களால் தமிழ் கிறிஸ்தவம் வளர, உயர நாம் செய்ய வேண்டியதென்ன? என்பது பற்றியெல்லாம் ஆராய்ந்து பிரசங்கம் பிரசங்கமாயிருக்க தகுந்த வேதபூர்வமான வழிகளைச் சுட்டிக் காட்டுகிறது இச்சிறு நூல்.*

# ஏன் பிரசங்கம்?

*இதை வாசித்த ஒரு பிரசங்கி நமக்கெழுதிய மடலில், "இது ஒவ்வொரு பிரசங்கியும் வாசிக்க வேண்டிய ஆக்கம்; பிரசங்கிகளின் பிரசங்க ஊழியம் சீர்படவும், வேதரீதியில் அமையவும் இது நிச்சயம் உதவும்" என்று எழுதியிருந்தார்.*

# ஏன் பிரசங்கம்?

*இது பிரசங்க ஊழியத்திலுள்ளவர்கள் மட்டுமல்ல, ஒவ்வொரு ஆத்துமாவும் வாசிக்க வேண்டிய சிறுநூல். எத்தகைய பிரசங்க ஊழியத்தின் கீழ் வாராவாரம் குடும்பத்தோடு இருந்து கர்த்தரை ஆராதிக்க வேண்டும் என்று அறிந்து கொள்ள உங்களுக்கு இந்நூல் துணை செய்யும்.*

**விலை: ரூபாய் 12/**

இந்தியாவில் இந்நூலைப் பெற்றுக்கொள்ள எழுத வேண்டிய முகவரி:

சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள்
22 டி. பி. கே. மெயின் வீதி, மதுரை 625004
தொலைபேசி எண்: (452) 5505810

# வாசகர் கண்ணோட்டம் (1)

- '*பரிசுத்த வேதாகமம்*'

நீங்கள் வெளியிட்டுள்ள பரிசுத்த வேதாகமம் என்ற நூலுக்காக கர்த்தரைத் துதிக்கிறேன். தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை விளங்கிக்கொள்ளக் கூடிய இலகுவான வழிகாட்டி நூலாக இதனை எழுதியிருந்தீர்கள். இதில் கையாளப்பட்டுள்ள சொற்பிரயோகம், மொழிநடை என்பன நன்றாக இருந்தன. இதிலும் புத்தகத்தை ஒரு கேள்வியுடன் ஆரம்பித்திருப்பது வாசிக்கும் ஆர்வத்தைத் தூண்டுவதாக இருந்தது. இன்றைய காலகட்டத்தில் இப்படிப்பட்ட ஆவிக்குரிய நூல்கள் நம்மத்தியில் இல்லாதது கவலை தருகிறது. ஏனெனில், இன்று திருச்சபையிலும், தனிப்பட்ட மனித வாழ்க்கையிலும் போலித்தனமான சத்தியங்கள் அலைமோதுவதைக் காண்கிறோம். வேதத்தில் ஒருசில பகுதிகளையும், சத்தியங்களை மட்டும் அறிந்து கொண்டிருந்தால் போதுமானது என்று பல ஊழியர்களும், விசுவாசிகளும் இன்று தவறாக எண்ணிக் கொண்டிருக்கிறார்கள். இந்நூல் வேதத்தின் ஒவ்வொரு நூலையும், சத்தியத்தையும், வார்த்தையையும் ஆராய்ந்து, உணர்ந்து படிக்கும்படியாக எம்மை உற்சாகப்படுத்துகிறது. மொத்தத்தில் பரிசுத்த வேதாகமத்தை தேவனே எங்களுக்கு ஆவியானவர் ஊடாக அருளினார் என்ற நம்பிக்கையை ஊட்டுவதாக இந்நூல் அமைகிறது.

தற்போதைய சூழ்நிலையில் தனிப்பட்ட விசுவாச வாழ்க்கையிலும், குடும்ப வாழ்க்கை யிலும், சபை வாழ்க்கையிலும் நாம் பின்பற்ற வேண்டிய காரியங்கள் யாவை என்றும், அவற்றை எவ்வாறு நடைமுறையில் செயலாக்க வேண்டுமென்பதையும், வேதாகமத்தில் ஆராய்ந்து பார்க்க பரிசுத்த வேதாகமம் என்ற இந்நூல் அளப்பரிய சேவை செய்கிறது. மேலும் போலியான சத்தியங்கள், போலியான வேதவிளக்கங்கள், தவறான வேதப்புரட்டுக்கள் என்பவற்றை இனங்கண்டு அவற்றிலிருந்து எம்மைப் பாதுகாத்துக்கொள்ளவும், ஆவிக்குரிய வாழ்க்கையில் முன்னேறவும் இந்நூல் எம்மை ஊக்குவிக்கிறது.

தேவனுடைய பரிசுத்த வேதாகமத்தை எவ்வாறு படிக்க வேண்டும் என்றும் அதை எவ்வாறு விளங்கிக்கொள்ள வேண்டும் என்றும் இந்நூலில் விளக்கப்பட்டுள்ள எளிய நடைமுறை விளக்கங்கள் திருச்சபை மக்களுக்கு மிகவும் பிரயோஜனமாக இருக்கும். பரிசுத்த வேதாகமத்தின் தன்மை, கர்த்தரின் அதிகாரம், கர்த்தரின் குணாதிசயங்கள், அவருடைய மாறாத்தன்மை, கிருபை, அன்பு, சர்வ வல்லமை, மேலும் மனிதர்களுக்கான நித்திய ஜீவன் ஆகிய சத்தியங்களையும் வேதத்தில் இருந்து தெளிவாக அறிந்துகொள்ள இந்நூல் துணை செய்கிறது.

இந்நூல் எங்கள் சபை மக்களுக்கு கிடைக்கக்கூடியதாயிருப்பது மிகவும் சந்தோஷத்திற் குரிய காரியமாகும். இத்தகைய நூல்கள் எங்களுடைய மக்களின் வேத அறிவை வளர்க்கும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. இத்தகைய ஆவிக்குரிய நூல்களைக் கட்டாயமாகத் தொடர்ந்து வெளியிட்டு நாங்கள் வேத அறிவில் வளர நீங்கள் உழைப்பதற்காக நாம் நிச்சயம் தொடர்ந்து ஜெபிப்போம். வேதத்திற்கு ஒத்த விசுவாச விளக்கங்களைக் கொடுக்கின்ற நூல்களை பெற்றுப்படிப்பதில் நாம் மிகுந்த ஆவலோடு இருக்கிறோம்.

- எஸ். ஜெயகாந்த், போதகர், ஸ்ரீ லங்கா

('பரிசுத்த வேதாகமம்' என்ற தலைப்பில் வேதாகமத்தின் மெய்த்தன்மையை விளக்கும் நூல் 2002ல் வெளியிடப்பட்டது.)

# வாசகர் கண்ணோட்டம் (2)

## - '1689 விசுவாச அறிக்கை'

1689 விசுவாச அறிக்கை என்ற நூல் எங்களுக்குக் கிடைத்தது. இது கர்த்தர் செய்த அரிய காரியம். அதை நீங்கள் தமிழில் எங்களுக்குத் தந்தது அதைவிடப் பெரிய கர்த்தரின் கொடை.

1689 விசுவாச அறிக்கையினூடாக நாங்கள் எதை விசுவாசிக்க வேண்டும் என்றும், ஏன் அதை விசுவாசிக்க வேண்டும் என்றும் கிரமமாக விளக்கியிருக்கபடியால் அதை வெளியிட்டதற்காக சபையாக எங்களுடைய ஆழ்ந்த நன்றியை உங்களுக்கு தெரிவித்துக் கொள்கிறோம்.

இந்த விசுவாச அறிக்கையைப் பற்றி இன்று அனேகர் தெரிந்து கொண்டிராதபடியாலும், அதைப் பின்பற்றாதபடியாலுமே நாம் எதை விசுவாசிக்க வேண்டும், எவ்வாறு ஊழியம் செய்ய வேண்டும் என்பவற்றையும், சபை அமைப்பு, சபை சட்ட திட்டங்கள் போன்றவற்றின் அவசியத்தையும், அறியாமல் தேவனுடைய சித்தத்திற்கு விரோதமாக செயல்பட்டு வருகின்றனர்.

விசுவாச அறிக்கையின்படி சபை அமைப்பு இல்லாமலும், ஒரு நிலையான கொள்கைப் பிடிப்பு இல்லாமலும் இன்றைய காலகட்டத்தில் புதுப்புது ஸ்தாபனங்களும், அற்புத அடையாளங்களை மட்டும் நம்பும் ஊழியங்களும் திருச்சபைக்கு மதிப்புக் கொடுக்காமல் பெருகிக் கொண்டிருக்கின்றன. அத்துடன் வேதரீதியிலான விசுவாச அறிக்கைக்கு தம்மை ஒப்புக்கொடுக்காத சபைகள் மத்தியில் புதுப்புது வேதக் கோட்பாடுகளும், வேத விளக்கங்களும், ஆத்துமாக்களுக்கு இஷ்டமான ஆராதனை முறைகளும் மலிந்து காணப்படுகின்றன.

எம்மைப் போல சீர்திருத்த விசுவாசத்தைக் கொண்டு இயங்கி வருகின்ற சபைகள் தேவனைக் கிட்டிச்சேர விசுவாச அறிக்கை பேருதவி புரிகின்றது. எங்களுடைய சபை மக்களுக்கும், எங்களைப்போல ஒத்த கருத்துள்ள திருச்சபைகளுக்கும் நாங்கள் எதை விசுவாசிக்கிறோம் என்பதைத் திட்டவட்டமாக உணர்ந்து ஊழியம் செய்ய 1689 விசுவாச அறிக்கை ஆசீர்வாதமாக இருந்து வருகின்றது.

- எஸ். ஜெயகாந்த், போதகர், ஸ்ரீ லங்கா

*பரிசுத்த வேதாகமம், 1689 விசுவாச அறிக்கை ஆகிய நூல்களை நீங்கள் இதுவரை பெற்றுக்கொண்டிராவிட்டால் கீழ் வரும் முகவரிகளுக்கு எழுதி விலை விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.*

*தமிழ்நாட்டில்:*

*சீர்திருத்த பாப்திஸ்து வெளியீடுகள், எண். 22 டி. பி. கே. மெயின் வீதி, பைகாரா, மதுரை 625004.*

*ஸ்ரீ லங்காவில்:*

*டியாகிறைசிஸ் புக் சர்விஸ், 19 இராஜசிங்க வீதி, கொழும்பு 6.*

# எண்ணங்கள்

உங்களுடைய வெளியீடான 'ஏன் பிரசங்கம்!', 250 பிரதிகளை வாங்கி எனக்குத் தெரிந்த அனேக ஊழியர்களுக்கு அனுப்பி வைத்தேன். நூல் பயனுள்ளதாகவும், ஆசீர்வாத மாகவும் இருந்ததாக சிலர் எழுதி யிருக்கிறார்கள். கடந்த இதழில் நீங்கள் 'ஊழியம் குடும்பச் சொத்தாகலாமா?' என்ற தலைப்பில் எழுதியிருந்த ஆக்கத்திற்கும், பிரசங்கம் தயாரித்தலின் இரண்டாவது பகுதிக்கும் எனது நன்றி. இவற்றை எழுத உங்களை ஊக்குவித்த தேவனுக்காக நன்றி கூறுகிறேன். தமிழகத்திற்கு இன்று மிகவும் அவசியம், தேவையான தலைப்புகள் இவை. ஊழியத்தை மரியாதைக்குரிய வர்த்தகமாக நடத்துகிறவர்கள் பெருகி வருகிற இக்காலத்தில் அவர்களுக்கு எச்சரிக்கையாகவும், ஏனையோரை சிந்திக்க வைப்பதாகவும் இந்த ஆக்கங்கள் அமைந்துள்ளன. பிரசங்கம் தயாரித்தல் பற்றி மேலும் பல நல்ல ஆக்கங்களை எழுதி முடிவில் அவற்றைத் தொகுத்து நூலாக வெளியிடுமாறு கேட்டுக் கொள்கிறேன். இந்தக் காரியத்தில் கர்த்தர் உங்களுக்கு ஞானத்தைக் கொடுத்து வழிநடத்துவாராக. 1 கொரிந்தியர் 11-14 வரையுள்ள பகுதிகளுக்கு பத்திரிகையில் நீங்கள் தந்த விளக்கங்களையும் விரைவில் நூலாகப் பலரும் பயனடையுமாறு தவறாது வெளியிடுமாறும் கேட்டுக்கொள்கிறேன்.
*- என். ஜோன் ஜெயானந்தம், சென்னை, தமிழ் நாடு*

இன்டர்நெட்டில் தற்செயலாக உங்களுடைய இணைய தளத்தைப் பார்க்க நேர்ந்தது. அதில் அனேக ஆக்கங்களையும், திருமறைத்தீபம் பத்திரிகையையும் கண்டு ஆனந்தமடைந்தேன். முடிந்தளவுக்கு எல்லா ஆக்கங்களையும் பிரதி எடுத்து கவனத்தோடு வாசித்து வருகிறேன். ஒவ்வொரு ஆக்கமும் என்னுடைய கண்களைத்திறந்து தவறாகப் போய்க் கொண்டிருக்கும் என்னுடைய ஆத்மீக வாழ்க்கைப் பாதையைப் படம் பிடித்துக் காட்டின. பெந்தகொஸ்தேகாரார்களாகிய நாங்கள் குருடர்களாக, ஆத்மீக அறிவின்றி பல தவறான காரியங்களை நம்பிப் பின்பற்றி வருவதை என்னால் உணர முடிந்தது. நான் ரோமன் கத்தோலிக்க மதத்திலிருந்து விலகி பெந்தகொஸ்தே சபையில் இருந்து சுவிசேஷ பணி புரிந்து வருகிறேன். தயவு செய்து எனக்கு திருமறைத்தீபத்தை தொடர்ச்சியாக அனுப்பி வையுங்கள். உங்கள் ஆலோசனைகளும், வழிகாட்டுதலும் எனக்கு அவசியம் தேவை. *- டேவிட், தமிழ் நாடு (இது ஆங்கிலத்தில் அனுப்பப்பட்ட இமெயிலின் மொழி பெயர்ப்பு)*

சமீபத்தில்தான் நான் வேதாகமக் கல்லூரிப் படிப்பை முடித்தேன். என்னுடைய பாஸ்டரிடமிருந்து திருமறைத்தீபத்தைப் பெற்று வாசித்தேன். என்னைப் போன்ற இளம் ஊழியர்களுக்கு மிகுந்த பிரயோஜனமான புத்தகம். சுவிசேஷ ஊழியத்தைக்குறித்து நீங்கள் எழுதிய ஆக்கம் நான் ஊழியத்தில் தவறு செயதுவிடாமல் இருக்க ஒரு நல்ல வழிகாட்டியாக இருக்கும். உங்கள் புத்தகத்தைப் படித்தால் படிக்காதவர்கள் கூட பிரசங்கியாகி விடலாம். பிரசங்க ஊழியத்தில் தவிர்க்க வேண்டிய அனேக காரியங்களைக் கற்றுக்கொண்டேன். சபை வரலாறு, அப்போஸ்தலர்கள், ஊழிய ஒழுங்கு போன்ற அனைத்து ஆக்கங்களும் தெரிந்து கொள்ள வேண்டிய பயனுள்ள ஆக்கங்கள். திருமறைத்தீபத்தை வாசிக்கும் ஊழியக்காரார்கள் நல்ல வளர்ச்சி அடைய முடியும். 'சிந்தனை வளர' என்ற ஆக்கத்தைப் படித்த பிறகு எனக்கு அதிகம் புத்தகம் படிக்கும் ஆவல் ஏற்பட்டிருக் கிறது. உங்களுக்காக தவறாமல் ஜெபிக்கிறேன். தொடர்ந்து திருமறைத் தீபத்தை அனுப்பி வையுங்கள். - ஜான் பிரபு, தமிழ் நாடு

வேதரீதியிலான சீர்திருத்த போதனைகளைப் பற்றி அறிந்து கொள்ள ஆர்வமாயிருக்கிறீர்களா? உடனடியாக கீழ்வரும் நூல்களைத் தவறாது வாங்கி வாசியுங்கள். அவை நிச்சயம் உங்கள் கண்களைத் திறக்கும்; இதுவரை அறிந்திராத சத்தியங்களை வெளிப்படுத்தும்; ஆத்மீக உணவளித்து உங்களை உற்சாகப்படுத்தும்.

## 1689 விசுவாச அறிக்கை

## சிறுவர்களுக்கான வேத உபதேசம்

## பரிசுத்த வேதாகமம்

## சீர்திருத்த விசுவாசம்
(ஜனவரி 03)

## ஏன் பிரசங்கம்!
(ஜுலை 03)

இந்தியாவில் இருப்பவர்கள் இந்நூல்களுக்கான விலை விபரங்களுக்கும், நமது ஏனைய வெளியீடுகளைப் பெற்றுக் கொள்ளவும் கீழ்வரும் தமிழக முகவரிக்கு எழுதவும்.

*Reformed Baptist Publications*
*22 T. P. K. Main Road*
*Pykara, Madurai 625004, Tamil Nadu, S. India*
*Phone: (452) 5505810*

ஸ்ரீ லங்கா வாசகர்கள் இந்நூல்களுக்கான விலை விபரங்களையும் நமது ஏனைய வெளியீடுகளையும் கீழ்வரும் முகவரியில் இருந்து பெற்றுக் கொள்ளலாம்.

*Diakrisis Book Service*
*19 Rajasinghe Road, Colombo 6, Sri Lanka*

மலர் 10 | ஜனவரி - மார்ச் 2004 | இதழ் 1

1. பெந்தகொஸ்தே நாளின் முக்கியத்துவம்

2. "டிஸ்பென்சேஷனலிசம்"
 - தோற்றமும், வளர்ச்சியும்

3. பிரசங்கம் தயாரித்தல் (3)

4. உலகத்தில் அன்புகூராதிருங்கள் (3)

5. மத்திய கால ஆரம்பம் (திருச்சபை வரலாறு)

6. கிறிஸ்தவ கோட்பாடுகள்

7. வாசகர் கண்ணோட்டம் (2)

8. வாசகர் கண்ணோட்டம் (2)

9. எண்ணங்கள்!